காவேரி

கர-தை

JANUARY 1952

8 அண

28/1.52
2278
8 FEB 1952
Ack-Tmai
N41KU
52.11.6
19933

மையாகக்'' கொண்ட

மோட்டார் சவாரியில்

ஒரு புது வகையை

ஸ்தாபித்துள்ளது.

★

ஆரம்ப வருடங்கள் முழுவதிலும் மாரிஸ், மோட்டார் சவாரியில் சிக்கனத்தையே பிரா பல்யமாக்கி வந்தபோதிலும் கூடவே நம்பகத் தன்மையிலும் தரத்தை விருத்தி செய்தே வந்தனர். விலையைவிட தரமே முக்கியம் என்று இப்பொழுது உலகமெங்கும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மாரிஸ் சிக்கனமான கார்கள் என்பது பிரசித்தம். எனினும் அவற்றின் தரத்திற்கே எப்பொழுதும் அதிக மதிப்பு. சமீபத்திய உற்பத்திகளில் இந்த மாரிஸ் கொள்கைகளின் விஸ்தரிபபைக் காணலாம்.



"தன்மையில் முதன்மையான" மாரிஸ் மைனர்

அடிஸன் & கம்பெனி லிமிடெட்,

மதராஸ் – பெங்களூர் – கோயமுத்தூர்

மற்றும் விற்பனை & ஸர்விஸ் வசதியுள்ள ஜில்லா வியாபாரிகள்.

இப்பொழுது நடைபெறுகிறது



தாயின்
தியாகத்தை
விளக்கும்
திரைச்சித்திரம்

அஸோஸியேடட் ப்ரொடக்ஷன்ஸாரின்

அம்மா

லலிதா
பி. எஸ். ஸரோஜா
சாந்தகுமாரி
திக்குரிச்சி
M. N. நம்பியார்
துரைராஜ்
டி. பாலசுப்ரமணியம்

மற்றும் பலர் நடித்தது

டைரக்ஷன்
K. வேம்பு

ஸ்டுடியோ... வாஹினி

அஸோஸியேடட் ப்ரொடக்ஷன்ஸ்
11, கோபாலகிருஷ்ண ரோட் — தியாகராய நகர் சென்னை-17

நீங்கள் இன்று உங்கள் பற்களை **மக்ளீன்**

செய்தீர்களா?

ஆம்! தினமும் அவள் இருதடவை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகிக்கிருள். அவள் பற்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன பாருங்கள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்களுக்கும் கூட வசீகரமான புன்னகையையும், வெண்மையான பற்களையும், இனிய சுவாசத்தையும் அளிக்கக் கூடியது. மக்ளீன் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்கள் ஈறுகளுக்கு வலுவளித்து அபாயகரமான புளிப்பு நீர்களை வாயிலிருந்து அகற்றி பற்களை வெண்ணிறமாக்கி, சொத்தை பிடிக்காமல் தடுக்கிறது— எல்லாம் ஒரே சமயத்தில் தான்.

சிறந்த பற்பசைதான் உங்கள் பற்களுக்கு நல்லது. எனவே இன்றே மக்ளீன்ஸ் உபயோகிக்கத் துவகுங்கள்.

இன்றே **மக்ளீன்ஸ்** வாங்குக!



MTY-2 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.



ஆனந்த வாழ்க்கை

திருப்தி மிளிர்கிறது அவர் முகத்தில். அவள் கையால் ஆசையுடன் போட்டுக் கொடுத்த அந்த ஒரு டம்பிளர் 'டீ'யைக் குடித்தார். நாள் முழுவதும் ஆபீஸில் உழைத்த அவர் களைப்பு பறந்தோடி விட்டது. உற்சாகம் அடைகிறார். இனி மனைவியுடன் சரச சல்லாபம், குழந்தைகளுடன் விளையாட்டு. ஆனந்த வாழ்க்கைக்கு வேறு என்ன வேண்டும்?

தினம் கணவன் வீடு திரும்புதலை அவள் ஆவலுடன் மட்டுமல்லது முன் யோசனையுடன் ஒரு டம்பிளர் 'டீ'யுடன் எதிர்பார்க்கிறாள்.

உற்சாகமளிக்கும் 'டீ' போடுவது எவ்வளவு சுலபம்! செலவுக்கு செலவும் குறைவு; நொடிப்பொழுதிலே தயாரித்து விடலாம். நல்ல 'டீ'யை தினம் ரஸித்துக் குடியுங்கள்.

மந்திர சக்தியுள்ள 'டீ'யைக் குடியுங்கள்.

ஸெண்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது. C.T.B. 68

ஜண்டு பாலாமிருதம்

வலுவற்ற குழந்தைகளுக்கும், மெலிந்த திரேகிகட்கும் மேலான ஔஷதம். தேகத்திற்கு புஷ்டியைத் தரும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைத் தரும். 4 அவுன்ஸ் புட்டி 1-4-0

கீழ்க் கண்ட ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

கும்பகோணம் : பிரிமியர் மெடிகல் ஸ்டோர்ஸ் லிமிடெட், கடைத்தெரு, தி பார்மஸி, மடத்துதெரு.

காரைக்குடி: இந்திரா மெடிகல் ஹால்

தஞ்சை : P. V. முத்துகிருஷ்ணராஜா சன், அய்யங்கடைத் தெருவு.

திருச்சி : விநாயகர் மெடிகல் ஹால். தெப்பக்குளம்

மதுரை: N. R. சாமி அண்டு கோ.

மாயவரம் : பிரிமியர் மெடிகல் ஹால்.

சிதம்பரம் : நடராஜா டிஸ்பென்சரி,

கடலூர் : ஸ்ரீ ராம் பார்மஸி, புதுப்பாளயம்.

வியாபார நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும் கீழேகண்ட விலாசத்திற்கு எழுதவும்,

சென்னை ராஜதானி ஏஜண்டுகள் :

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

அவளுக்குத் தெரிந்திருந்தால்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட். மதராஸ். 17.

சீக்கிரமாக மலிவாக வேலையை முடிக்க



மண்வாரிகள்:
மூன்றுவித நினுசுகளில் பக்குவப்படுத்தப்பட்ட மரப்பிடிகள் பொருத்தப்பட்டவை. சீரான அமைப்புள்ளதால் வேலை செய்ய இலகுவாக இருக்கின்றன. ஆழமான அலகு வாய்ந்திருப்பதால் அதிகமான சாமான்களை தூக்க முடிகிறது.



சுத்திகள்:
செம்மட்டிகள் பலவித பரிமாணங்களில். மேலும் கல் உடைக்கும் சுத்திகள், ஆணி அடிக்கும் சுத்திகள், சாவி திறக்கும் சுத்திகளும் கிடைக்கின்றன. விசேஷமாக உஷ்ணமளிக்கப்பட்ட எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டவை.



கோடாரிகள், செம்மட்டிகள்:
நான்குவித அடிப்படையான நினுசுகளில், ரஸ்தாக்களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்பவர்களால் விரும்பப்படுகின்றன. விசேஷமாக உறுதியாக்கப்பட்ட, கூராக வெட்டும் முனைகள் வேலையை இலகுவாக்குகின்றன.

உறுதியான, நீடித்துழைக்கும்

டாடா அக்ரிகோ கருவிகளை

உபயோகியுங்கள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிட்.
ஸேல்ஸ் ஆபீஸ்; 23-B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
பிரான்சுகள் : பம்பாய், மதருஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், ஸெகிந்திராபாத், விஜயநகரம் கன்டோன்மென்ட், ஜலந்தர் கன்டோன்மென்ட்.


வெகுநாள் நீடித்து இருப்பதற்காக
ஏஸிஸி
சிமெண்டால் கட்டப்பட்டது
பம்பாய் கவர்மெண்டாரின்
அரோயிலுள்ள பால் காலனி
★
சிமெண்டுகளின் உபயோக
ங்களையும் அவைகளை எப்
படி பூசுவது என்கிற விஷ
யங்களைப்பற்றி கான்கிரீட்
அஸோஸியேஷன் ஆப் இந்
தியா, 9, மௌண்டு ரோடு,
மதராஸிலிருந்து இசவசமா
க ஆலோசனைகள் கேட்டுந்
தெரிந்து கொள்ளலாம்.
தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்
இவர்களின் வியாபார மானேஜர்கள்
தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்
SISTA'S-CMI 46-Tamil



பாவம் அந்தப் பெண்
மலேரியாவினால் என்ன
கஷ்டப்படுகிறாள்

'பாலுட்ரின்'
அந்தத் தொல்லையினின்றும்
என்னைப் பாதுகாத்துவருகிறது

எலும்பையே நொறுக்குவது போன்ற தினசரி குடும்ப வேலைகளுக்கு மேல் மலேரியா வேறு. பாவம் அந்தப் பெண் மெலிந்து வெறும் நிழல்போல ஆகிவிட்டாள். அந்த சாதுப்பெண் அதைப்பற்றி என்னதான் செய்கிறாளோ கடவுளுக்குத்தான் தெரியும். எப்போது பார்த்தாலும் அவள் நோய், நோய், நோய் என்று நோயினால் நொறுங்குகிறதைத்தான் நாங்கள் காண்கிறோம். ஆனால் தினமும ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் அவள் சுலபமாக குணமடையலாம். அவளது உதாரணம் என்னை உஷார்ப்படுத்திவிட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை சாப்பிடுவதை நான் வழக்கமாக ஆக்கிக் கொண்டுவிட்டேன். என் குடும்பத்திலே மற்றவர்களும் இதைப் பின்பற்றுமாறு செய்து வருகிறேன். ஆகையினால் மலேரியா எனது வாசற்படிகளை அணுகுவது இல்லை.

பாலுட்ரின்* டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

அணுவுக்கு ஒடு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P 139 TF



குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent T. T. KRISHNAMACHARI & Co. 12 A, Lingha Chetty Street, G. T. MADRAS.



காவேரி

பொருளடக்கம்

கர மலர் 11	தை இதழ் 6

டில்லித் தபால் 11
கே. ஸ்ரீநிவாஸன்

ஷேக் மகம்மது அப்துல்லா 15
கே. ஸ்ரீ.

முனியோதரன் பொங்கல் 17
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

பறிக்காத ரோஜா 25
ஆர். சுப்பிரமணியன்

கூற்றுவனின் கலங்கள் 34
நா. கி. நாகராஜன்

கர்நாடக ஸங்கீதம் 37
சபரி

எனது மலாய்நாட்டுப் பிரயாணம் 41
ரங்க ராமானுஜ அய்யங்கார்

எழிற் கன்னி 46
சுகி

நிவேதனம் 51
தி. ப. பத்மநாபன்

விடைக்காலச் சாபம் 57
க. சந்தானம்

புத்தக விமர்சனம் 63

எது இன்பம்? (தொடர் கதை) 67
வே. ரங்கராஜன்

நவீன ஒளஷதங்கள் 71
என். அனந்தவைத்யநாதன்

ஸ்ரீ ஸ்துதி 79
ஏ. கே. ராகவாச்சாரியார்

குறிப்பு: 'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள், அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



ARMSTRONG
THE BETTER BICYCLE

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199331
சென்னை

ஆம்ஸ்டிராங்
சிறந்த பைஸைகிள்



சிறந்த பைஸைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்தமாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டைபோலச் சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். ஸைகிள் தொழிலில் பிர்சித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைஸைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.

விநியோகஸ்தர்கள் :

ராயல் ஸைகிள் அண்டு மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
THE BETTER BICYCLE
ARMSTRONG CYCLES LTD
BIRMINGHAM

காவேரி

கர வருஷ மலர் 11	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	தை இதழ் 6

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

எப்பொழுதுமே இங்கு ராஜீய வட்டாரங்களில் "தென்னாட்டைப் பார்" என்று எந்தத் துறையிலும் சுட்டிக்காட்டுவது வழக்கம். காரணம், எவ்வளவுதான் நம் மாகாண அரசியல் நிபுணர்கள் வகுப்புவாதக் குட்டையைக் கலக்கி, அதில் குதித்து உழன்றாலும் நம் மாகாணத்தவர்கள் மிகவும் படித்தவர்கள், விவேகிகள் என்பது பகிரங்கம். ஆனால் இன்றுவரை நம் மாகாணத்திலும் திருவாங்கூர்—கொச்சியிலும் வெளிவந்திருக்கும் தேர்தல் முடிவுகள் இங்கு யாவரையும் பிரமிக்க வைத்திருக்கின்றன.

தேர்தல்கள் இந்தியாவெங்கும் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிட்டபின்னரும் அநேகமாக எல்லா மாகாண சட்ட சபைகளிலும் பார்லிமெண்டிலும் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைக்கும் என்பது பற்றி அபிப்பிராயபேதமே கிடையாது. ஆனால் ஏப்ரல் மாதம் இந்தியா எப்படி இருக்கும் என்றால் திருவாங்கூர்-கொச்சியில் காங்கிரஸ் சர்க்கார் அமைக்க முடிந்தால், அந்தச் சர்க்கார் விழி பிதுங்கி முழிக்கும். சென்னையில் "நீங்கள் என்ன கதறினாலும் அக்கரையில்லை" என்ற சர்க்கார் மனப்பான்மை மாறி எதிர்ப்புக்கு மரியாதை வைக்கவேண்டி வரும். கனம் கோபால ரெட்டியை அதிகம் முன்பின் தெரியாத கிஸான்-மஸ்தூர் கக்ஷி அபேக்ஷகர் தோற்கடித்தது ஸ்ரீ கோபால ரெட்டியின் வாய்க் கொழுப்பாலேயே என்று இங்கு அறிந்த வட்டாரங்களில் கருதுகிறார்கள். மேலும் மேலும் வரி விதித்த ஸ்ரீ ரெட்டி "உங்கள் நலம் எங்களுக்குக்கல்லவா தெரியும்? நீங்கள் ஏன் கூச்சல் போடுகிறீர்கள்" என்றதும் "சென்னையில் போதிய பஸ்கள் இல்லாவிட்டால் ஜனங்கள் கஷ்டப்படுவானேன்? நடந்து செல்வதுதானே" என்றதும் ஜனங்களுக்கு மிகவும் ஞாபகம் இருந்திருக்கிறது என்பது இங்கு ஏகோபித்த அபிப்பிராயம். இருந்தும் சர்க்கார் தரப்பில் நன்றாகப் பேசி, சட்டசபையைச் சோபிக்கச் செய்த ஸ்ரீ ரெட்டி மிகவும் நல்லவர், ஆகவே அவர் அரசியல் கிரகணம் மிகவும் வருந்தத் தக்கது.

* * *

ஸ்ரீ ஜவாஹர்லால் நேருதான் காங்கிரஸ் என்பதை அவருடைய சண்டமாருத வேகச் சுற்றுப்பிரயாணம் நிரூபித்துவிட்டது. ஒரு மாதத்திற்குள் பல்லாயிரம் மைல்கள் சுற்றி, சுமார் இரண்டு கோடி ஜனங்களைத் தம் பேச்சினால் கவர்ந்த நேருஜி, எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் சர்க்கார் அமைப்பதற்கு வேண்டிய மெஜாரிட்டி ஸ்தானங்களை ஊர்ஜிதம் செய்துவிட்டார். பாக்கி சமயங்களிலும் நேருஜியுடன் போர் தொடுத்த டண்டன் — படேல் — மொரார்ஜி குழுவினர் எல்லாரும் பேசாமடந்தைகளாகி இருக்கின்றனர்.

* * *

இதுவரை நடந்துள்ள தேர்தல்களில் காங்கிரஸைவிட அதை எதிர்த்த கக்ஷிகள் அதிக வோட்டுகள் பெற்றிருக்கின்றன. குறிப்பாக ஸோஷலிஸ்ட்கள் கம்யூனிஸ்ட்களுடன் எவ்வித ஒப்பந்தமும் வைத்துக் கொள்ளமாட்டோம் என்ற பிடிவாதத்தினால் எங்கெல்லாம் இடதுசாரிகள் ஜயித்திருக்கலாமோ அங்கெல்லாம் வோட்டுகள் பிரிதுந்

சென்று காங்கிரஸ் ஜயித்திருக்கிறது, பம்பாயை ஸோஷலிஸ்ட் கோட்டை என்று சொல்வதுண்டு. அங்கும் இந்த வோட்டுப் பிரிவினுல் 30 ஸ்தானங்களில் ஸோஷலிஸ்ட்களுக்கு மூன்றே ஸ்தானங்கள் கிட்டியிருக்கின்றன.

ஆனுல் குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. பம்பாயில் தென்னுட்டினர் சங்கியை மூன்று லக்ஷத்துக்கு மேல் உள்ளது. அவர்களுடைய பிரத்தியேக கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனிக்க ஒரு பிரதிநிதி வேண்டும் எனறு பிரபல பத்திரிகையாளரான ஸ்ரீசாலிவட்டீசுவரன் அவர்களைக் காங்கிரஸ் பொறுக்கியது, ஸ்ரீ சாலிவட்டிக்கும் வெற்றி கிட்டிவிட்டது.

பம்பாயில் தென்னிந்தியர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிருர்களோ அதில் குறைந்த பக்ஷம் மூன்றில் ஒருபங்கு பேர்கள் டில்லியில் இருக்கிருர்கள். ஆனுல் இங்குள்ளவர்களுக்கு மத்திய ஸ்தாபனமான எந்தவித சங்கமும் இல்லாததால் யாவரும் நெல்லிக்காய் மூட்டை சிதறியதுபோல் பலபல கும்பல்களாகப் பல்வேறு இடங்களில் வசிக்கிருர்கள். தென்னிந்தியர் கிளப் என்ற ஸ்தாபனம் ஒன்று இருந்தும் அது அத்தியாவசியமான காரியங்களில்கூட ஈடுபடுவதில்லை. இது விஷயம் நான் சில காங்கிரஸ் உள்படபல கட்சித் தலைவர்களைக் கண்டு பேசியபொழுது அவர்கள் டில்லி சட்ட சபைக்கு ஒரு தென்னிந்தியப் பிரதிநிதி வருவதற்குத் தாங்கள் எல்லா உதவியும் செய்வதாகச் சொன்னுர்கள். ஆனுல் தென்னிந்திய சமூகத்தில் யாரும் பொறுப்பெடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. தென்னிந்தியர்களிடையே இவ்வளவு இருக்கும் அசிரத்தை இந்த ஊரைப் பஞ்சாபிகள் தங்கள் மாகாணமாக்கும் முயற்சிக்கு எதிர்மாருக இருக்கிறது.

* * *

சென்ற வருஷத்திற்கும் இந்த வருஷத்திற்கும் மிகவும் வித்திமாசம் உண்டு பல வகைகளில். அவைகளில் ஒன்று சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரியின் திட்டப்படி குடும்பம் பெருக்குவது பற்றிய அபிப்பிராயம். நம் மந்திரிகள் எந்த விஷயத்தையும் தீரயோசித்துத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டதில்லை. அவர்களில் இந்தக் குற்றச்சாட்டுக்கு மிகவும் இலக்கானவர் ஸ்ரீ அமிர்தகௌரி. சென்ற வருடம் பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் ஸ்ரீ அமிர்தகௌரி இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டுவர முடியாது என்ருர். காரணம், இந்தியா பிற்போக்கான நாடாம். பெரும்பாலான ஜனங்களுக்கு மிகவும் எளிய சுகாதாரமே புரியாதபொழுது தேக சரீரம் சம்பந்தப்பட்ட எந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறையையும் இந்தியாவில் புகுத்த முடியாதாம்.

ஆனுல் திட்டமிடும் கமிஷன் இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்று முடிவு செய்தபொழுது ஸ்ரீ அமிர்தகௌரி தம் அபிப்பிராயங்களை வாடஸ் வாங்க நேர்ந்தது. அதுவும் பண்டித நேரு தம் அபிப்பிராயத்தைத் திடமாக வெளியிட்ட பிறகு அவருக்குத் தம் அபிப்பிராயத்தை எப்படி சுதாரிக்க முடியும்?

ஸ்ரீநேரு தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தபொழுது குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்துக்கு ஒரு பெரிய உதவியைச் சில வார்த்தைகள் மூலமே சாதித்தார். "சிலர் கர்ப்பத் தடை போன்ற மற்றும் அசிங்கம் தொனிக்கும் வார்த்தைகளால் இந்த நல்ல இயக்கத்துக்குத் தீங்கு விளைவிக்கிருர்கள். இந்தியாவில் ஜனத்தொகை மாத்திரம் மிகவும் திடுக்கிடும் வேகத்தில் அதிகரித்துக்கொண்டு வருகிறது. சதிபதிகள் வாழ்க்கையில் கர்ப்பம் தட்டுவது சகஜம். அதற்காக அவர்கள் சேர்ந்தே இருக்காமல் இருக்கமுடியுமா? ஆகவே ஒவ்வொரு குடும்பத்துக்கும் சந்ததிகளைக் கட்டுப்படுத்தும் மார்க்கம் தெரிய வேண்டும். இதுவே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்" என்ருர் நேருஜி.

இவ்விதம் அவர் அப்பட்டமாக இந்த விஷயத்தை விளக்கிய பிறகு "நெருப்பு என்ருல் நாக்குச் சுட்டுவிடும்" என்ற மனப்பான்மை அகன்றதுடன் இதுபற்றிப் பொதுக் கூட்டங்களில் வாதிக்கப்பட்டது. தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரை இதுபற்றி என்ன அபிப்பிராயம் என்று தெரிய ஒரு கோஷ்டி விசாரணை செய்தது. அதன் முடிவு என்னவென்ருல் தொழிலாளர்களும் தாங்கள் வெகு சில குழந்தைகளைப் பெற்று அவர்களை நன்ருக வளர்க்க விரும்பினுர்கள் என்றும் ஆனுல் குடும்ப விருத்தியை கட்டுப்படுத்தத் தங்களுக்கு மார்க்கம் தெரியவில்லை என்று சொன்னதாகவும் தெரியவந்தது.

இது சம்பந்தமாக ஜனங்களுக்கு ஆலோசனை கூறத்தான் இந்திய சர்க்கார் அமெரிக்க

பிரபல குடும்பக் கட்டுப்பாட்டு நிபுணரான டாக்டர் ஆபிரகாம் ஸ்டோனை வரவழைத்துள்ளனர். டாக்டர் ஸ்டோன் உலகம் பூராவுமே இது சம்பந்தமாக இயக்கம் இருக்கிறது என்றும் ஆனால் இது பற்றி இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஸ்காண்டிநேவியன் நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் போதிய அறிவும் சகாயமும் இல்லை என்றும் அறிவிக்கிறார். அவர் அபிப்பிராயத்தில் உலகம் பூராவுமே நாட்டு வளம் வரவரக் குன்றி மனித உற்பத்தி வளம் பெருகுகிறதாம். இதைத் தடுத்து இரு வளமும் சரியான விகிதாசாரத்தில் செல்லும்படி செய்வது சர்க்கார்களின் கடமை என்றார் ஸ்ரீ ஸ்டோன்.

டாக்டர் ஸ்டோன் தற்சமயம் இந்தியா பூராவும் சுற்றி, தேசத்தில் எந்தவிதமான கட்டுப்பாட்டு முறை சிலாக்கியம் என்று ஆராய்வார். முக்கியமாக, கட்டுப்பாட்டு இயக்க நிபுணர்களான டாக்டர் சந்திரசேகர், டாக்டர் ராஜா இவர்களுடன் வட இந்தியாவில் சில பகுதிகளைச் சுற்றிப்பார்த்த பின்னர் இந்தியாவிற்குச் சிறந்த முறை ஸ்திரீகளின் "பத்திரமான காலத்தில்" சதிபதிகளின் சேர்க்கை என்ற தற்காலிகமான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார் ஸ்ரீ ஸ்டோன்.

"பத்திரமான காலம்" என்பது தேசத்திற்குத் தேசம் மாறுமாம். இந்தக் காலம் ஸ்திரீகளின் இரு மாதவிடாய்களுக்கு நடுவேயுள்ள நாள்களின் ஒரு பகுதியைக் குறிக்கிறது. பலவேறு இடங்களில் "கவனிப்பு ஸ்தானங்கள்" ஏற்படுத்தி இளம் தம்பதிகளைக் கவனித்து அவர்கள் மூலம் "பத்திரகாலம்" நிச்சயமாக எது என்பது அறியப்படும். "பத்திரகால" முறை பொதுவாகப் பாமர மக்கள் யாவருக்கும் சிபார்சு செய்யப்படும். இதற்கு மத சம்பந்தமான ஆக்ஷேபணையும் இருக்காது. ஆனால் வரும் ஒரு வருடத்தில் முக்கிய நகரங்களில் ஆஸ்பத்திரிகளில் குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக ஆலோசனை டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்தப்படும். அவைகளில் பத்திரகால' முறையைத் தவிர மற்ற முறைகளைப்பற்றியும் ஆலோசனை கூறப்படும். இந்திய சர்க்கார் இது விஷயம் ஸ்ரீ அமிர்தகௌரி அவர்களையும் அவர்களின் அரும்பெரும் அபிப்பிராயத்தையும் பொருட்படுத்தாது குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் முன்னேறிச் செல்லத் தீர்மானித்ததுபற்றி யாவரும் சந்தோஷமே படுவார்கள்.

* * *

மறுபடியும் காஷ்மீரம் பாதுகாப்புக் கௌன்ஸிலில் தலைமைக்காட்டி மறைந்துவிட்டது. டாக்டர் "கிரஹம்" அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர், சமாதானமாகக் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்று நிலவிவந்த நம்பிக்கை எல்லாம் மறைந்துவிட்டது.

ஷேக் அப்துல்லாவுக்கு ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் சென்ற மாத ஆரம்பத்தில் ஒரு தந்தி அனுப்பினார். ஷேக் அப்துல்லா இந்தியத் தேர்தல் இயக்கத்தில் காங்கிரஸுக்காகப் பிரசாரம் செய்யப்போவதாகச் செய்தி வந்திருந்தது. அதுபற்றி ஸ்ரீ ஜயப்பிரகாசர் ஷேக் அப்துல்லாவுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பினார். காஷ்மீரம் இந்தியா சம்பந்தப்பட்டவரை ஒரு குறிப்பிட்ட கக்ஷி விவகாரம் இல்லை. யாவரும் ஒருமுகமாக ஷேக் அப்துல்லாவை ஆதரிப்பதுடன் பாகிஸ்தானுக்கு எதிராகச்சர்க்கார் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு கொடுப்பார்கள். "ஆகையால் காங்கிரஸுக்குப் பிரசாரம் செய்து காஷ்மீரப் பிரச்னையைக் கேவலம் ஒரு கீழான கக்ஷிப் பிரச்னை நிலைமைக்குக் கொண்டு வராதீர்கள்" என்று ஸ்ரீ ஜயப்பிரகாசர் வேண்டிக்கொண்டிருந்தார். நல்ல தருணத்தில் ஸ்ரீ ஜயப்பிரகாசர் தம் வேண்டுகோளை விடுத்தார். இல்லாவிட்டால் காஷ்மீரம் கக்ஷிப் பிரச்னையாகி நிலைமை மிகவும் கேவலமாகியிருக்கும். இப்பொழுதுகூட ஜனசங்கமும், மற்றும் பல குப்பைத்தொட்டிகள் ஷேக் அப்துல்லாவைக் கண்டித்தும் அவர் ஹிந்து அகதிகள் விரோதிகள் என்றும் பிரசாரம் செய்கிறார்கள். இவர்கள் தாங்கள் காங்கிரஸுக்கு எதிர்ப் பிரசாரம் செய்வதாக எண்ணி நம் கண்ணையே பிடுங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கு (டில்லியில்) வந்திருக்கும் பஞ்சாப் அகதிகளுக்கும் திருப்தி என்பதற்கும் வெகுதூரம். சொர்க்கத்தையே தூக்கி இவர்கள் கையில் கொடுத்தாலும் உதட்டைப் பிதுக்கும் பிரகிருதிகள் இவர்கள். நேருஜி எவ்வளவோ சரணார்த்திகளுக்குச் சாதித்திருந்தும் இவர்கள் குறை இதுதான். ஏன் டில்லியில் வாழ்பவர்களை எல்லர்ம் துரத்தி அவர்கள் வீடுகளையும் வியாபார சாதனங்களையும் எங்களுக்கு நேருஜி கொடுக்கக்கூடாது?

நிற்க, ஷேக் அப்துல்லா காஷ்மீர் நிர்ணய சபை கூடிவிட்டு, செய்யவேண்டிய மற்றக் காரியங்களைப்பற்றித் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

காஷ்மீர்பற்றி சர்வதேச சபையில் எந்த முடிவும் சமீபத்தில் ஏற்படாதென்றும் இது விஷயமாகச் சர்வதேசசபை எவ்விதக் கட்டாயத் தீர்மானத்தையும் இந்தியா மீது சுமத்த மாட்டார்கள் என்றும் இந்திய அரசியல் வட்டாரங்களில் கருதுகிறார்கள். காரணம் இந்தியா மீதுள்ள வாத்சல்யத்தினால் அல்ல. அவர்களுக்கு ஈரான், எகிப்து போன்ற பெரிய தலைவலிகள் இருப்பதால்தான். ஆனால் இந்தியா சம்பந்தப்பட்டவரை காஷ்மீர் பாதுகாப்புக்காகவும், சீர்திருத்தங்களுக்காகவும் ஆகும் செலவைச்சமாளித்துத்தான் ஆகவேண்டும். பனி பெய்து ஐஸ் ஆகும் பிரதேசத்தில் உள்ள கஷ்ட நிஷ்டூரங்களை, கடும் உஷ்ணத்தையோ அல்லது குளிரையோ அறியாத நம் தீர தென்னிந்திய ராணுவ வீரர்களும் சகித்தே ஆகவேண்டும்.

சென்ற வருஷம் ஷேக் அப்துல்லாவையே கேட்டிருந்தால்கூட, பொதுஜன வாக்கெடுப்பில் பாகிஸ்தானுக்குக் கொஞ்சம்அனுகூலம் ஏற்படும் என்றுதான் சொல்லியிருப்பார். குறைந்த பக்ஷம் தற்பொழுது பாகிஸ்தான் ஆதிக்கத்திலிருக்கும் மூன்றில் ஒரு பங்கு காஷ்மீரப் பிரதேசம் பாகிஸ்தானுடன் சேர்ந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ அல்லது அடுத்த வருஷமோ பொதுஜன வாக்கெடுப்பு மிகவும் நியாயமான பாரபக்ஷமற்ற முறையில் நடத்தினால் பூர்ண வெற்றி ஷேக் அப்துல்லாவுக்கே கிடைக்கும். காரணம் காஷ்மீர சர்க்கார் செய்திருக்கும் அபிவிருத்தி திட்டங்களும் நிலப் பங்கீடுமே. காஷ்மீரத்தில் நிலமில்லாதவர்களுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார் ஷேக் அப்துல்லா. சென்னையைப்போலவோ அல்லது உத்தரப் பிரதேசத்தைப்போலவோ நிலச் சுவான்தார்களுக்கு பணஈடு கொடுக்க முயற்சி செய்து சிரமப்படவில்லை. "பெரும்பாலானவர்களுக்கு நிலம் இல்லை. எங்களிடம் பணம் இல்லை. ஆகையால் ஈடு இல்லாமல் பங்கிடு செய்துவிட்டோம்" என்று ரத்னச் சுருக்கமாகச் சொன்னார் அப்துல்லா.

"காஷ்மீரத்தில் நடந்த நிலப்பங்கீட்டில் பங்கு உங்களுக்கும் உண்டு. உங்களுக்கென்று நிலங்கள் தயாராக இருக்கின்றன. அவைகளைப் பெற்றுக்கொள்ளுவது உங்கள் பொறுப்பு" என்று காஷ்மீர நிலமந்திரி மீர்ஸா அப்ஸல்பேக் சமீபத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமத்தில் இருக்கும் காஷ்மீரப் பிரதேச வாசிகளுக்கு ரேடியோ மூலம் சொன்னது இந்தியாவுக்கும் காஷ்மீரத்துக்கும் சாதகமான பொதுஜன அபிப்பிராயத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது என்று அறிக்கைகள் கூறுகின்றன. காஷ்மீரத்தைப்பற்றி நல்லெண்ணம் இல்லாத பாகிஸ்தான் கில்கித்—பூஞ்ச் வாசிகளுக்கு அளித்ததெல்லாம்எல்லைப்புறக் காட்டு மிராண்டிகளின படையெடுப்பும், கொள்ளையும், தீயும், கற்பழிப்பும். ஆகவே நாள் ஆக ஆக, பாகிஸ்தான் பிடியில் இருக்கும் காஷ்மீர் பிரதேச வாசிகளும் ஐயந்திரிபு அற வாக்கெடுப்பில் தாங்கள் இந்தியாவுடனேயே சேர விரும்புவதாக நிரூபிப்பார்கள் என்பது இங்கு அறிந்த வட்டாரங்களின் கருத்து. ●



ஷேக் மகம்மது அப்துல்லா

கே. ஸ்ரீ.

ஷேர் என்றால் சிங்கம் என்று பொருள். "ஷேர்-இ-காஷ்மீர்" என்றால் காஷ்மீர் சிங்கம், அது காஷ்மீர் பிரதமரைக் குறிக்காது வேறு யாரைக் குறிக்க முடியும்? உலகின் அரசியல் அரங்கமான ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் சதுரங்கத்தில் அகப்பட்ட காஷ்மீரை யாருக்கும் அஞ்சாமல், "சத்தியமே ஜயம், அன்பே மனிதத்துவம்" என்ற விடாக் கொள்கையுடன் அப்துல்லாவைத் தவிர யாரால் பரிபாலிக்க முடியும்?

மகாத்மா தம் ஆயுள் காலத்திலேயே, தமக்குப்பிறகு சத்தியத்தைக் கடைப் பிடித்து அஹிம்ஸைக் கொள்கையை நம்பி, மத வேற்றுமை பாராட்டாமல் நாட்டை நடத்த வலிமை உள்ளவர்கள் இரண்டே பேர்கள் என்று தீர்மானித்துவிட்டாராம். முதல் ஆசாமியை யார் என்று குறிப்பிடத் தேவையில்லை. இரண்டாவது சிலர் ஸ்ரீ அப்துல்லா அவர்களே. புதியதொரு சகாப்தத்தை ஆரம்பித்து, தம் நாட்டில் மதவெறி என்றால் என்ன என்றுகேட்கும் நிலைமையில் காரியங்களை நடத்தி வருகிறார் என்றால் ஷேக் அப்துல்லாவுக்கு இதைவிட வேறு என்ன நற்சாக்ஷிப்பத்திரம் வேண்டும்?

ஷேக் அப்துல்லா எப்படி மதப்பற்றற்ற சர்க்கார் இலக்ஷியத்தில் நம்பிக்கைகொண்டார்! உழைத்து உழுது உலகின் இன்பங்களைச்சிறிதும் அனுபவிக்காத விவசாயியிடம் எப்படி இவருக்குப் பற்று உண்டாயிற்று? காயிதே ஆலம் ஜின்னாவின் இரு-நாட்டுக் கொள்கை ஜம்பம் ஏன் இவரிடம் சாயவில்லை? என்பதுபோன்ற கேள்விகளுக்கு அவர் பால்ய சரித்திரமேதான் பதில் சொல்ல வேண்டும்.

ஷேக் அப்துல்லா ஒரு சாதாரண குடும்பத்தில் கடைக் குட்டியாகத் தம் தந்தை மரணத்திற்குப் பிறகு டிஸம்பர் 2 1905-ல் பிறந்தார். அவருக்குச் சகோதரர்கள் ஐவர். சகோதரி ஒருத்தி. அவர் தந்தை வைத்துப் போன கம்பளி நெய்யும் தறியில் அவரும் அவர் சகாக்களும் வேலை செய்து உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெற்று வந்தனர். அவருக்குப் பதினெட்டாம் வயதில் அவர் சிநேகிதர் திடீரென்று இறந்தார். விசாரித்ததில் தம் குடும்பக் கடனை அடைப்பதிலேயே அவர் சிநேகிதரின் சொற்ப வருமானம் பெரும்பாலும் செலவழிந்தது என்றும் கடன்காரர் சொல்தாளாமல் வயிற்றை ஒடுக்கி வாழ்ந்தே அவர் இறந்தார் என்றும் அவருக்குத் தெரியவந்தது. உடனேயே அவர் மனதில் தீப்பற்றியது. ஆகா! என்ன கொடுமை! பாட்டாளி உழைத்து உழைத்து மாளாமல் கடன் அடைத்தே சாவதா? கொடுங்கோன்மைக்குக் கதி மோக்ஷம் இல்லையா?' இப்படியெல்லாம் சிந்தித்து அவர் திடசங்கல்பத்துக்கு வந்தார். எப்பாடுபட்டாவது எளிய மக்களுக்கு விமோசனம் உண்டாக்கவேண்டும் என்று உறுதிகொண்டு அலுக்காமல் சலிக்காமல் உழைத்து எம். எஸ்ஸி. பட்டத்தை வாங்கி ஸ்ரீநகரில் உபாத்தியாயர் வேலையை ஒப்புக்கொண்டார்.

இந்தச் சமயத்தில்தான் விதி இவரை அரசியல் அரங்கத்திற்கு அழைத்தது. ஜம்முவில் ஒரு முஸ்லிம் போலீஸ்காரன் அவமதிக்கப்பட்டான். உருதுவில் மசூதிகளில் கூடப் பிரசங்கங்கள் செய்யக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தன் மரியாதையை இழந்து வாழ்வு எதற்கு என்று கிளம்பினார் காஷ்மீர் சிங்கம். ஜாமியா மசூதியில் உருதுவில் பேசிவிட்டு 20,000 பேர்கள் பின்தொடர தெரு வழியே சர்க்கார் உத்தரவைத் தகர்த்துக் கைது செய்யப்பட்டார். எவ்வளவு தரம் கைது செய்யப்பட்டு விடப்பட்டார் என்பது அவருக்கு ஞாபகம் இல்லை. இதன் விளைவாகப் பிறந்த முஸ்லிம் மகாநாடு தான் சில வருஷங்களுக்குப் பிறகு காஷ்மீர் தேசிய மகாநாடாகி டோக்ராக்களின் கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடலாயிற்று.

சிறு வயதிலிருந்தே ஷேக் அப்துல்லாவிற்குப் பொங்கிவந்த ரௌத்திரம் மக்களின் ஏழ்மையைக் குறித்தே. ஹிந்துவுக்குப் பசி ஒன்று முஸ்லிமுக்குப் பசி வேறு என்று ஒன்றும் கிடையாது என்ற உணர்ச்சியே இன்றும் அவருக்கு. மதத்தால் வேறுபாடு கூடாது என்பது சர்க்கார் கொள்கையாக நடைமுதலில் இருந்துவருகிறது.

ஆதியிலிருந்தே அப்துல்லாவுக்குக் காந்தியடிகளுடன் பழக்கம் ஏற்பட்டு ஜவாஹர்லால்ஜியுடன் சமஸ்தான இயக்கத்தின் மூலம் நட்பு உண்டாயிருந்தது. அன்று காஷ்மீர மன்னருக்கு நல்ல வார்த்தைகள் சொன்னது காந்திஜி என்றும் காஷ்மீரத்துக்காகக் காஷ்மீரத்துத் துருப்புகளின் துப்பாக்கிகளுக்கு மார் திறந்தது ஜவாஹர் என்பதையும் ஷேக் அப்துல்லா நன்கு அறிந்ததால் தான் ஜின்னாவின் பாகிஸ்தான் கூத்திற்கு அப்துல்லா சிறிதும் மசியவில்லை. 1942-ல் இந்தியாவில் "வெள்ளையனே வெளியேறு" என்ற கோஷம் எழுந்தபொழுது காஷ்மீரத்தில் "டோக்ரா கொடுங்கோன்மையே வெளியேறு" என்ற சப்தம் எழுந்தது.

1947-ல் நம் தேசம் துண்டிக்கப்பட்டபொழுது ஜெயிலில் இருந்த அப்துல்லா வெளிவந்தார். காஷ்மீரம் ஏதாவது ஒரு நாட்டிற்கு விசுவாசம் காட்டும் என்று சொல்லி அவர் வாய் மூடுமுன்னர் பாகிஸ்தானத்துக் கசாப்புக்கடை வெறியர்களும் எல்லைப்புறத்துக் கொள்ளைக்காரர்களும் காஷ்மீரத்தை ஆக்கிரமித்தனர். பின்னால் நடந்த நிலவரம் யாவரும் அறிந்ததே. ஆனால் நேயர்களுக்குத் தெரியாத ரகசியம் ஒன்று இப்பொழுது வெளியிடுகிறேன். "ஆபத்து, சகாயம் வேண்டும்" என்று தினக்குரல் எழுந்ததும் இந்திய சர்க்கார் குழம்பி யோசிக்கலாயினர். காரணம் லார்ட் மௌண்ட்பாட்டன் காஷ்மீர் மூலம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சண்டை மூளக் கூடாது என்று கருதினர். ஆனால் வருங் காலத்தை ஞானதிருஷ்டியுடன் பார்த்த மகாத்மா தம் பிரார்த்தனைக் கூட்டத்தில் காஷ்மீருக்கு இந்தியா சகாயம் புரியும் என்று அறிவித்தார். இது கேட்டதும் நேரு சீறி எழுந்தார். 'நீங்கள் எப்படி நாங்கள் முடிவு செய்யுமுன்னர் அறிவித்தீர்கள்" என்று பொங்கினாராம். மகாத்மா சொன்னார்: "பிரிவினையால் பாதுஷாகானைப் (எல்லைப்புற காந்தியை) பலியிட்டோம். அப்துல்லாவையும் பலியிட நீங்கள் தயாரா? பலாத்காரத்துக்குப் பதில் பலாத்காரம் தான்." இந்த உறுதியான மகாத்மாவின் யோசனையே நொடிப் பொழுதில் சரித்திரப் போக்கை மாற்றியது.

சென்ற மூன்று ஆண்டுகளாகக் காஷ்மீரத்துக்கு வந்திருக்கும் ஆபத்தைப் போல வேறு எந்தத் தேசத்திற்கும் வரவில்லை. இருந்தும் யார் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள்? இந்தியாவா, காஷ்மீரமா? சந்தேகமில்லாமல் காஷ்மீரம் தான்.

ஏழை எளிய குடியானவனைத் தூக்கிவிட நிலப் பங்கீட்டை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார் அப்துல்லா. நிலமில்லாத கிஸானுக்குத் தலா 2½ ஏகர் நிலம் கொடுத்திருக்கிறார். உழுது பயிர் செய்யும் குத்தகைக்காரனுக்கு மாசூலில் முக்கால் என்று சட்டம் செய்திருக்கிறார். சர்க்கார் பட்டு உற்பத்திச் சாலையைத் தொழிலாளர்கள் மேற்பார்வையில் நடத்த ஒப்படைத்திருக்கிறார். காஷ்மீர சர்வகலாசாலையை ஏற்படுத்தியிருக்கிறார்.

காஷ்மீர மன்னர் ஹிந்து என்பதற்காகத் தான் அப்துல்லா அவரை நீக்கினார் என்பது புரளி. அவருக்கும் குடியரசு சர்க்காருக்கும் எட்டிப்பிடிக்க முடியாத தூரம் என்பதற்காகவே அவரை நீக்கி, அவர் பிள்ளைக்கு முடி சூட்டுவித்தார் அப்துல்லா. கில்கித், பூஞ்ச் முதலிய இடங்களைப் பாகிஸ்தான் பிடாரிகள் பிடித்து ஹிந்து, ஸீக்கியர்களை வதைத்ததைக் குறித்துச் சொன்னார் அப்துல்லா: "என் குழந்தைகளைக் கயவர்கள் கொலை செய்தார்கள். என் பெண்களைச் சில அணுக்களுக்குத் தெருவில் விற்று, அக்கிரமம் செய்தார்கள்." அந்த அப்துல்லாவா மத வித்தியாசம் பாராட்டுபவர்?

ஷேக் அப்துல்லா மந்திரி சபையில் உள்ளவர்களுக்கு வயது நாற்பது. இவர்களே இந்தியாவில் மிகச் சிறு வயதுள்ள மந்திரிகள்.

மகாத்மா எவ்வளவு நல்ல ஹிந்துவோ அவ்வளவு நல்ல முஸ்லிம் அப்துல்லா. ஆனால் மதத்தையும் அரசியலையும் கலப்பது அவருக்குத் தெரியாத, பிடிக்காத விஷயம். வகுப்பு வெறிக்குக் குழி தோண்டி, எதேச்சாதிகாரத்தை ஒழித்துக்கட்டி, மக்கள் நிலைமையைச் சீர்தூக்கிய மன்னர் அப்துல்லா வருங்கால மதப்பற்றற்ற இந்தியாவின் பிரதமரானால் அதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

முனியோதரன் பொங்கல்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

பொங்கலமுதின் பெருஞ்சுவை பார்க்க வேண்டுமா? புளியோரையின் பொங்கு சுவைகாண விருப்பம் உள்ளதா? திருமாலின் திருக்கோயில் சென்று, வினியோகம் வாங்கிப் புசிக்கவேண்டும்! கை பாகம் என்பது ஒருபுறம் இருக்கட்டும்; மாதவனுக்கு மகிழ்ந்தளித்த பேரமுது என்னும் தனிச் சுவையும் கலந்து தோன்றும்.

மகாவிஷ்ணு அலங்காரப் பிரியன்; ஆடம்பரப் பெருமான்! அக்கேசவனது கோயில்களில்தான் விதவிதமான நிவேதனங்கள் பார்க்கலாம். அவை எல்லாருக்கும் வழங்கப்படும். விலைக்கும் விற்கப் பெறும். சிவாலயங்களிலோ விபூதிப் பிரசாதமும் பெற விரும்பார் சில பெரியோர், மாயவனது பிரசாதத்தை அனைவரும் விரும்பி வாங்குவர்; விழுமியது என்றும் புசித்து மகிழ்வர்.

திருமாலின் தலங்கள் திருப்பதிகள் எனப்படும்; திவ்ய தேசங்கள் என்றும் சொல்லப்பெறும். அத்தகைய அரும்பதிகள் நூற்றெட்டாம், அவற்றுள் சாலச் சிறந்த ஒன்று திருக்கண்ணபுரம், அது தஞ்சாவூர் ஜில்லாவிலே, நன்னிலம் ரயிலடிக்கு நான்கு மைல் கிழக்கே உள்ளது. அங்கே எழுந்தருளியுள்ள எம்பெருமான் திருநாமம் சௌரிராஜப் பெருமாள் என்பதாம்.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாடிய பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் இவர்கள் மங்களா சாஸனம் செய்துள்ள திவ்ய தேசம் அது! ஆங்குள்ள மாலவனது ஆலயத்திலே அர்த்த ஜாமத்தில் பொங்கல் வினியோகம் உண்டு. அது முனியோதரன் பொங்கல் எனப்படும்.

அதன் வர்லாறு யாது? அது யாருடைய கட்டளை? எத்தனை நாளாக அது நடந்துவருகிறது? அதில் என்ன விசேஷம்? ஆகிய இவற்றை ஊன்றி நோக்கினால், உண்மைகள் பல புலப்படும், புதுமைகளும் பல புலனாகும், பரவசமும் பக்திப் பெருக்கும் உதிக்கும்; பூரிப்பும் பிறக்கும்!

சோழ வேந்தருள் ஒருவன் இராஜேந்திரன் எனப்படுவான்; பல்லாண்டுகளுக்கு முன் தஞ்சை வள நாட்டிலே அவன் தலைசிறந்து விளங்கினான்; கப்பல் படைகொண்டு கடாரத்தையும் கைப்பற்றினான். ஆனதுபற்றி அவனை வீரராசேந்திரன் என்பர். அவன் பெயரால் வீரசோழியம் என்னும் இலக்கண நூல் ஒன்று உண்டு.

அவனது அதிகாரிகளில் ஒருவன் முனையதரையன் என்பவன், குடிமக்களிடமிருந்து இறைப் பணம் வசூலித்தல் இவன் வேலை; எனவே தண்டல் நாயகன் என்னும் பெயரும் பதவியும் வாய்ந்தவன். இராஜநீதியில் இவன் இம்மியும் தவறான், மக்களிடம் பேரன்பு காட்டுவான், பரம வைணவ பக்திமானும் ஆவான்.

ஆதலின், வீரசோழ வேந்தனால் இவன் மதிக்கப்பெற்று வந்தான். நாட்டாரும் இவனிடம் நல்விசுவாசம் வைத்திருந்தனர். அத்திருக்கண்ணபுரமே இவனது உறைவிடமாயிற்று. காலையிலும் மாலையிலும் காத்தல் கடவுளைத் தொழாமல் இவன் வேறு வேலை பாரான். அன்னபானமும் கொள்ளான்.

அந்த ஆலயத்திலே பணிவிடை புரியும் கணிகை மகளிர் பலர் இருந்தனர். அவர்களில் ஒருத்தி மோகனம் என்னும் பெயராள். பெருமாளிடம் அவள் ஆரா அன்பு கொண்டவள்; நன்னெறியும் நற்குணமும் நிரம்பியவள். முன்னை நல்வினையின் பயன், முனையதரையனும் மோகனமும் காதல் மணம் கொண்டனர், கருத்து ஒருமித்து!

கனலி சான்றாய்க் கடிமணங்கொண்ட தம்பதிகள் எனவே எல்லாரும் எண்ணி நின்றனர். கண் கண்ட கடவுளென்றே முனையதரையனை மோகனம் மதித்து வந்தாள். மும்மூர்த்திகளிலே ஒருவர் நாவினும் ஒருவர் மார்பிலும் ஒருவர் பாகத்திலும் தமது தேவியரை இருத்தி மகிழ்வரென்றால், அம்முனையதரையனோ தனது மனக்கோயிலில் மோகனத்தை அனந்தம் அடைந்தான்.

அங்ஙனம் இருக்குநாளிலே ஒருநாள், அத்திருக்கண்ணபுரப் பிரதேசமெங்கும் பெரும் பஞ்சம் தோன்றியது. அதனால் மக்களனைவரும் பசியால் வாடி வருந்தினர்; கால்நடைகளும் தீவன மின்றிக் கலங்கி யழுதன. அதுகண்டு அக்காதலர் இருவரும் உள்ளம் உருகினர்; உடனே தமது பணமனைத்தையும் ஏழைகளுக்கு ஈந்து உவந்தனர்.

அந்த உதவியோ கடலில் கரைத்த காயமே போலாயிற்று, இருவரும் அது அறிந்து, அரசிறையாக வந்த திரவிய மனைத்தையும் வறியோருக்கு வாரி வழங்கினர். நாடு செழித்ததும், அவ் வரிப் பணத்தைக் செலுத்திவிடலாம் என்பதே அவர்களின் கருத்தாம்.

முனையதரையனது பக்திப் பெருக்கையும் பரந்த செல்வாக்கையும் கேள்வியுற்ற மந்திரி யொருவன் பொறாமை பூத்தான்; உடனே அத் தண்டல் நாயகனைப் பிடித்துச் சிறையில் வைத்தான், இது பழவினையின் பயன், அல்லது திருமாலின் திருவிளையாடல் என்றே அம் முனைய தரையன் மதித்தனன்; அமைச்சனை நொந்து கொள்ள வில்லை.

தேவரடியாளான மோகனமோ மணமகன்ற மலர்போலானாள்; நடமாடுங் கோயில்களிடம் கருணை காட்டியதற்கு இதுவோ பலன், என்று மறுகினாள்; முடிவிலே ஒருவாறு தேறினாள்; தேறியதும், தனது நாயகனை மீட்கும் வகையில் சிந்தை குவிந்தாள்; தென் திசைத் தலைவனிடமிருந்து தனது நாதனை மீட்டவளும் தன்போன்ற தையலே என்று கருதினாள்.

அப்பால், தான் அணிந்திருந்த ஆபரணம் அனைத்தையும் அவள் விலைக்கு மாறினாள்; தனது முன்னோர் வைத்துப்போன சொத்தையும் பணமாக மாற்றினாள்; அவ்விதம் சேர்ந்த இருநிதியனைத்தையும் அந்த அமைச்சனிடம் சேர்த்தாள்; தனது கொழுநனை விடுவிக்குமாறு வேண்டி நின்றாள்.

கெடுமதி படைத்த அமைச்சனோ வந்த பணமனைத்தும் ஆட்கூலிக்கேயாகும் என்று கூறிவிட்டான். அத்துடன் அத்தீயோன் நிற்கவில்லை; கணிகை குமரிதானே என்று அவளை இலேசாகப் பேசினான்; அவள் மீது மையல் பூத்து மயக்க மொழிகளும் பல பிதற்றினான்.

அவ்வளவில் அவள் விழிநீர் பெருக, அவனது சமுகம் விட்டகன்றாள். அவனது தீய செயலையும் சிந்தனையையும் எண்ணி எண்ணி நைந்தாள்; வீர சோழனது சபை குறுகிக் குறையிரக்க முயன்றாள். பாதக அமைச்சனோ அதற்கு இடந்தராமல் இடர் பல விளைத்தான். அதன்மேல் தெய்வமே கதியென அவளுக்குத் தோன்றியது.

உடனே அவள் சௌரிராஜப்பெருமானின் சந்நிதி சேர்ந்தாள்; மந்திரியின் மோசத்தைக் கூறி, முறையிட்டாள். "கண்ணபுரமாலே! கருணை வள்ளலே! இன்னும் ஐந்து தினம் உயிர்தாங்கி நிற்பேன்; அதற்குள் என் நாதன் வாராவிடின் தீயில் மூழ்கிவிடுவேன்," என்று சபதம் பேசினாள்; சிந்தையும் குழைந்தாள்.

அதுமுதல் அவள் உண்ணா நோன்பு கொண்டாள்; உறக்கமும் விடுத்தாள், மாறி மாறி முனையதரையனையும் சௌரிராஜனையுமே துதித்

தாள். தரையிலே சாய்ந்தாள்; கட்டைபோல் கிடந்தாள்; உள் மூச்சு ஒன்றே உயிருக்கு அறி குறி ஆயிற்று.

இதற்குள் குறித்த நாளோ குறுகி விட்டது. தீயில் வீழ்ந்து மூழ்க அவள் திடமே கொண்டாள். ஆவி அகலுமே என்னும் கவலை கிடையாது. ஆரு யிரனைய அன்பரைக் காணாது கண்மூட நேருகின் றதே என்னும் கலக்கமே வருத்தாநின்றது' அந் நிலையில் அவள் பொங்கி எழுந்தாள்.

முழுமதி போன்ற அவள் முகம் சோர்ந்தது; முகில் போன்ற கூந்தல் சரிந்தது. அடியற்ற மரம் போல் கீழே வீழ்ந்தாள்! செங்கண் சிவக்க அழுதாள்; என் கண்ணாளா, என்று கதறினாள்; நினது திருமுகங் காட்டாயோ என்று கூவினாள்; என்னைக் காவாயோ என்று விம்மினாள்; முடி விலே

இன்று வரில், என் உயிரை
  நீ பெறுவை! இன்றைக்கு
நின்றுவரில், அன்னதுவும்
  நீ அறிவை!—வென்றி
முனையா! கலவி
  முயங்கிய வா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ?

என்று பாடலொன்று வரைந்தாள்; வரைந்த தும் காதலன் வாரானே, என்று நாற்றிசையும் நோக்கினாள்! காந்தனைக் காணவில்லை. உடனே உன்மத்தம் பிடித்தவள் போலானாள்; இங்குமங் கும் உலவினாள்; திரிந்தாள்; ஏதேதோ தன் மனத் தூடே நினைந்தாள்; எரி மூட்டுங்கள், என்று அரற்றினாள்; ஏங்கியெங்கி நைந்தாள்!

அருகேயிருந்த தோழி அதுகண்டு, "என் முத்தே! மோகனமே! தனித்திருந்த தமயந்தி கதை தெரியாதோ? கண்ணகி ஆற்றி யிருந்ததை யும் அறியாயோ? எத்துணையோபேர் துணைவரைப் பிரிந்து நின்றனரே! நீ இங்ஙனம் அலமந்து அய ருதல் அழகாமோ?" என்று பலவாறு கூறி ஆற்ற முயன்றனள்.

அதற்கு மோகனம், "கமலமே! நல்லதோழிநீ!" கணவனைப் பிரிந்த அக்கணமே நான் இறந்து பட்டிருக்கவேண்டும்; அத்தகைய உத்தமியாகும் பாக்கியம் படைத்தேனில்லை. இந்த ஐந்துநாள் அளவும் நான் ஆவி தாங்கி நின்றது அவமேயாம்" என்று கண்ணீர் வடியக் கூறியழுதனள், குழந் தையே போல்.

அப்பால் அப்பெண்பால் சிறிதே ஆறி, மீண் டும் பனையோலை ஒன்றை எடுத்து, "நாதா! இனி யான் ஒரு கணமும் நினது பிரிவை ஆற்றியிரேன். மாய்ந்து படுதல் திண்ணம். பிரிவு என்னும் வெம் மை தீர, வெந்தீயில் குளித்தல் வேண்டும். வேறு வழி காணேன்" என்று மற்றொரு பாடல் வரைந் தாள். அது இது:-

குலகுலப் பனையின் ஓலை,
  குலாவி நின்று ஆடும் ஓலை,
அளவுள்ள பனையின் ஓலை,
  நாதா! எழுதும் ஓலை,
எழுதிய ஓலை கண்டு
  இக்கணமே வாரா விட்டால்,
எழுந்ததோர் தனமும் யானும்
  எரிதனில் ஏகுவேனே.

இதனை எழுதி முடித்ததும், ஐந்தாநாள் அந்திப் பொழுது வந்துவிட்டது. அவளது காந்தன் வந்த பாடில்லை. உடனே சிறிதும் தாமதியாமல், அவள் தீ மூட்டினாள்; அத்தீயையும் மும்முறை வலம் வந்தாள்; கண்ணபுரமாலே என்று கை கூப்பி னாள்; அக்கினியிலே ஆர்வமுடன் குளிக்கப் போகும் தறுவாய்!

அந்தரத்தில் அசரீரி கிளம்பிற்று. "மறுநாள் பொழுது சாய்வதற்குள் மணாளன் வருவான்", என்னும் வாக்கு காதில்பட்டது. அதனை அவள் உற்றுக் கேட்டாள், உள்ளம் குளிர்ந்தாள்; மீண் டும் திக் கடவுளை வணங்கினாள்; பெருமானைத் துதித்தாள்; பின்பு தனது வீடு புகுந்தாள்.

ஈதிங்ஙன மிருக்க, எம்பெருமான் அன்றிரவே வீரசோழனது கனவில் தோன்றினார்; உற்றது முற்றும் உரைத்தார்; உடனே முனையதரையனை விடுவி, என்று மொழிந்தார்; பின்னர் மறைந்து போனார்! அக்கணமே வீரசோழன் துயிலுணர்ந் தான்; பொழுது புலர்வதை நோக்கி நின்றான்.

அருணோதயம் ஆனதுதான் தாமதம். வீர சோழன் கால்நடையாக விரைந்தான்; சிறைக் கூடம் சேர்ந்தான்; முனையதரையனை மார்புறத் தழுவினான்; மந்திரியின் செயலை மறந்துவிடு, என்று மொழிந்தான்; நீயே பரம பக்தன், என்று போற்றினான்; சீரும் சிறப்பும் செய்து, சிறிது தூரம் உடன்வந்து வழியனுப்பினான்.

அசரீரி உரைத்த வண்ணமே, குறித்த நேரத் தில் முனையதரையன் திருக்கண்ணபுரம் நண்ணி னான்; தனது காதல் கிழத்தியின் மாளிகை புகுந் தான். அவளும் களிப்புமிகக்கொண்டாள்; காத லனைக் கட்டி யணைத்தாள், ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்; ஆண்டவன் காத்தான், அவன் வாழ்க, என்று போற்றினாள்.

உயிர்பெற்ற உடலம்போல் பொலிந்த அப் பூவை அதுவரையில் அன்னம் புசியாதவள் அல் லவா? காந்தனைக் கண்ட களிப்பால் களைப்பை மறந்தாள்? பாகசாலை புகுந்தாள்; பாலும் அரிசி யும் பசும் பயறும் பாகமாகச் சேர்த்தாள்; ஏலம் நெய் சருக்கரை இவற்றையும் இனிது கலந்தாள்; எல்லாம் இன்சுவைப்பாகம் ஆயின!

அப்பொங்கலை அவள் ஓர் அகப்பை எடுத்தாள்; ஆண்டவனுக்கே அர்ப்பிதம் என்று மனத்தே நினைத்தாள்; மணாளனது கலத்தில் ஓரளவு வட்டித்தாள். அவனும், "இது சாலச் சிறந்தது, சவுரிராஜனுக்கே தகும்," என்றான். ஆம் ஆம் என்றாள் அவளும்.

பின்னரே இருவரும் அமுது அருந்தினர்; அப்பெருமானது கருணைப் பெருக்கைக் கருதிக் கருதிக் களித்தனர்; அக் களிப்பிலே இரவையும் கழித்தனர்! கோழி கூவியது, காகம் கத்தியது; கிழக்கும் வெளுத்தது; பொழுதும் புலர்ந்தது. இருவரும் வாய் பூசி முகம் கழுவினர்.

இதற்கு இடையிலே, அதிகாலையில் அர்ச்சகர் சென்று ஆலயக் கதவைத் திறந்தார்; திருவனந்தல் கருதி எம்பெருமானை நோக்கினார்; திருமேனி முழுதும் சருக்கரைப் பொங்கலமுது பூசப்பெற்றிருந்தது. அதுகண்டு, "அந்தோ! இது யாரிழைத்த அபசாரம்" என்று நடுங்கினார்.

உடனே, "அர்ச்சக! அச்சந்தவிர்! அன்பர் அளித்த அமுது இது! ஆர்வமுடன் அளித்தது மாம்!" என்று அந்தரத்தே ஒரு திருவாக்கு எழுந்தது. அவ்வேளை அக்காதலர் இருவரும் அச் செய்தியை அறிந்தனர்; அறிந்ததும் ஓடோடி ஆண்டவன் சமூகம் சேர்ந்தனர்; அப்பெருமானை வணங்கி வாழ்த்தினர்; எல்லாம் அறியவந்த நம்பியான் இறும்பூது எய்தினான்.

அன்று முதல் திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாளுக்கு அர்த்த ஜாம வேளையில் பொங்கலை

முது படைக்க ஏற்பாடாயிற்று. அது நிலையாக நடந்துவர, இருவரும் மூல நிதி வைத்தனர். அன்று மோகனம் செய்த பாகத்தின்படியே, தினம் தினம் பொங்கல் நிவேதனம் நடக்கும். இதில் ஒரு பாகம் பக்தருக்கு வினியோகம் ஆகும்.

இன்றும் அவ்வாறே நடந்து வருவதாகக் கேள்வி. வினியோகம் ஆனதுபோக, எஞ்சியது விலைக்கு விற்கப்படும். அந்நாளில் முனையதரையன் என்பான் அமைத்துப்போன கட்டளை. ஆதலின் முனையதரையன் பொங்கல் என்று சொல்லப்பட்டது. இப்போதோ முனியோதரன் பொங்கல் என வழங்குகிறது. முனையதரையன் முனியோதரன் ஆகிவிட்டான்!

பரந்தாமன் பரிந்தேற்ற பொங்கலமுதை வாங்கிப் புசித்தல் பாக்கியமே. சோழ மண்டல சதகம் பாடிய ஆத்மநாத தேசிகர் என்பார் அந்நிகழ்ச்சியை இவ்வாறு குறித்துள்ளார்:

புனையுங்குழலாள் பரிந்தளிந்த
பொங்கல் அமுதும் பொரிக்கறியும்
அனைய சவுரி ராஜருக்கே ஆம்
என்று அருந்தும் ஆதரவின்,
முனையதரையன் பொங்கல் என்று
முகுந்தற்கு ஏறும் முதுகீர்த்தி
வனையும் பெருமை எப்போதும்
வழங்கும் சோழமண்டலமே!

அந்நிகழ்ச்சி நெடுங்காலம் மக்களின் மன ஏட்டிலேயே இருந்து வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னம், அதனைப் பா வடிவில் அமைத்து வைத்த பெருமை அத்தேசிகரைச் சாரும்!

ஆசுகவி காளமேகம் என்பார் ஒரு சமயம் அத் திருக்கண்ணபுரம் சேர்ந்தார். அச்சமயம் அர்த்த ஜாம வேளை. அவருக்குப் பசி எடுத்தது. பொங்கலமுதின் பெருமையைப் பேசிக்கொண்டு சிலர்



செல்லுவதை அவர் அறியலானார்; உடனே அந்த ஆலயத்துக்கு ஏகினார். வழியிலே மழை பிடித்துக் கொண்டது. விரைந்து சென்றார் அவர்; மழைக்கு ஒதுங்க இடம் வேண்டினார் ஆலய அர்ச்சகனை.

மழைக்கால் இருளினுக்கு அஞ்சி, அர்ச்சகன் அந்த ஆலயக் கதவைச் சாத்தலானான். உடனே அக்கவினார் பெருமான், "கன்னபுரமாலே! கடவுளிலும் நீ அதிகம்!" என்றார். நம்பியான் அது கேட்டு, களிப்பு மிகுந்து, அவருக்கு இடங்கொடுத்தான்; இனிய பொங்கலமுதும் பரிந்தளித்தான்.

முதலிலே நம்பியான் தாழிட்ட தாபம். பிறகு அவன் அமுதளித்த ஆனந்தம். இரண்டும் கூடிக் கொள்ளவே. நிந்தாஸ்துதியாக அவர் பாடினார். நையாண்டியிலும் ஒரு நயம் இருக்கும். நிந்தையினூடே துதியே துலங்கும்! அப்பாடல் வருமாறு:

கன்னபுர மாலே!
  கடவுளிலும் நீ அதிகம்!
உன்னிலுமோ யான் அதிகம்!
  ஒன்றுகேள்;—முன்னமே
உன் பிறப்போ பத்தாம்!
  உயர்சிவனுக்கு ஒன்றும் இல்லை;
என் பிறப்பு எண்ணத் தொலையாதே!

மற்றைநாள் அவர் திருச்செங்காட்டங்குடி சேர்ந்தார். பிள்ளைக் கறிபடைத்த சிறுத்தொண்டரது புதல்வன் சீராளன் என்பான் அப்பதியில் தான் உயர்த்தெழுந்து ஓடிவந்தான் என்பர். அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீதும் அவர் நிந்தாஸ்துதியே பாடினார். அதில் திருக்கண்ணபுர நிகழ்ச்சியும் தென்படும்.

கண்ணபுரம் கோயில்
  கதவடைத்துத் தாழ்போட்டார்;
மண்ணை உண்டார், வெண்ணெய்
  உண்ட மாயனார்;—எண்ணும்
சிரக்கப்பரை ஏந்திச்
  செங்காட்டில் ஈசர்
இரக்கப் புறப்பட்டார் என்று!

செங்காட்டில் சிவபெருமான் பிச்சையெடுக்கப் புகுந்தார் பிள்ளைக்கறி விரும்பி. அதுகேட்ட மாயனார் மண்ணை உண்டார்; கண்ணபுரக் கோயில் அர்ச்சகனே கதவடைத்தான் என்பது வெளிப்படையான பொருள். இனி அக்கண்ணபுர விஷயமாக ஆழ்வாரின் இரு பாசுரங்களுடன் கட்டுரையை முடிப்போம்.

குலசேகர ஆழ்வார் அத்தலத்துப்பெருமானை இராமபிரானாக எண்ணித், தாலாட்டுவதாக ஒரு பதிகம்பாடி இருக்கிறார். அப் பத்துப் பாடல்களில் முதல் பாடல் இது:—

மன்னு புகழ்க் கௌசலை தன்
  மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன் முடிகள்
  சிந்துவித்தாய்! செம்பொன் சேர்
கன்னி நன்மாமதிள் புடைசூழ்
  கணபுரத்து என் கருமணியே!
என்னுடைய இன்னமுதே!
  இராகவனே! தாலேலோ!

திருமங்கையாழ்வார் அக்கண்ணபுரத்து அம்மானை அடைக்கலமாகக்கொண்டு பாடியிருப்பது:—

பெற்றாரும் சுற்றமும் என்று
  இவை பேணேன் நான்;
மற்று ஆரும் பற்றுஇலேன்;
  ஆதலால் நின் அடைந்தேன்;
உற்றான் என்று உள்ளத்து வைத்து
  அருள் செய் கண்டாய்,
கற்றார் சேர் கண்ணபுரத்து
  உறை அம்மானே!

வாசகர்களுக்கு

எமது

மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்

இடமின்மையால் நேபாள கடிதத்தின் தொடர்ச்சி இவ்விதழில் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் வெளிவரும்.

ஆசிரியர்

SOLAR WORKS

12, THAMBU CHETTY STREET, MADRAS-1

Manufacturers of

All kinds of Envelopes, Cloth lined Bags & Account Books

PRINTERS & BINDERS

Rates Moderate-Highclass workmanship

Envelopes out of foreign manilla Paper, available from ready stocks at very competitive rates.

•

Suppliers to Railways, Corporation of Madras, Postal Dept., Banks, Insurance Companies & other Public and Commercial Offices.


பறிக்காத
ரோஜா

ஆர். சுப்பிரமணியன்

எனக்கு வயது இருபத்தெட்டு ஆகிறது. வாலிபப்பருவம் என்னும் பாலத்தில் முக்கால் வாசிக்குமேல் தாண்டியாயிற்று. முப்பதைத் தாண்டிவிட்டால் என்னைப் பின்தொடர்ந்துவர யாருக்கும் விருப்பம் இருக்காது. ஆனால் இப்போது பூவைச் சுற்றும் வண்டுகளைப்போல என்னைச் சுற்றிச் சுற்றிப் பெண்களைப் பெற்றவர்கள் வலம் வருகிறார்கள். உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கலாம். இவ்வளவுகாலம் எப்படித் தனிமரமாக நின்றேன் என்று அதிசயப் படலாம். இவ்வளவு தாக்குதல்களையும் லட்சியம் பண்ணாமல் பிரம்மசரியக் கோட்டையின் கதவை இன்னும் எப்படித் தாழிட்டு வைத்திருக்கிறேன் என்று நினைக்கலாம். ஆனால் எனக்கு ஒன்றுமே ஆச்சரியமாக இல்லை; வியப்பாகவுமில்லை. சொல்லப்போனால் இது நானாகத் தெரிந்தெடுத்துக் கொண்ட பாதையல்லவா? என் கதை உங்களுக்குத் தெரியாது. அதனால் தான் என் போக்கு உங்களுக்கு விசித்திரமாக இருக்கிறது.

ஐந்தாறு வருஷங்களுக்குமுன் ஒருநாள், அப்போதுதான் நான் காலேஜ் படிப்பை முடித்துக் கொண்டு வேலைக்கு வந்திருந்தேன். மனோரஞ்சிதம் இருக்குமிடத்தை யாரும் விளம்பரப்படுத்துவதில்லை. காற்றில் கலந்து அதன் மணம் அறை முழுதும் கமழ்கிறது. என் இருப்பிடமும் அப்படித்தான். என்னையறியாமல் எந்த எந்த மூலை முடுக்குகளுக்கெல்லாமோ எட்டியிருந்தது. என் மாமாவைத் தேடிக்கொண்டு யாரெல்லாமோ வந்தார்கள்.

பொழுது போகாமல் சாயங்காலம் உட்கார்ந்திருந்தேன். நண்பன் ரகு என்னுடன் உட்கார்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தான். போகும் போது மேஜைமேலிருந்த என் போட்டோவைக் கையில் எடுத்துக்கொண்டு போக முயற்சித்தான். நான் சட்டென்று அவன் கையைப் பிடித்தேன்.

"என்ன விஷயம்? என் போட்டோ உனக்கு எதற்கு?"

"எனக்கு இல்லை. வேறு ஒருவருக்கு."

"அது யார் அந்த ஒருவர்?"

"அதைச் சொல்ல முடியாது. இந்தப் போட்டோ அவருக்குத் தேவை."

"சொன்னாலொழிய என்னால் கொடுக்க முடியாது."

"புரொபஸர் கிருஷ்ணசர்மா உன் போட்டோவைக் கேட்டார். அவர் பெண் ஜயந்தியை நீ பார்த்திருக்கிறாயா?"

"இல்லை."

"அவளும் உன்னைப் பார்த்ததில்லை. அதற்காகத் தான் உன் போட்டோ இப்போது அவசியமாக இருக்கிறது. உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம்."

நான் மறுக்கவில்லை. புரொபஸரை எனக்குத் தெரியாது. அவர் பெண்ணையும் எனக்குத் தெரியாது. அவளை நான் பார்த்ததுமில்லை. ஆனால்



முதன்முதலாக அவள்தான் எனக்கு வந்து என் காதுவரை எட்டியவளு.

ஜயந்தி! என்னை அறியாமல் ஒரு லாகிரி என்னை வந்து சூழ்ந்தது. அவளை நான் பார்க்க வில்லை. அவள் குரலை நான் கேட்டதில்லை. அவளைப் பற்றிய எந்த அபிப்பிராயமும் என் மனத்தில் இல்லை. ஆனாலும் என் மனம் என்னையறியாமல் அவளைக் கற்பனை செய்துபார்க்க விரும்பியது.

மறு நாள் ரகு வந்தான்.

"என் போட்டோ என்ன ஆயிற்று?" என்று கேட்டேன்.

"சேரவேண்டிய கைகளில் சேர்ந்து விட்டது".

என்னையும் மீறி என் உடல் புல்லரித்தது.

"அவள் என்ன சொன்னாள்?"

"பெண்ணின் மனம் உனக்குத் தெரியாது. அவளைப் படைத்தவனே அவளைப் படைத்த பிறகு அவள் என்ன நினைக்கிறாள் என்று சொல்ல முடியாது. உனக்கும் அவளுக்கும் நடுவே நான் ஒரு அரைகுறைப் பாலம். நான் என்னவென்று சொல்ல?"

என் மனத்தில் ஒரு கற்பனைச் சித்திரம் இழைஓடியது. இளமை பொங்க, எழிலை அலட்சியமாக ஏற்றுக்கொண்டிருக்கும் ஒரு பெண். அவள் கையில் ஒரு போட்டோ இருக்கிறது, அதைப் பார்க்கும் போதெல்லாம் அவளை மீறி வெட்கம் வந்து சூழ்ந்து கொள்ளுகிறது, ஆனாலும் அவள் உதட்டில் அரும்பும் அந்தப் புன்னகை! அதை எடுத்துப் பார்க்கும்போதே அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொள்கிறது. இன்னதென்று விவரிக்கவொண்ணாத உணர்ச்சி உள்ளம் முழுதும் பரவுகிறது. யாரோ வரும் காலடியோசை கேட்கிறது. போட்டோவை அவள் மறைக்க யத்தனிக்கிறாள். ஆனால் அது எப்படியோ வந்தவருக்குத் தெரிந்து விடுகிறது. அவள் முகம் குங்குமம் போலச் சிவந்துவிடுகிறது.

பெண்ணைப் பார்க்க நான் போகவில்லை. மாமாவுக்கு அடங்கிய பையன் நான். அந்தக் காலத்திலிருந்து அனாதையாக இருந்த என்னை எடுத்து வளர்த்தவர் மாமா. அவர் விருப்பத்தை மீறி எதுவும் செய்ய எனக்குத் தைரியம் இல்லை.

மாமாவும் மாமியும் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். எனக்குப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலைவிட, பார்க்காமல் இருப்பதில் உள்ள ஆவலே அதிகமாக ரஸிக்கக்கூடியதாக இருந்தது.

"பெண் நல்ல நிறம். லக்ஷணமான முகம். குடித்தனத்துக்கு எடுத்த சுபாவம்." என்று மாமி சொன்னாள்.

"அவர் நல்ல சொத்துக்காரர். நன்றாகச் சீரோடு கல்யாணம் சம்பிரமமாகச் செய்வார். நீ கொடுத்து வைத்தவன்." என்று மாமா சொன்னார்.

பள்ளத்தை நோக்கி ஓடும் தண்ணீரைப் போல, என் மனம் அவளை நாடியது. அதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. என்னைத் தெரிந்துகொண்ட ஒரு பெண் சம்மதப்பட்டுத் தன் புக்ககத்து மனிதர்களைத் திருப்திசெய்ய முன் வந்த ஒரு பெண்—ஏன் என்னையே கூட வந்து அவளைப் பார்த்திருக்கக் கூடுமென்றுகூட அவள் எண்ணியிருக்கலாம்—அந்தப் பெண்ணின் உருவம், அவளுடைய எழில் முகம், வெட்கமும் சந்தோஷமும் சூழத் தலை குனியும் அவள் தோற்றம் எனக்கு மட்டும் புலப்படவில்லை. காணாத அந்த உருவத்தைக் கற்பனை செய்வதில் மட்டும் என் மனம் சலிக்கவில்லை.

தைமாதம். முதல் வாரம். நல்ல பனிக்காலம். மங்கநல்லூர் ரயில்வேஸ்டேஷனில் பனி அடர்ந்து கிடந்தது. தூங்கிவழியும் ஸ்டேஷன் மாஸ்டரைத்தவிர விடியற்காலை நேரத்தில் முக்கால்வாசிக்கு மேல் எண்ணெய் காலியாகித் தேய்ந்த நிலவைப்போல ஒளி குன்றி நிற்கும் பெட்ரோமாக்ஸ் விளக்கும், தூங்கியாடும் புளிய மரங்களுமே எங்களை வரவேற்றன.

ஸ்டேஷனுக்கு வெளியே வரவேற்பு அபாரமாக இருந்தது. எல்லோரும் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். கிராமத்து ஜனங்களைப் பார்க்கவே எனக்கு வேடிக்கையாக இருந்தது. கிருஷ்ண சர்மா சிதம்பரத்தில் புரொபஸராக இருப்பவர். ஆனாலும் கல்யாணத்தைக் கிராமத்திலேயே நடத்த நினைத்தார்.

பகல் முழுதும் என்னை மறந்து நினைவுகளில் ஈடுபட்டிருந்தேன்.

தகதகவென்று உடலை அனற்றும் ஹோம நெருப்பு; புகைந்து புகைந்து கண்ணை அவிக்கும் நெய் மணம் கலந்த வரட்டித் துண்டுகள்; கணகணவென்று காதில் ஒலிக்கும் மந்திர உச்சாடனங்கள். இவ்வளவுக்கும் ஊடே—அவளை—மை கரைந்து கலங்கிப்போன அவள் கண்களை நான் பார்க்கிறேன். ஆனால் என்னைப் பார்க்க அவளுக்குத் தைரியம் வருவதில்லை. என் கையைப் பிடித்துக்கொள்ள அவளைத் தூண்டுகிறார்கள். நான் கையைப் பின்னால் மறைத்துக்கொள்கிறேன். நடுங்கும் கைகளுடன் அவள் தேடி என் கையைப் பிடித்துக்கொள்ளுகிறாள். அவளையும்மீறி அப்போது அவள் உதடுகளில் தவழவேண்டிய அந்தப் புன்னகை வெட்கத்துக்கிடையே மறைந்துபோகிறது.

சர சரவென்ற புடவை ஒலி உணர்ச்சிமிகுதியினால் சில்லிட்டுப்போன கால்கள், செம்பஞ்சுக் குழம்பேறிய பாதங்கள். கட்டைவிரலைப் பிடித்து அம்மியில் வைக்கிறேன். கை கால் விரலைப்

பிடித்து இழுக்கிறது. ஆனால் உணர்ச்சி மனத்தை எங்கேயோ இழுக்கிறது. நிமிர்ந்து பார்க்கிறேன் அவளை—அவள் கண்களை—சந்திக்கிறேன். ஆனால் அந்த முகம் எனக்கு இன்றும் புலனாகவில்லை. இன்னும் அவளை நான் பார்க்கவில்லை.

சாயங்காலம் என்னை எழுப்பிவிட்டார்கள். என் கற்பனை சிதறி ஓடியது. மாயவரத்திலிருந்து கார்கள் வந்திருந்தன. புஷ்பங்களால் காரை அலங்காரம் செய்திருந்தார்கள். அந்தக் குவியல்களுக்கே நடுவே நான் உட்கார்ந்திருந்தேன். நாதஸ்வர சப்தம் மங்கி ஒலித்து முன்னேறிக்கொண்டிருந்தது. அதைப் பின்தொடர்ந்துசென்ற 'காஸ்' விளக்குகளின் ஒளியில் மாமாவின் பட்டையான சரிகை அங்கவஸ்திரம் பளபளவென்று மின்னியது. பின்னால் பெண்களின் கேலியும் சிரிப்பும் தெளிவாகக் கேட்டன. பனியின் குளிரில் லேசாக உடல் புல்லரித்தது. என்னுடைய கார் ஒரு புஷ்பக்கடை நகர்ந்துவருவதைப்போல் நகர்ந்துகொண்டிருந்தது. எத்தனையோ கண்கள் என்னை நோக்கின. என்னுடைய கண்கள்மட்டும் இரண்டு கண்களையே தேடின.

இரவு தூங்க முடியவில்லை மனம் தூங்க மறுத்தது. வானத்தில் பூத்திருந்த நட்சத்திர மலர்களைப் போல, மணம் கமழும் நினைவுகள் மனத்தில் மண்டிக்கிடந்தன. கண்ணிருந்தும் துழாவும் குருடனைப்போல, அந்த எண்ணக் குவியல்களில் நான் தடுமாறிக் கொண்டிருந்தேன், என் கண்கள் மூடியிருந்தன. ஆனால் என் அகம் விழித்திருந்தது. என்னைச் சுற்றி எவ்வளவோபேர் இருந்தார்கள், என் காதுகளில் கேலியும் கும்மாளமும் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. ஆனாலும் நான் தனியாகவே இருப்பதாகவே உணர்ந்தேன். என் மனம் அவள் உறவை நாடியது.

விடிந்த பிறகு எழுந்தேன். பத்து மணிக்கு முகூர்த்தம். என மனம் படபடத்தது. புகைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தேன். மணி எட்டரை.

மாமாவும் கிருஷ்ண சர்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நகைகளெல்லாம் வந்தன. சர்மா எல்லாவற்றையும் பெருமையோடு காட்டிக் கொண்டிருந்தார். மாமா நகைகளைக் கையில் எடுத்துக்கொண்டார். சர்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு பக்கத்தறைக்குப் போனார். எனக்குக் கொஞ்சம் நேரம் ஓய்வு கிடைத்தது. நானும் அவர்களோடு போனேன்.

மாமா தம்முடன் எங்கள் வீட்டுத் தட்டானைக் கூப்பிட்டுக்கொண்டு வந்திருந்தார். நகைகளை எல்லாம் மாற்று உரைத்துப் பார்த்தார்கள். தட்டான் சந்தோஷமாகச் சொன்னான். "நல்ல தங்கம். அருமையான நகைகள்."

மாமாவின் முகத்தில் களை தாண்டவமாடிற்று. சர்மாவைப் பார்த்துத் திருப்தியோடு பேசினார். நகைகளைப் பார்த்தாயிற்று. சீக்கிரம் பந்தலுக்குப் போகலாம். முகூர்த்த நேரம் தவறிவிடப் போகிறது." என்றார்.

சர்மா மௌனமாக இருந்தார். பிறகு மெதுவாகப் பேசினார். "வாருங்கள், சாப்பிடப் போகலாம்."

"சாப்பிடவா? முகூர்த்தத்துக்கு நேரமாகிறது. அப்புறம் சாப்பிட்டால் போகிறது"

"இல்லை. முதலில் சாப்பிட வாருங்கள்" என்று சர்மா வற்புறுத்தினார்.

வேறு வழியின்றி எல்லோரும் சாப்பிட்டோம்.

தாம்பூலம் கொடுத்துக் கொண்டே சர்மா சொன்னார்:

"ரொம்ப சந்தோஷம். வண்டிகளெல்லாம் காத்துக் கொண்டிருக்கின்றன, மன்னிக்கவும். எல்லோரும் சாமான்களை ஒன்றையும் விட்டுவிடாமல் எடுத்துக்கொண்டு ரயிலுக்குப் போங்கள்."

மாமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன ஐயா விளையாடுகிறீர்" என்று உறுமினார்.

"மன்னிக்க வேண்டும். எனக்கும் கொஞ்சம் மரியாதை உண்டு. நான் என் பெண்ணுக்குச் செய்துபோட்ட நகைகளில் நீங்கள் சந்தேகப் பட்டீர்கள். என்னுடைய நகைகளைக்கூட நம்பாதவர்களை நம்பி என்னுடைய பெண்ணை அவர்கள் கையில் ஒப்புவிக்கக்கூடிய துணிவு எனக்கு இல்லை."

மாமா என்னென்னவோ கத்தினார். ஒரே அமர்க்களம். எல்லோரும் ஸ்டேஷனுக்குத் திரும்பும்போது மணி இரண்டு. தூங்குமூஞ்சி மரங்கள் இலை ஆடாமல் நின்றன. ஒருவர் முகத்திலும் களை இல்லை. எங்கேயும் சலனத்தின் அறிகுறிகூட இல்லை. ஆனால் என் மனம் மட்டும் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

நாட்கள் ஓடின. மாதங்கள் கடந்தன. எல்லோரையும் பொறுத்தவரையில் அந்தச் சம்பவம் அநேகமாக மறைந்துபோய்விட்டது. மாமாவுக்குக் கோபம் வரும் என்று அதைப் பேசுபவர்கள் ஒருவரும் இல்லை.

ஆனால் என்னால் அந்த நிகழ்ச்சிகளை மறக்க முடியவில்லை. கலத்திலிருந்த பால், பொங்கி அடுப்பிலேயே விழுந்து தீய்ந்துபோயிற்று அதை அருந்த எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. அதன் தன்மை என்ன என்பதை அறியக்கூட எனக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று. அவள் கரங்களை நான் தீண்டவில்லை. ஆனால் என் கரங்களை விஷ ஸர்ப்பம் தீண்டியதுபோல இரவுகளில் அமைதியற்றுத் தவிதவித்தேன். அவள் உருவம் என் மனதில் பதியவில்லை. அவளைப்பற்றிய எந்த அபிப்பிராயமும் என் மனதில் ஏற்படவில்லை. ஆனாலும் என்னால் அவள் நினைவை என் மனத்திலிருந்து அழிக்கமுடியவில்லை.

குலேந்துபோன நினைவுகளினூடே மங்கிய சித்திரங்கள் எழும். அவைகளை என்னால் உதறித் தள்ளமுடியாது.

மழைக்காலம். கூடல்வாய்முனையில் தண்ணீர் சொட்டிக்கொண்டிருக்கிறது, ஐப்பசி மாதத்து வானம் இருண்டு கறுத்துப் போயிருக்கிறது. மனமும் அதைப்போலத்தான் இருண்டுகிடக்கிறது. விடிந்தால் தீபாவளி. எங்கேயோ மனம் அலை பாய்கிறது. எதிர்த்த வீட்டில் மாப்பிள்ளை வரப் போகிருர் என்பதற்காக அமளிபடுகிறது. ஆனால் அந்த வீட்டில் அமைதிதான் நிலவுகிறது. இருண்ட காமரா உள். அதில் தனியாக நிற்கும் ஒரு பெண் உருவம்; அவள் கைப்பெட்டியி லிருந்து எதையோ தேடி எடுக்கிறது. அந்த இருட்டில் யாருக்கும் தெரியாமல் அவள் அந்த உருவத்தின் சாயையைக் குனிந்து பார்க்கிருள். யாரோ வரும் சப்தம் கேட்கிறது. போட்டோ வைத் தலைப்பில் மறைத்துக் கொள்கிருள். ஆனால் உணர்ச்சிகளை மறைக்கமுடியவில்லை. தகப்பனுர் வாசற்படியில் நிற்கிருர்.

"என்ன விஷயம்? சொல்லக்கூடாதா அம்மா?"

"ஒன்றுமில்லையே அப்பா!" அவளையறியாமல் அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிவருகிறது.

பெற்று வளர்த்த பாசம் அவரை உருக்குகிறது. யாருக்கும் தெரியாமல் அவர் கண்ணைத் துடைத்துக்கொள்கிருர்.

இன்னொரு சித்திரம். ராத்திரி சாப்பிட்டுவிட்டு முன் வாயிலில் தகப்பனுரும் பெண்ணும் உட்கார்ந்திருக்கிருர்கள். ரேடியோவில் நாதஸ்வரம் இசைக்கிறது. மனத்தை எங்கேயோ இழுத்துச் செல்லும் கல்யாணி ராகம். அவர் கண்ணை மூடிக் கொள்கிருர். அவரை யறியாமல் அவர் கண்களி லிருந்து நீர் பெருகுகிறது, அவள் மனம் தடுமாறு கிறது. தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் அவள் மறந்துவிடுகிருள். அவள் அகக்கண் முன்னுல் தெரிவது, புஷ்பங்களைச் சுமக்கும் ஒரு மோட்டார், காஸ்லைட்டுகள், சந்தனம் தெளித்த மாலைகள், பேச்சு, கேலி, கும்மாளம், புதுப்புடவைகளின் பளபளப்பு; சிறு குழந்தைகளின் கேலி விளையாட்டு. சட்டென்று எழுந்து ரேடியோவை மூடுகிருள்.

"ஏனம்மா மூடிவிட்டாய்?"

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவளால் எதுவும் கேட்க முடியவில்லை.

என்னை மறந்து இந்தச் சித்திரங்களில் லயித்திருப்பேன். இவைகளின்றி என் மனம் அமைதி அடைவதில்லை. பசுமையான இலைகளின் நடுவே புஷ்பிக்கும் மலர்கள் கிழே வாடி விழுந்து விடுவதால் செடி மலர்களை விரும்பாமற் போவதில்லை. இலைகளைக் காட்டிலும் மலர்களிடமே அதன் ஆர்வம் அதிகரிக்கிறது. அதைப் போலப் பலனில்லாது வந்து மறைந்துபோகும் இந்தச் சிந்தனைச் சித்திரங்கள் என் மனதில் விசேஷமாக எந்தப் பலனையும் கொடுக்கவில்லை. ஆனாலும் மற்ற எல்லா நினைவுகளைக் காட்டிலும் இவைகளிடமே என் மனம் லயித்தது.

எத்தனையோ பேர் வந்தார்கள். எத்தனையோ பெயர்கள் என் காதில் விழுந்தன. ஆனால் நான் கல்யாணத்திற்கு உடன்படவில்லை. என் மனம் யாரையும் நாடவில்லை.

காற்றின் அசைவொலியில் அவள் பேச்சின் முணுமுணுப்பைக் கேட்டேன். நீரின் சலசல வென்ற சப்தத்தில் அவள் சிரிப்பின் சப்தம் கேட்டது. வானத்தில் சுருண்டு நிற்கும் மேகங்கள் அவள் கூந்தலை எனக்கு நினைவுறுத்தின. ஆனால் அவள் முகத்தை என்னால் அறியமுடியவில்லை. நான் பார்த்தறியாத அந்த முகம் என்னை ஆட்டி வைத்தது. அந்தச் சுழற்சியின் வேகத்தில் நான் நிலை தடுமாறினேன்.

நான்கு வருஷங்கள் ஓடிவிட்டன. சென்னைக்கு ஒரு காரியமாகப் போயிருந்தேன். வரும்போது மாமியை அழைத்துக்கொண்டு திரும்பிவந்தேன். ரயில் ஓடிக்கொண்டிருந்தது. நான் தலையை நீட்டி வெளியே ஓடும் மரங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

வண்டி விழுப்புரம் தாண்டிவிட்டது. இருட்டில் ஏதோ ஒரு ஸ்டேஷன், பெயர்கூடத் தெரியாது. அங்கே நிற்கவேண்டி நேர்ந்த தன் தலைவிதியை நினைத்து ரயில் பெருமூச்சு விட்டுக் கொண்டே நின்றது. நல்ல பின்னிரவு. நான் தலையை வெளியே தொங்கவிட்டுக் கொண்டிருந்தேன்.

ரயில் புறப்படும்நேரம், தூரத்தில் மணி அடித்தது. சட்டென்று ஒரு குரல் கேட்டது.

"அம்மா! இதோ இங்கே இடம் இருக்கிறது!"

என்னையறியாமல் அந்தக் குரல் என்னை உலுக்கியது. என்னுல் அந்த உணர்ச்சியை உதறித் தள்ள முடியவில்லை. நான் கேட்டறியாத அந்தக் குரல் என்னுள்ளே ரீங்காரம் செய்தது.

அவர்கள் எங்கள் வண்டியில் ஏறினுர்கள். மாமி தூங்கிக் கொண்டிருந்தாள். எனக்குத் தூக்கம் வரவில்லை. நான் அவர்களைப் பார்த்தேன். அவளைச் சுற்றி இரண்டு குழந்தைகள். பக்கத்தில் அவளுடைய தாயார். நான் அவர்களுக்கு இடம் தேடிக் கொடுத்தேன்.

பெண்களை ஏறெடுத்துப் பார்க்கும் வழக்கம் கூட எனக்கு இல்லை. யாரிடம் பேசவும் முயற்சித்ததில்லை. ஆனால் என் மனம் அப்போது ஏனே அலைபுரண்டது. அவளோடு பேசவேண்டுமென் கிற ஆர்வம் என்னை அறியாமலேயே எழுந்தது. அவளுடையகுரலை மறுபடியும் கேட்கவேண்டு மென்கிற ஆவலை என்னால் அடக்கமுடியவில்லை.

அந்தக் குரல்! "இடம் இருக்கிறது!" என்று சொல்லி அழைத்த அந்தக் குரல்! அது ஏனே



என்னுடைய உள்ளத்தில் வெளியேற இயலாமல் பொங்கிப் பெருகிக்கொண்டிருந்த உணர்ச்சிகளைக் கூவி அழைத்தது. நான் கேட்டறியாத கண்டம் நான் அனுபவித்திராத குரலிசைத்த நாதம் என்னுள் கலந்தது. சாம்பிராணிப் புகைசூழ்ந்த அறையின் மணத்தில் திக்குமுக்காடுபவனைப் போல நானும் அந்த நினைவுகளில் மனம் தடுமாறினேன்.

இரவு முழுவதும் இரண்டு பேரும் என்னென்னவோ பேசிக்கொண்டு வந்தோம். நான் அவள் பேச்சைக் கவனிக்கவில்லை. பேசிய அதரங்களையே பார்த்தேன். பார்வையைக் கவனிக்கவில்லை. பார்த்த கண்களிலேயே லயித்துப் போயிருந்தேன்.

அவள் அம்மாவைக் கூப்பிட்டுக்கொண்டு ஊருக்குப்போகிறாள். அவள் தாத்தாவிடம் போகிறாள். சென்னையில் மெடிகல் காலேஜில் சேர்ந்திருக்கிறாள். லீவுக்கு ஊருக்கு வந்திருக்கிறாள். இவ்வளவும் அவள் சொன்னாள். நான் எதுவும் சொல்லவில்லை. சொல்வதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?

மாயவரம் ஸ்டேஷன் வந்தது. நாகபட்டினத்துக்கு, இறங்கி வண்டி மாறவேண்டும். அவளும் எங்களோடு இறங்கிவந்தாள். ஒரே கூட்டம். மூன்றாம் வகுப்பில் நிற்கக்கூட இடமில்லை. இரண்டாம் வகுப்பில் ஏறி உட்கார்ந்தோம்.

கால்மணி நேரம் கழித்து நான் எல்லோருக்கும் டிபன் வாங்கிக்கொண்டுவந்தேன். என்னுடைய

வகுப்பிற்கு முன் ஒருசிறு யுத்தமே நடந்துகொண்டிருந்தது. "இந்த ஸீட் நான் ரிஸர்வ் செய்தது, நீங்களெல்லாம் இறங்கிவிடவேண்டும்" என்று ஒரு துரை வாதாடிக்கொண்டிருந்தான்.

நான் என்னுடைய கஷ்டங்களை யெல்லாம் சொன்னேன். அவன் கேட்கவில்லை. வேறுவழியின்றி நான் சாமான்களை எடுக்கப் போனேன்.

"நில்லுங்கள்!" என்று அவள் சீறினாள். "உங்களுக்கு அவ்வளவு தைரியமில்லையா? அவர் வேண்டுமானால் நம்முடன் ஏறிக்கொள்ளட்டும். இஷ்டமில்லாவிட்டால் போகட்டும். நாம் இறங்கக்கூடாது." பேசிக்கொண்டே அவள் கீழே இறக்கின பெட்டியை எடுத்து உள்ளே வைத்துவிட்டாள்.

அவள் தைரியத்தைக் கண்டு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

துரை கார்டை அழைத்துக்கொண்டு வந்து பார்த்தான். அவள் யாருக்கும் இடம் கொடுக்கவில்லை. அவளோடு சேர்ந்து நான் பேசியபோது எனக்கு இன்பமாக இருந்தது. எனக்காக அவள் வாதாடியபோது ரம்மியமாக இருந்தது.

அந்த வண்டியைவிட்டு நாங்கள் இறங்கவில்லை. அவளுடனேயே நானும் இருந்தேன். குழந்தைகள் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தன. அவைகளுக்கு அவள் டிபன் கொடுத்தபோது அவைகள் அவளை எவ்வளவோ ஆவலோடு அணைத்துக்கொண்டன.

நெருங்கமுடியாத ஏதோ ஒரு மகத்தான சக்தி அவளைச் சூழ்ந்திருந்தது. சர்வசாதாரணமான உடையிலும் அவள் ஒரு ராணியின் கம்பீரத்தோடு விளங்கினாள். பொங்கிவரும் இளமையை அவள் அலட்சியமாக ஏற்றுக்கொண்டிருந்தாள். காம்பில் பூத்த புது மலரைப்போல அவள் எழில் ஒளி வீசியது. இலைகளினின்று வெளியே தலையை நீட்டி நிமிர்ந்து பார்த்து மணம் வீசும் மலரைப் போல அவள் தன் சமூகத்தினின்றும் தனித்து வெளியே முற்பட்டு நின்றதாக எனக்குத் தோன்றியது.

நான்கு வருஷங்களாக அநுபவித்திராத தோல்வியின் உணர்ச்சியை நான் அப்போது அநுபவித்தேன்.

ரயில் ஓடிக்கொண்டிருந்தது, மற்றச் சமயங்களில் நான் அந்தப் பிரயாணத்தை எவ்வளவோ வெறுத்திருப்பேன். ஆனால் அப்போது அது எனக்குச் சுவர்க்கமாக இருந்தது.

என்னுள் நான் அதுவரை கேட்கத் துடித்துக்கொண்டிருந்த குரலையே நான் கேட்பதாகத் தோன்றியது. என் இதயத்தின் மறைவில் ஏதோ ஓர் உள்ளுணர்வு என் கண்கள் அதுகாறும் தேடி அலைந்த கண்களையே நான் பார்ப்பதாகச் சொல்லிற்று. என்றால் கண்டுபிடிக்க முடியாத புதை பொருள் என் முன்னே எழில் பரப்பி நிற்பதைப் போன்ற உணர்வு என்னை உலுக்கியது,

"அடுத்த ஸ்டேஷனில் நான் விடைபெற்றுக்கொள்கிறேன்." என்று சொன்னாள்.

"அதற்குள்ளாகவா?" என்றேன், என் மனம் திடுக்கிட்டது.

"நான் இறங்கவேண்டிய இடத்தில் தானே இறங்க வேண்டும்?" என்று அவள் சிரித்தாள். என்னால் சிரிக்க முடியவில்லை.

வண்டியின் வேகம் குறைந்துகொண்டே வந்தது. நான் தலையை வெளியே நீட்டி அவளை வரவேற்கும் அந்த ஸ்டேஷனைப் பார்த்தேன்.

அமைதியான ஸ்டேஷன். தூங்கி யாடும் புளிய மரங்கள். சிறுகச் சிறுக மறைந்து போகும் ஸ்டேஷனிலிருந்து பாம்பு போல வெளிப் படும் வண்டிப் பாதை. வெளியே ஒரு வண்டி காத்துக்கொண்டு நின்றது. மங்கநல்லூர்!

என்னை யறியாமல் என் மனம் படபடத்தது

"மன்னிக்கவேண்டும். உங்கள் பெயர்?"

'ஜயந்தி"

"தகப்பனார் பெயர்?"

"புரொபஸர் கிருஷ்ண சர்மா". அவள் இறங்கப்போனாள். நான் கேட்டேன்.

"என்னைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையே?"

'தெரியும், உங்களை நான் இதற்கு முன்னால் பார்த்திருக்கிறேன். வருகிறேன்!"

அவள் குழந்தைகளுடனும் தாயாருடனும் இறங்கி வண்டியில்போய் ஏறிக்கொண்டாள். நான் அந்த வண்டியையே பார்த்துக் கொண்டு நின்றேன். பெருமூச்சு விட்டுக்கொண்டு ரயில் புறப்பட்டது. எனக்குப் பெருமூச்சு விடக்கூடச் சக்தி இல்லை.

ஊருக்குப் போனதும் மாமாவைச் சந்தித்துப் பேசினேன். என் தைரியம் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவருக்கு என் முடிவில் சம்மதம் இல்லை. என்னென்னவோ இரைந்தார். அவரையும் மீறி மங்கநல்லூருக்கு வந்தேன்.

புரொபஸருக்கு என் வருகை ஆச்சரியமாக இருந்தது.

"ஜயந்தி!" என்று கூப்பிட்டார்.

உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL

The Secret of her charm

" நான்-பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியமளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம். என் அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன், தேகத்திற்கு குளுமையையும் அளிக்கிறது.

T. R. Rajakumari

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET - MADRAS. 1

என்னைப் பார்த்து அவள் புன்முறுவலுடன் கையெடுத்துக் கும்பிட்டாள். நானும் வணங்கினேன். என் உடல் புல்லரித்தது.

என்னுடைய தீர்மானத்தைச் சொன்னேன். அவள் என்ன பதில் சொல்வாளோ என்ற எண்ணம் என் மனத்தில் மீக்கூர்ந்து நின்றது. அவள் அதரங்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"மன்னிக்கவேண்டும். எனக்கு ஏற்கனவே கல்யாணமாகிவிட்டது."

நான் திடுக்கிட்டேன். "யாருடன்?"

"தேச சேவைக்கும் எனக்கும். படிப்பை முடித்துக் கொண்டு நான் அந்த ஒன்றில்தான் ஈடுபடுவதாக உத்தேசம். என் மனதைக் கலைக்காதீர்கள். ஒரு காலத்தில் கல்யாணத்திற்காக என் மனம் ஏங்கிற்று; இளகிற்று. ஆனால் இப்போது அந்த உருக்கம் இல்லை. திட சித்தமே இருக்கிறது. நான்கு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் என் கையில் மாலையை ஏந்திக்கொண்டு நின்றேன். அந்த மாலைக்கு உரியவரை நினைத்து என் மனம் எண்ணுவதெல்லாம் எண்ணிற்று. ஆனால் நான்கு வருஷங்களில் அந்த மாலை இருந்த இடம் தெரியாமல் கருகிப்போயிற்று. ஆனால் அதன் மணம் இன்னும் போகவில்லை. அது என்னுள்ளே சுழன்று கொண்டிருக்கிறது. அதற்கு என்றும் என் மனத்தில் இடம் உண்டு. உங்கள் வாழ்வு சந்தோஷமாக இருக்கவேண்டும். என்னை மன்னித்து விடுங்கள்."

அவள் முகத்தில் அலாதி ஒளி படர்ந்தது. நெருங்க முடியாத ஏதோ ஒரு மகத்தான சக்தி அவளைச் சூழ்ந்திருந்ததாக எனக்குத் தோன்றியது. சர்வசாதாரணமான அந்த நிலையிலும் அவள் எனக்கு ஒரு தெய்வமாகத் தோன்றினாள்.

வெறுங்கையனாகத் திரும்பி வந்து சேர்ந்தேன். ஆனால் என் மனதில் என்னால் விவரிக்க முடியாத ஏதோ ஒரு ஆறுதல் இருக்கிறது. நான் நான்கு வருஷங்களாகக் குருடனாக இருந்தேன். இப்போது கண்ணொளி பெற்றுவிட்டதைப் போன்ற உணர்ச்சி என்னுள் பொங்குகிறது. அன்று இரவு காரிருளில் "இதோ இடம் இருக்கிறது" என்று அவள் சொன்னாள். அந்தக் குரலை, அழைப்பை, அதன் இன்னிசையை என்னால் மறக்க முடியாது. என்றும் அவள் மனத்தில் எனக்கு இடம் இருக்கிறது. மாலை இல்லாமல் போனால் என்ன? அதன் மணம் இன்னும் அவள் மனத்தில் சுழன்று கொண்டிருக்கிறது.

ரோஜாச் செடி நிறையப் பூக்கிறது. எல்லாப் பூவையும் பறித்து மாலை கட்டுவதில்லை. முள்ளின் மேலேயே இருந்தாலும், சந்தோஷமாகப் பிரகாசமாக அழகும் ஒளியும் பரப்பி, வாடிக் கீழே விழுந்துவிடும் ரோஜாப் பூக்கள் இல்லையா? அவள் ஒரு பறிக்காத ரோஜா. அதைப் பறிக்க நான் ஆசைப்படவில்லை. காம்பிலேயே அதன் அழகு எனக்குப் புலனாகிறது. ●

அல்லயன்ஸ் வெளியீடுகள்

				ரு.	அ.	பை.
1.	மனோரஞ்சிதம்	....	காண்டேகர்	5	8	0
2.	கள்ளக் காதலி	....	,,	1	0	0
3.	விஷ விருக்ஷம்	....	பங்கிம்	3	8	0
4.	மிருணாளினி	....	,,	2	8	0
5.	ஜாவா யாத்திரை	...	டாகுர்	2	0	0
6.	போஸ்ட் மாஸ்டர்	...	,,	1	14	0
7.	லலிதா	...	சரத் சந்த்ரர்	1	4	0
8.	ஸௌதாமினி	....	,,	1	4	0
9.	உல்லாஸ வேளை	...	எஸ். வி. வி.	4	8	0
10.	ராஜாமணி	....	,,	4	0	0
11.	தோட்டக் கலை	....	ச. கு. கு.	4	0	0
12.	பழத் தோட்டம்	...	,,	2	0	0
13.	ஆடு வளர்ப்பு	....	,,	1	12	0
14.	தலைவர் ஜவாஹர்	....	தி. ஜ. ர.	3	8	0
15.	என் சரிதம்	....	காந்திஜி	3	8	0
16.	படித்த மனைவி	....	லக்ஷ்மி	2	0	0

விபரங்கட்கு:

அல்லயன்ஸ் கம்பெனி

P. B. 617, மயிலாப்பூர், சென்னை-4.

கர்நாடக ஸங்கீதம் — — ஒரு புதிய திட்டம் தேவை

சபரி

டிஸம்பர் மாதம் சென்னையில் இசை மாரி தோன்றும் காலம். வெள்ளச் சேதம் என்றுகூடச் சொல்லலாம். நகரத்தின் பல பாகங்களில் மகாநாடு, இசை "விழா", கூட்டங்கள், பிரசங்கங்கள், கச்சேரிகள்! மாபெருங் கொட்டகை, அதில் கொட்டை எழுத்துக்களில் வியாபார விளம்பரங்கள், மேடைகளில் கச்சேரி வித்துவான்கள், அவர்களைச் சுற்றிப் பிரமுகர்களாக விளங்கவேண்டும் என்ற ஆசையினால் உயர்ந்த கட்டணம் செலுத்தி, மேடையில் இடம்பெற்ற கனதனவான்கள், கீழே ஆடவரும் பெண்டிருமாக ஆடம்பரமான கூட்டம்! எங்கும் நடப்பதோ ஒரே கருத்தடங்கிய பேச்சு. "நமது ஸங்கீதத்திற்கு இணை இல்லை. அது மிகப் பழமையானது. (கரகோஷம்) அது தெய்வத் தன்மை உள்ளது. ஆனால் இப்பொழுது தரம் குறைந்து வருகிறது (கரகோஷம்) அதைத் தடுக்கவே இந்த மகாநாடு (கரகோஷம்)", கூட்டத்திலோ, நடக்கும் ஸங்கீதத்திலோ, காணும் தெய்வீகம், அம்மம்ம! குறைந்து வரும் தரத்தை உயர்த்துவதோ! கச்சேரி நிகழ்த்துவது ஒரு சிலரே. அவர்கள் பாடுவது எப்பொழுதும் திரும்பத் திரும்பப் பாடியதே. பார்க்கப்போனால் வருஷத்திற்கு வருஷம் குரலின் கணிசமோ, இனிமையோ குறைந்து வருகிறது ஒன்றே காணும் மாறுதல். முன்னேற்றம் பேச்சுமட்டுந்தான்.

இந்த "விழா"க்களின் பண வீக்கத்தை வளர்க்கப் பல முறைகள் உண்டு. அவைகளில் ஒன்று கச்சேரி விபரங்கள் அடங்கிய ஒரு புத்தகம் வெளியிட்டு விற்பனை செய்வது. இதற்கு "Souvenir" என்ற ஆடம்பரமான பெயர்! உண்மையில் அது ஒரு வியாபார விளம்பரப் பஞ்சாங்கமே! ஒலிபெருக்கி அலறுவதைப் பாருங்கள். நாள்தோறும் சலிப்பு ஏற்படும்படி அகில இந்திய ரேடியோவின் மூலம் கேட்டதையே திரும்பத் திரும்பப் பொறுமை இழந்து கேட்டுக்கொண்டிருக்கிறோமே. அதே விதமாக ஒலிபெருக்கியின் மூலம் கூட்டங்களில் கலந்து கேட்கும் ஸங்கீதம் வேறல்லவே.

சென்னை ஸங்கீத வித்துவத்ஸபை என்று முழங்கும் அகாடமியைப் பாருங்கள். மஹாராஜாக்களும், பிரபலஸ்தர்களும், பிற நாட்டிலுள்ளவர்களும் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளுடன் பிரமாதமான கோஷத்துடன் இந்த "விழா" இருபத்தைந்து வருஷங்களாக நடக்கிறது. முற்பகலில் காரசாரமான முறையில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ஆனால் அவைகளில் பங்கு கொள்ளுகிறவர்கள் அனேகரைக் காட்சிச் சாலையில் வைத்துவிடலாம். இந்தப் பத்து நாட்களைத் தவிர, வேறு நாட்களில் அவர்கள் இருக்கும் இடமே தெரியாது. அவர்களுக்கும் காலநிலைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. இத்தனை வருஷங்களாகத் தவறாமல் கட்டுரை படித்துவந்த ஒருவர் (ஹுலுகூர் கிருஷ்ணாச்சார்) காலமானதுகூட இந்த வருஷம் ஆராய்ச்சிக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறிய போதுதான் தெரியலாயிற்று! கச்சேரி செய்யும் வித்துவான்கள் குறிப்பிட்ட ஒரு சிலரே தான். இவர்களையும், இவர்களுடைய சிடர்களையுந் தவிரத் தென்னிந்தியாவில் வேறு வித்துவான்களே கிடையாது போலும்! பிடில், மிருதங்கம் தவிர வேறு பக்க வாத்தியங்களுக்கு அகாடமியில் இவ்வளவு காலமாக இடம் கிடையாது. இந்த வருஷம் கடம், கெத்துவாத்தியம், இரண்டும் காணப்பட்டன. கஞ்சிரா. மோர்சிங், முதலியவைகள் ஏன் சேர்க்கப்படவில்லை? இவர்கள் ஏழு தந்தி பிடிலை நீண்ட காலம் ஒதுக்கிவைத்து, பிறகு அதைச் சேர்த்துக்கொண்டார்கள். ஆகவே இது போன்ற விஷயங்களில் விளக்கமான கட்டுப்பாடு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை,

பிற மகாநாடுகளிலோ திறப்பு "விழா"வில் மாத்திரமே ஆடம்பரம் மிகுதி. ஏனைய நாட்களில் வழக்கம்போலக் கச்சேரிகளும், மேல் ஸ்தாயியில் வித்வான்கள் நரம்பு புடைக்கக் கூக்குரல் இடும்பொழுது பலத்த கரகோஷமும்தான். இந்தக் கூட்ட "விழா"க்களுக்குச் சிகரம்போல இவைகளைத் தொடர்ந்து திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ

ஸ்வாமி ஆராதனை "விழா". அதைத் "திறந்து வைக்க" ஆண்டிற்கொரு பிரமுகராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். "திறப்பு விழா"விற்கு வழக்கம்போலவே "பேச்சு விழா", அதன்பிறகு ஒலிபெருக்கிமூலம், பாடிய பழைய வித்துவான்களின் பழையமுறையில் அமைந்த பழைய பாட்டு! ஆராதனை அன்று காலையில் "பஞ்சரத்ன"க் கூக்குரல்! ரேடியோ மைக்ரோபோனுக்குப் போட்டி! இருபது ஆண்டுகளுக்குமுன் இந்த ஆராதனை நடந்துவந்த காலங்களில் அமைதியும் பக்தியும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமின் மகிமையில் ஆழ்ந்த சிந்தனையும், அந்தப் புனிதமான ஸ்ம்ருதியினால் ஏற்படும் அச்சம் கலந்த அடக்கமும் அங்கே கூடியிருக்கும் ஒவ்வொருவரிடமும் காணலாம். இந்தக் காலம் நடக்கும் "விழா" (Carnival) விலோ, ஸ்ரீ தியாகராஜஸ்வாமி அதை விட்டு மரியாதையாக விலகிக் கொள்ளுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த விதமெல்லாம் ஸங்கீதத்தின் உன்னதமான ஆத்மீக ஸ்வரூபம் சிதைந்து வருகிறதை, அகங்காரம் ஒழித்துச் சிந்தனை செய்யக்கூடியவர்களும், இந்தியக் கலாசாரத்தின் சீரிய பண்பாட்டைக் கடவுளின் வரப்பிரஸாதமாகக் கருதுகிறவர்களும் கவனிப்பார்களாக! சுயநலம் ஒழித்து, அகந்தை, ஆடம்பரம் முதலியவைகளை விலக்கி, மேற்கொள்ளவேண்டிய பெரிய ஆக்க வேலை ஒருபுறம் காத்திருக்கிறது என்பதை அவர்கள் நோக்குவார்களாக! ஜயதேவரின் அஷ்டபதி, நாராயண தீர்த்தரின் தரங்கிணி, தீட்சிதரின் நவக்கிரஹம், நவாவரணம் முதலிய இசைக் களஞ்சியங்கள், க்ஷேத்ரக்ஞரின் பதங்கள், புரந்தரதாஸரின் தேவர் நாமாக்கள், தியாகராஜஸ்வாமியின் எண்ணிறந்த இசை ரத்தினங்கள், அனந்தபாரதி, அச்யுதபாரதி போன்ற தமிழிசைப் பெரியார்களின் அரிய வாக்குச் செல்வம்—இவை போன்ற அளவிறந்த நிரூபணங்களின் ஜீவநாடியான உயர்ந்த கருத்துக்களை ஆராய்ந்து வெளியிட்டு, அடியார் கூட்டங்களில் சிந்தித்து, உரையாடி, கடவுளுக்கு அர்ப்பணமாக்கவே நமது முன்னோர்கள் நமது இசையை வளர்த்தனர் என்னும் கருத்துக்கிணங்க, பெருங்கூட்டமும் ஒலிபெருக்கியும் தவிர்த்து, ஸாஹித்தியத்தின் கருத்தை அறியக்கூடிய இசைவாணர்களைத் தேடிப்பிடித்து, புனிதத்தன்மை வாய்ந்த இசைமுறையை வளர்க்க வழிதேடுவோமாக!

தென்னிந்தியா முழுவதும் நடந்துவரும் ஸங்கீத ஸபைகள் இந்தத் திருப்பணியை ஏற்பது அவசியம். அரசியலார் விதித்திருந்த வரியைக்கூட இப்பொழுது ரத்துச் செய்துவிட்டனர். அதிகமான கட்டணத்தை வசூலித்து, "ரிடையர்" செய்யவேண்டிய நபர்களுடைய ஆர்ப்பாட்டத்தை எல்லாம் பொறுத்துக்கொண்டு, பெருங்கூட்டத்தைக் கூட்டி, அமளி நடத்துவதுடன் நிற்காமல், உயர்ந்த பண்பாடுள்ள ஸங்கீதத்திற்கும் கொஞ்சம் இடம் தந்து, சிறுபான்மையோர் அமைதியுடன் அனுபவிக்கக்கூடிய கலைத் திறமை வாய்ந்தவர்களை ஆதரிக்க முயல வேண்டும். இவைகளில் ஒலிபெருக்கியையும், அக்கிராஸனரையும், வந்தனோபசாரப் பேச்சுக்களையும் புகுத்தவேண்டாம். "என்னுடைய பாட்டனார் வழி," "தியாகராஜஸ்வாமியின் சிஷ்யரின் தமயனார் குமாரன் நான்; ஆகையினால் என்னுடைய பாடந்தான் ஸம்பிரதாயம்,"—இதுபோன்ற விளம்பரச் சீட்டுக்களுக்குச் செலாவணி ஒழியவேண்டும். இந்த "ஸம்பிரதாய"ப் போலிவாதம் ஒழியும் நாள் என்நாளோ? தற்காலம் மேடை வித்வான்களாகவும் "கலாநிதி"களாகவும் விளங்குகிறவர்கள் ஒரே கிருதியை அவரவர்கள் பாணியை அனுஸரித்தே பாடுகிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் "ஸம்பிரதாயத்தையே" நிலைநிறுத்துவதாகச் சொல்லுகிறார்கள்.

மதுபானம், விபசாரம்போலொத்த கொடிய தீமைகளுடன் வெளிப்படையான தொடர்புகொண்ட இசையாளர்கள் எவ்வளவு பெயர்கள் நம்மிடையில் இருக்கிறார்கள்! ஆகமங்கள், உபனிஷத்துக்கள், முதலியவைகளில் கருத்துக்களடங்கி உபவேதமாக மதிக்கவேண்டிய ஆன்றோர் மணிமொழிகளை இக்கடையவர் தீண்டாமல் இருக்க வழிதேட வேண்டியது சீலம் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டிய கடமை அல்லவா? வாழ்வும் கலையும் உடலும் உயிரும் போன்றவை என்னும் தத்துவமே பாரத நாட்டின் "ஸம்பிரதாயம்". இந்தக் கருத்தில் ஊறியவர்களின் ஒருமைப்பாடு உருவாகும் வண்ணம் ஸங்கீத ஸபைகள் தங்களுடைய ஆக்கவேலையை நிர்மாணம் செய்துகொள்ளுவது தற்கால நிலை காட்டும் தேவை.

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 153-50 TM

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி	ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.

எனது மலாய் நாட்டுப் பிரயாணம்-4

ரங்க ராமானுஜ அய்யங்கார்

மலாக்காப் பட்டணத்தின் அரசாங்க உயர்தரப் பள்ளியைப் பார்வையிட்டபொழுது, மாணவர்களின் பார்லிமெண்ட் என்ற பயிற்சிச் சங்கத்திற்கு நடந்ததேர்தல் சம்பந்தமான விளம்பரங்கள் கரும்பலகையில் காணப்பட்டன. தற்காலம் பாரத நாட்டில் நடக்கும் பொதுத் தேர்தலில் உபயோகப்படுத்தப்படும் சின்னங்கள் குடிசை, தராசு, இரண்டு எருதுகள், இருப்புப்பாதைத் தொடர்வண்டி முதலியவைகள். இவைகளைப் போலவே அந்தப் பள்ளி மாணவர்கள் கற்பனை செய்திருந்தார்கள். தீவட்டி, தராசு, சம்மட்டி, முதலியவை கட்சிகளின் சின்னங்கள்; நியாயம், சமத்துவம், சுயநலமற்ற தொண்டு முதலியவை லட்சியங்கள். "கட்சிகளை நம்பாதீர்கள். சுய நிர்ணயமுள்ள தனிப்பட்ட அபேட்சகர்களின் — கண்ணியமும், பொறுப்பு உணர்ச்சியுமே, நம்பத்தக்கவை". "முன்னேற்றம் என்ற பேச்சினால் ஏமாறாதீர்கள். முன்னேற்றவாதிகள் பொதுஜன உரிமைகளை மதிப்பதில்லை"—இப்படிப்பட்ட பல ருசிகரமான விளம்பரங்கள அந்தப் பள்ளி மாணவர்களின் சிந்தனைத் திறமையையும், பொதுப் பிரச்னைகளில் அவர்களுக்கு உள்ள ஊக்கத்தையும் வெளியிட்டன.

சிங்கப்பூர்

மலாயா நாட்டில் ரயில் பிரயாணம் வெகுவாகக் குறைந்துவிட்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வோரிடத்தில் ஏற்படும் கலகக்காரர்களின் தொல்லையினால் வண்டித் தொடர் இடர்ப் படுகின்றன. ஆகையினால் சிங்கப்பூருக்கு ஜோஹோர் வழியாக நாட்டுச் சாலையில் காரில் பிரயாணம் செய்வது பெரும்பாலும் வழக்கம். அப்படிச் செல்லும்பொழுது சாலையின் சிறப்பும், ஜோஹோர்பாரு என்னும் பட்டணத்தின் செழிப்பும், அழகும், என்றும் மறக்கமுடியாத மகிழ்வுணர்ச்சியைக் கொடுக்கும்.

சிங்கப்பூர் ஒரு தீவு. அதை ஜோஹோரிலிருந்து ஒரு நீண்ட பாலத்தின்மீது சிறு கடல் கடந்து அடைகிறோம். சிங்கப்பூரை வசப்படுத்திய ஆங்கிலக் கம்பெனி அதிகாரி, அதைக் "கீழ் நாட்டு மால்டா" என்று அழைத்தார். இரண்டாவது உலகப் போரின் பொழுது அதைப் பிடித்த ஜப்பானியரோ, அதற்குக் "கீழ்த் திசையின் ஜோதி" என்ற பொருள்கொண்ட "சோணான்" என்ற பெயரைச் சூட்டினார்கள். அதன் எல்லையை அணுகும்பொழுதே அந்தப் பெயர் மிகப் பொருத்தம் என்பது தெரியவரும்.

லின்யூடாங்க் என்ற பிரபல சீன எழுத்தாளரின் நூல்களைப் படித்து அனுபவித்தவர்களுக்கு அவர் சித்திரிக்கும் ஜப்பானியரின் அரக்கத் தன்மை நம்பக் கூடாததாகவே தோன்றும். ஆனால் கடந்த போர்க் காலத்தில் அவர்கள் மலாயா நாட்டிலும் சிங்கப்பூரிலும் நடத்திய கோரக் கொடுமைகளை நினைக்கும் எந்த மனிதனும் உடல் நடுங்கி, நாகரிக உலகத்திற்கே பெரும் களங்கமான இந்தக் கொடுமை நீடித்திராமல் சடுதியில் அழிந்ததே என்று இறைவனுக்கு நன்றி செலுத்துவான். எனினும், அதன் அடையாளங்கூட அந்நாட்டில் காண முடியாதபடி புனருத்தாரண வேலை திறம்பட நடந்து, இன்று செல்வமும் வளமும் குறைவற ஓங்கி, நாடும், மக்களும், ஒரு பயங்கரக் கனவிலிருந்து விழித்த விதமாகக் காண்கின்றனர்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சரித்திரத்தில் சிங்கப்பூரின் ஸ்தாபனம் ஒரு வினோதமான நிகழ்ச்சியாகும். தாமஸ் ஸ்டாம்போர்ட் ராபல்ஸ் என்ற ஆங்கிலேயர் ஒரு கம்பெனி உத்தியோகஸ்தர். அவர் கூரிய புத்தியும், அஞ்சாத நெஞ்சமும் படைத்தவர். அவர் கி.பி. 1819-ஆம் ஆண்டில் இந்தத் தீவை மலாய் சுல்தான் ஒருவரிடமிருந்து, தந்திரமாகக் கம்பெனிக்குச் சாஸனமாகப் பெற்றார். அப்பொழுது இது காடுகள் நிறைந்து, வசிப்பதற்குத் தகுதியற்ற சதுப்பு நிலமாக இருந்தது. அந்தக் காலத்தில் ஐரோப்பாவுக்கும், கிழக்கிந்தியத் தீவுகளுக்கும், நடந்துவந்த வியாபாரத்திற்கு இந்தத் தீவு மிகவும் பயன்படும் என்பதை அவர் அறிந்தார். டச்சுக்காரர்களின் சூழ்ச்சியையும், கம்பெனி அதிகாரிகளின் எதிர்ப்பையும், சமாளித்துக்கொண்டு தம் விடா முயற்சியினால் நான்கு வருஷங்களுக்குள் அவர் அதை ஒரு முக்கிய வியாபார ஸ்தலமாகச் செய்துவிட்டார். இன்று அவருடைய உருவச்சிலை ஒன்றும், அவருடைய



உயரத்தில் முதன்மை பெற்ற "கத்தே மாளிகை".

பெயர் தாங்கும் ஒரு மண்டபமும், கடைவீதி, காட்சிச்சாலை, கல்வி ஸ்தாபனம், போஜனச்சாலை முதலியவைகளும் அவருடைய ஞாபகச் சின்னங்களாகச் சிங்கப்பூரை அலங்கரிக்கின்றன.

சிங்கப்பூரின் விஸ்தீரணம் ஏறக்குறைய முப்பத்தொரு சதுரமைல்; ஜனத்தொகை சுமார் பத்து லட்சம். சென்ற செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதி அன்று இது ஆங்கில மன்னரின் தாகீதுபெற்று, ஒரு நகரத்தின் அந்தஸ்தை அடைந்தது. கவர்னரின் நியமனம் பெற்ற ஒன்பது பெயர்களும், பொது மக்களின் வாக்குரிமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டுப் பெயர்களும் அடங்கிய ஒரு சபை இந்த நகரத்தின் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறது.

கிழக்கு, மேற்கு நாடுகளுக்கு இடையே கப்பல் போக்கு வரவிற்குப் பெரிதும் உபயோகப்படுகிற கடற்பாதையில் சிங்கப்பூர் உள்ளது. மலாய் நாடு, சயாம், இந்தோசீனா ஆகிய தேசங்களின் ஏற்றுமதிப் பொருள்களான ரப்பர், வெள்ளீயம், அரிசி, அன்னாசிப் பழம், பிஸ்கோத்து, தோல் சாமான்கள், முதலியவை இதன் துறைமுக வாயிலாகத்தான் செல்லவேண்டும். அபின், புகையிலை, மதுபானம் போன்ற மிகச் சில பொருள்களைத் தவிர வேறு சாமான்களுக்கு இந்தத் துறைமுகத்தில் தீர்வை கிடையாது. இங்கே ஒரே காலத்தில் இருபத்தைந்து பெரிய மரக்கலங்கள் தங்குவதற்கு இடமுண்டு. வருஷத்தில் மூவாயிரம் கப்பல்களுக்கு அதிகமாகவே இதன் வழியாகச் செல்லுகின்றன. இதன் முக்கியத்தை உணர்ந்தே 1928-ஆம் ஆண்டில், ஆங்கிலேயர் ஏறக்குறைய இருபத்தைந்துகோடி ரூபாய் செலவிட்டு, இங்கே ஒரு பெரிய மிதக்கும் கப்பல் தளவாடத்தைக் கட்டி முடித்தனர். இரண்டாவது உலகப்போர் நடந்தபொழுது, இதைப் பாதுகாக்கப் போதிய விமானப்படை இல்லாத தருணம் பார்த்து ஜப்பானியர் இதைத் தந்திரமாகத் தாக்கினார்கள். 1942-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இது மிகவும் எளிதில் அவர்கள் கையில் சிக்கியதும், அப்பொழுது ஆங்கிலேயர் முதுகுகாட்டி ஓடியதும் சரித்திரமாகி விட்டது.

பெயருக்கொப்ப, நரசிம்மமூர்த்தியின் தேவாலயம் ஒன்று நகரத்தின் மத்தியில் நிற்கிறது. இதைத்தவிர, கிறிஸ்தவர், சீனர், முஸ்லிம்கள் முதலியோரின் கோயில்கள் நகரெங்கும் உள்ளன. உலகத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்தும் மக்கள் இங்கே கூடியிருப்பதால் இந்த நகரம் முழுவதுமே ஒரு சர்வதேசக் காட்சிச்சாலைபோல் தோன்றுகிறது. அழகிய, நீண்ட சாலைகளில் எண்ணிறந்த மோட்டார் வண்டிகள் இராப் பகலாகச் சென்று கொண்டிருக்கின்றன. இறக்குமதிச் சட்டங்கள் அனுகூலமாக இருப்பதனால் இங்கே ஏறக்குறைய முப்பது பெயர்களுக்கு ஒருவர் வீதம் சொந்த மோட்டார் வண்டிகள் வைத்திருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். மிகவும் சொற்ப வாடகைக்கு டாக்ஸிகள் கிடைக்கின்றன. பெட்ரோல், மின்சாரம் இவைகளால் ஓட்டப்பெறும் பஸ் வண்டிகள் மிகவும் வசதியாகவும், ஏராளமாகவும் இருக்



“கானாட்” சாலை.

இன்றன. ட்ரைஷா என்றும், பேச்சாக்காடி என்றும் சொல்லப்படும் நேர்த்தியான சைக்கில் ரிக்ஷாக்கள் நிறைவாகக் கிடைக்கின்றன. நமது நாடெங்கும் காணும் கேவலமான குதிரை, மாட்டுவண்டிகள் இங்கே இராமையால் S. P. C. A. போன்ற சங்கங்களுக்குத் தேவையேயில்லை. வீதிகளில், கால்நடைகள் திரிவதைக் காணவே முடியாது. முனிஸிபல் எல்லைக்குள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் கால்நடைகளை வளர்க்கக் கூடாது என்ற சட்டம் கண்டிப்பாக அமுலில் இருந்து வருகிறது. அபரிமிதமான மாமிச வகைகள் விற்பனையாகும் இடங்களில்கூடக் காக்கைகள், பருந்துகள் முதலிய பறவைகளைக் காண்பது அரிது. ஜோசியம் சொல்லி, அங்கஹீனத்தையும், கொடிய நோயையும் பிழைப்புக்குப் பயன்படுத்தி, தரையில் புரண்டு, தம்பட்டம் அடித்து, சங்கு ஊதி, நானாவிதமாகப் பிச்சையெடுப்பவர்கள் கிடையவே கிடையாது. அருவருப்பான தோற்றமளிக்கும் கேவலமான மக்கள், வீதி வழியில் மலஜலம் கழிக்கும் பேதைகள், கோரக் கூச்சலிட்டுத் தெருக்களில் அமைதியைக் கெடுக்கும் சில்லறை வியாபாரிகள், காது செவிடுபடும்படி “ஹார்ன்” அடித்துத் தொல்லை செய்யும் மோட்டர் ஓட்டுபவர்கள்–இத்தகைய சமூகப் பீடைகள் எங்கும் காண்பதற்கில்லை. (இது மலாய் நாடு முழுவதற்கும் பொதுவான லட்சணம்)

சிங்கப்பூர்த் துறைமுகம்.

கோலாங் ரோட், செரங்கூன் ரோட், ரேஸ் கோர்ஸ் ரோட், ராப்ல்ஸ்பேட்டை முதலிய பகுதிகள் சொல்லவொண்ணாத அழகும் காம்பீரியமும் பெற்றவை. நகரெங்கும் உன்னதமான கட்டிடங்கள் காட்சியளிக்கின்றன.

சீனர்கள் உழைப்பின் சிறப்பை எடுத்துக் காட்டும் விமரிசையை இங்கே நன்றாகக் காணலாம். ஊக்கமும், உற்சாகமும் நிறைந்த சீன யுவதிகள் பகட்டான தூய உடை உடுத்துத் துவிச்சக்கரங்களில், தத்தம் காரியாலயங்களுக்குப் போகிற காட்சி இந்த நகரத்தின் தனிச் சிறப்பாகும். ஜனத்தொகையில் சீனர்கள் 80 சதவிகிதம். ஆகையினால் இங்கே பன்றி மாமிசத்தின் விற்பனை அதிகம். அனேகமாகப் பத்தில் ஒரு கடை வீதம் இந்தப் பொருள் விற்பனையாகிறது. இதனைப் புதியதாகக் காண்பவருக்கு மனக்கசப்பும், நாக்கசப்பும் உண்டாகும். இரண்டு வயதுக் குழந்தை முதல் வயோதிகர் வரையில் சீன இனத்தவர் இந்த வஸ்துவை மிகவும் ருசித்துப் புசிக்கிறார்கள். விருந்துகளிலோ சைவ உணவுக் கட்டுப்பாடு உள்ளவர்



கடலும் குளமும்.

களுக்குக் காய்கறிகளைக் கொண்டு பன்றி மாமிசப் பலகாரங்களைப் போலத் தோன்றும் தின்பண்டங்களைத் தயாரித்துக் கொடுத்துத் திருப்தி அடைகிறார்கள்! மேலும், பிறந்தது முதல் பனிக்கட்டியை (ஐஸ்) ஓயாமல் உட்கொள்ளுவதனால் தந்த உபாதி இல்லாத சீனர்களே கிடையாது என்று சொல்லலாம்.

சீனர்களின் இணையற்ற வாணிகத் திறமையும், விற்பனைக் கிரயத்தைக் கணக்கிடுவதற்கு அவர்கள் உபயோகிக்கும் ஒரு விசித்திரமான மரச்சட்டமும் கவனிக்கத் தக்கவை. குதிரைப் பந்தயம், போலோ, கிரிக்கெட் ஆகியவைகளுக்கு ஸ்தலங்கள் சீராக அமைந்திருக்கின்றன. "புதிய உலகம்," "பெரிய உலகம்," "இன்ப உலகம்" என்ற மூன்று பெரிய களியாட்ட விடுதிகள் இராக்காலங்களில் உல்லாசமாகப் பொழுது போக்க ஏற்பட்டவை. மதுபானமும், கேளிக்கைகளும், நிறைந்த இந்த இடங்கள், இன்று உலகெங்கும் பரவி, வாழ்வைப் புனிதமாக்கும் மதங்கள் அனைத்தையும் தோற்றுவித்த ஆசிய நாட்டிற்கு எத்துணையும் ஏற்றவை அல்ல. தெளிந்த அறிவுடைய மக்களுக்கு இவை வாழ்வைச் சூழ்ந்துள்ள விஷக் கிருமிகளைப் பூதக் கண்ணாடியின் மூலம் பார்ப்பதுபோலவே தோன்றும்.

நாகரிக வாழ்வு மிகுந்திருக்கும் இந்த நகரில் ஜல வசதியும், மின்சாரச் சக்தியின் விநியோகமும் நிறைவாக உண்டு. ஆயினும் கடந்த போரின் காரணமாக இயந்திரங்கள் வேண்டுமளவு கிடைப்பதில்லை. ஆகையினால் முன் எச்சரிக்கை இல்லாமல் திடீர்திடீரென்று நகரத்தின் ஒவ்வொரு பாகங்களில் மின்சாரத்தை நிறுத்திவிடுகிறார்கள். அப்பொழுது வண்டிகள் அசைவற்று நின்றும், வியாபாரக் கட்டடங்கள் இருளடைந்தும், விசிறிகளின் ஓட்டம் ஒழிந்தும், சமையல் முதலியவைகள் தடைபட்டும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் உயிரற்றும், இப்படிப் பல விதமாக வாழ்க்கையின் போக்கு சீர்குலைந்து விடுகிறது. முன் எச்சரிக்கை செய்தால் அப்பொழுது ஏற்படும் நிலையைச் சமூக விரோதிகள் பயன்படுத்திக்கொள்ள முற்படுகிறார்களாம். அதனால் கொலையும், களவும் விளைகின்றனவாம். கடைசியாக, வீதிகளில் போய்க் கொண்டிருக்கிறவர்களைப் போலீஸார் கண்காணிப்பின் நிமித்தம் திடீரென்று அங்கங்கே வழிமறித்து அடையாளச் சீட்டைப் பரிசோதிக்கிறார்கள். எவரேனும் மறந்து வீட்டில் வைத்துவந்துவிட்டால் அவர்களை உடனே நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லுகிறார்கள். இத்தகைய ஓரிரண்டு குறைகள் கூட இல்லாமல் போனால் சிங்கப்பூரை அமரபுரி என்றுதான் சொல்லவேண்டும்.

இந்நகரில் உள்ள இந்திய மக்களைச் சிறிது கவனிப்போம். சுமார் இரண்டாயிரம் இலங்கைத் தமிழரும், ஐயாயிரம் தென்னிந்தியர்களும் இங்கே பல தொழில்களில் அமர்ந்து வாழ்கின்றனர். வியாபாரமே முக்கியமான தொழில் ஆகையால், டைப்பிஸ்ட்களுக்கும், கணக்கர்களுக்கும் இங்கே பெருந்தேவை இருக்கிறது. சிங்கப்பூரில் மாத்திரம் இந்தத் துறையில் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு

சிங்கப்பூரில் வீணைக் கச்சேரி.

ஸ்[illegible]மான ஜீவனத்திற்கு இன்னும் இடம் இருக்கிறது. தென்னிந்திய முஸ்லீம்கள் பலர் வியாபாரத்தில் மிகவும் முன்னேறி இருக்கிறார்கள், தன வைசியச் சிவநேசர்கள் தங்களுடைய கிட்டங்கிகள் பெட்டிகள், கோயில் திருப்பணிகள், முதலியவைகளுடன் நகரத்தாரின் பண்டைய முறைகளிலிருந்து சிறிதும் வழுவாமல் அன்றுபோலவே இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். பஞ்சாபைச் சேர்ந்த சீக்கியர்கள் பெரும் செல்வம் படைத்த முதலாளிகளாக இருக்கிறார்கள். இவர்களுடைய திறமையும் கொடைக் குணமும், மதப்பற்றும், மிகவும் போற்றற்குரியன. அமிருதஸரஸில் நடப்பதுபோல அவர்களுடைய கால்ஸாக்கூட்டம் ஒன்று ஒருநாள் இங்கு நடந்தது. அவர்கள் அணிவகுத்துத் திரளாக உட்கார்ந்து, தங்களுடைய வேத நூலாகிய ஆதிக்ரந்தத்திற்குச் சீரிய முறையில் வணக்கம்செய்து, உருக்கமான பாடல்களைப் பாடிப் பஜனைசெய்து, பிரசங்கமும் நடத்தினார்கள். ஸத்துவம் நிறைந்த அந்தத் திருச்சபையில் தெய்வ பக்தியும், குரு பக்தியும், தாண்டவமாடின. ஆனால் இதற்கு ஒவ்வாத பிறிதோர் அனுபவமும் பின்னர் ஒருநாள் எனக்கு நேர்ந்தது. மஹாத்மாகாந்தியின் நாட்டைச் சேர்ந்தவர்கள் முக்கியமாகப் பின்பற்ற வேண்டிய ஒரு பொறுப்பான விஷயத்தை மாத்திரம் புறக்கணிப்பது அந்த நாட்டின் நற்பெயரையும், கலாசாரத்தையும், மதிக்கிற எவருக்கும் துயரத்தைக் கொடுக்கும் அன்றோ! இங்கே நாள்தோறும் நடக்கும் பெரிய விருந்துகளில் மதுபானம் தாராளமாக வழங்கப்படுகிறது. இதில் பாரதமக்கள் பங்குகொள்ளாமல் இருந்தால் உலகுக்கே எடுத்துக்காட்டாகச் சட்டபூர்வமான மதுவிலக்கு நடைமுதலில் இருந்துவரும் நமது நாட்டின் கௌரவம் பிறதேசங்களில் எவ்வளவு சிறப்புப்பெறும்!

எழுபது நாள் சுற்றுப் பிரயாணத்தின் முடிவில் மனதில் எழுந்த சில நினைவுகளுடன் இந்த வரலாற்றை முடிப்பது உசிதமாகும். மலாயாவும் சிங்கப்பூரும் அழகிலும், வளத்திலும் சிறந்தவை. அங்கு வறுமையும் பிணியும் அறவே இல்லை. நாடெங்கும் தெய்வத் தன்மை பெற்ற தூய்மை பிரகாசிக்கிறது. அங்கே உள்ளவர்கள் அனைவரும் சுறுசுறுப்புடன் உழைக்கிறார்கள். உற்சாகம், விருந்தோம்பல், முதலிய நல்ல குணங்கள் அவர்களிடம் நிறைந்திருக்கின்றன. நாட்டின் எதிர்காலம் சீனர்களுடைய கையில் இருக்கிறது. ஆங்கில ஆதிக்யம் என்றென்றும் நீடித்திருக்கப் போவதில்லை. வருங்காலத் துரைத்தன அமைப்பில் இந்தியர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அவர்கள் அந்த நாட்டினிடம் உண்மையான அன்பு கொண்டு இந்தியக் கலாசாரத்தின் சிறப்பான அம்சங்களுக்குத் தங்களுடைய வாழ்வில் பூரண இடங்கொடுத்து, சீனர்கள், மலாய்க்காரர்கள் போன்ற பிற இனத்தவருடன் நெருங்கிப்பழகி, அவர்களுடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுதல் வேண்டும். இதற்குத் தேவையான விசால நோக்கமும், சகிப்புத் தன்மையும் கடல் கடந்து வாழும் நமது சகோதரர்களிடம் வளம் பெற்று இன்பம் பெருக்குவவாக!

மாதா கோயில்.



அடுத்த இதழில்:
“இந்தோனீஷியாவிலே”

எழிற் கன்னி

"சுகி"

மனிதன் மனம் போனபடி செய்துவந்த காலமது. கட்டுப்பாடு, சட்டம், வரம்பு, நியதி என்ற எல்லைக் கோட்பாடுகள் நிலவாத காலமது. கோட்பாடுகள் என்ன? சொல்லுக்கு நிழல் போன்ற உருவம்கூடப் பிறக்காத அநாகரிகமான காலம் அது.

முன்னைப் பழங்கதையாம் காலம்.

சிருஷ்டி கர்த்தா திகைத்து நின்ருர். அந்நாள் வரை யாருமே அவரிடம் வந்து நெஞ்சு நிமிர்த்திக் கேளாத ஒரு கேள்வியைக் கேட்டபோது அவர் திக்பிரமையடைந்தார்.

வந்தவன் சொன்னுன் :

"புரியாத புதிர் தங்கள் சிருஷ்டி விநோதம். இத்தனை அற்புதங்கள் நிறைந்திருந்தும் ஒன்றை மட்டும் மறந்து விட்டீர்கள். அது என்னவெனப் பாருங்கள்; சிந்தனை செய்யுங்கள்."

வந்தவன் சொன்னுன். காலத்தைக் கடந்து வியாக்யானம் செய்துகொண்டே போனுன். வார்த்தைகள் ஒலித்தன, பொருளில் ஒலி தெறிக்கவில்லை. சிருஷ்டிகர்த்தா புரிந்துகொண்டார்,

அதுதான் லட்சியம். சொல்லுக்கும் எளிதாய், புரிதற்கு அரிதான பொருள். சிருஷ்டி கர்த்தா "மனிதா! லட்சியம் என்னைச் சார்ந்த விவகாரமில்லை. உன்னைச் சார்ந்தது. காரியம் என்னுடையது, கர்மா உன்னுடையது. நன்மை-தீமை இரண்டும் என்னுடையவை, பகுத்தறிவு உன்னுடையது. நான் சிருஷ்டிக்க இயலாதது ஒன்று உண்டு. ஆம், உண்டு. அதுவே லட்சியம்!" என்ருர்.

தன் எண்ணக் குழப்பத்திற்கு ஒரு சொல் உதவிய, ஆனுல் தேவையைத் தீர்க்கமுடியாத சிருஷ்டி கர்த்தாவின் தோல்வியைச் செவியாரக் கேட்டனன். கோடானுகோடி ஜீவராசிகளேயும் அண்ட சராசரங்களேயும் ஆட்டிவைக்கும் அண்ணல் தோற்ருன். மனிதன் சிரிக்கிருன்—என்ன?

லட்சியம், சிருஷ்டிதேவனுக்கு அப்பாற்பட்டது!

மனிதன் பார்த்து நகையாடும் நிலை ஏற்படுகிறது. சிருஷ்டி கர்த்தா உலகத்தைப் பார்த்தார். அவர் படைத்த குணுகுணங்கள், காம குரோத மத மாச்சர்யம், குணவிஸ்தாரங்கள்-முரண்பட்ட ஆயிரமாயிரம் இரட்டை உணர்ச்சித் திவலைகள் மனித உள்ளத்திலே பட்டுத் தெறிக்கின்றன.

இயக்கம். தன் மனம்போல, போக்குப்போல இயக்கம் நடைபெறுகிறது.

இரையைக் கண்ட விலங்கு, பாய்ந்து அடித்து அழித்து வீழ்த்தும் உள்ளுணர்ச்சி போன்ற காரண காரியங்கள், நியாயாநியாயங்களுக்கு வசப்படாது, மேட்டுத் தண்ணீர் பள்ளம் காணும் இயற்கைபோல, பேதங்கள் மலிந்த இரட்டை உணர்ச்சிக்குள் மனிதப் பூண்டுகள் ஆழ்ந்துவிட்டன. இது மனிதன் செய்யக்கூடிய செயல்தானு—

நாகரிகச் சுழிப்பிலே ஒரு தயக்கம்.

சிருஷ்டி கர்த்தாவின் லிபியில் வியர்வை துளித்தது மனத்திலே புழுக்கம், நெஞ்சடைக்கும் வாதனை. அவர் சிந்தித்தார், சிந்தனையின் வெளியீடாகப் பிறந்தது.

லட்சியம் உருவாயிற்று. உருவிலே வெளிப்பட்டு அமிர்தகலசமாயிருந்தது. பசும் பொன்னை விடப் பளபளப்பு, வைரத்தை விடக் கடினம், வார்த்தைக்குள் அமையாத பொருள், புலியை விடப் பாய்ச்சல், மெல்லிய தளிரைவிடப் பசுமை, ஓடும் சாரைப்பாம்பின் வேகம், சிங்கத்தின் காம்பீர்யம், குழந்தையின் மென்மழலை, பெண்மையின் பூரிப்பு, எங்கோ தொலைவிலுள்ள விண் மீனின் கண் சிமிட்டு, கார்முகிலின் ஒளிவெட்டு—இவ்தாறு பல பல பண்புகள். பல சக்திகள், பல பல ரூபலாவண்யங்கள், ஒளிப்பிழம்புகள்.

சிருஷ்டி கர்த்தா அந்தப் பளிங்குக் கண்ணுடி போன்ற உருவெளியில் தம்மைக் கண்டார். தாம் அல்லாதனவும் கண்டார். தமக்கு எட்டாதன எட்டுவனவெல்லாம் எத்தனை எத்தனையோ சாயா விலாஸங்கள் எல்லாம் இனியவை அவர் கண்ணுக்குத் தெரிந்தன. அவர் கண்ணையும் மறைத்தன.

சித்திரக்காரன் எட்டி நின்று நோக்குவது போன்று தம் கை வண்ணத்தை நோட்டம் பார்த்தவர், "அடி மாயக்கன்னி" என்று சிருஷ்டி கர்த்தா வாய் மூடவில்லை, குரல் கேட்டது, "படைக்கும் ஆற்றலுடையோனே, அது உனக்குப் பயன் படாது, இப்படிக்கொடு, நான் பார்க்கிறேன்;' என்ருன் வந்தவன். சிருஷ்டி கர்த்தா தயங்கினுர். மனிதப் பூண்டு, இந்த மாயாலோகக் கன்னியுடன் கைகோத்துச் செல்லக் கூடுமா? அவர் தயங்கினுர்.

மறுகணம். மனிதனுக்காகப் பிறந்த அந்தக் கன்னி—ஆம் கன்னி—அவன் அருகேபோய் நின்று விட்டாள். சிருஷ்டி கர்த்தா கால வெள்ளத்தில் கையைக் கழுவிவிட்டார்.

வந்தவன் எழிற் கன்னியுடன் நடந்தான். அவளிடம் எஃகின் கூரிய வலு, கழுகின் பார்வை, எறும்பின் சுறுசுறுப்பு, வறுமையின் சிறுமைத் தோற்றம், எமனின் பாசக்கயிறு—எல்லாம் கலந்த இனிய உணர்ச்சிக் குவியல் தெரிந்தன, அவள் அமுத மொழிக்கும், அருள் விழிக்கும், அன்ன நடைக்கும் அடிமையானுன்.

காலப் பிரவாகம் எங்கெங்கோ சாடி மோதிற்று.

கால வெள்ளத்தில் ஒரு துளி. ஏதோ ஒரு சில பகல் இரவுகள் பிறந்து பிறழ்ந்தன.

மனிதனின் அலறல் கேட்டு சிருஷ்டி கர்த்தா வான மண்டலத்திலிருந்து பார்த்தார். மனிதன் வந்தான். அவன் குரலில் முகத்தில், நம்பிக்கையில் களையில்லை; நம்பிக்கையின் வறட்சி தெரிந்தது.

"வேண்டாம் வேண்டாம் இந்த எழிற்கன்னி இன்பப் பேடகம் வேண்டாம்"

அவன் கதறலைச் சகிக்கமுடியாதபடி சிருஷ்டி கர்த்தா, தமது அதிசயப் பொருளை வாங்கிக் கொண்டார். மனிதன்—பாரம் இறக்கிய ஒட்டகம்—தனது கோணல் முதுகை நிமிர்த்துகிற மாதிரி நிமிர்த்துக்கொண்டான்.

மீண்டும் காலவெள்ளம் சுழிபறித்துக் குதி போட்டுக் குமிழியிட்டது. எத்தனை எத்தனையோ உறு துணைகள் அருகிருந்தும், பற்றுக்கோடுகள் பலவிருந்தும் மனிதன் நிம்மதியுடன் தலை சாய்க்க முடியவில்லை.

சிருஷ்டி கர்த்தாவின் மனக்கதவு திறந்தது. அவர் எச்சரிக்கை செய்து, அந்தப் பாவையைக் கொடுத்தார். பெறற்கரிய பேறு பெற்றவன் போன்று நடந்தான்; ஆடினான், பாடினான், வானமளிக்கும் காரியங்களைச் செய்தான்.

தனி மனிதனை ஆட்கொண்டவள், சமுதாயக் கம்பத்திலே தன் புகழ்க்கொடியை உயர்த்தினாள்; காலத்திலும் இடத்திலும் சூழ்நிலையிலும் கணத்துக்குக் கணம் உருமாறினாள். மனிதன் நொந்தான். நொடிந்தான். கூனிக் குறுகினான்.

மூன்றும் முறையாக வான மண்டலத்தின் திட்டிக் கதவைத் திறந்து சிருஷ்டிகர்த்தா கீழே பார்த்தார். உலகமா அது? இல்லை, நரகத்தின் முதற் பகுதியா? மனிதர்கள் மனிதர்களை விழுங்கிக் கொண்டிருந்தார்கள். அறிவின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. அன்பு கருகி மடிந்துகொண்டிருந்தது. கருணையின் குருத்தைக் கிள்ளி விட்டிருந்தார்கள். அன்பெனும் ஊற்றுக்கள் அடைத்துக் கிடந்தன. பூமண்டலமெங்கணும் வறட்சி, பாலைவனங்கள் படர்ந்துகொண்டிருந்தன. ஆனால் வந்தவன்—தம்மை எப்போதோ காணவந்த அந்த மனிதப்பூண்டு அழகாக இருந்தான், அவன் வளர்ச்சியைக் கண்டு ஆனந்தப்பட்டார், அவன் பேச்சைக்கேட்டு அசந்துபோனார். அவன் சிந்தனை, செயல் எல்லாம் அவரைக் கலங்க வைத்தன. ஆனால் அவன் போக்குத்தான் புதிராக இருந்தது.

வந்தவன் அலறினான் "வேண்டாம் இந்த மாயக்கன்னி, லட்சியம். இவள் வேண்டவே வேண்டாம்" என்றான்,

சிருஷ்டி கர்த்தா, அவனது சடலத்தைப் பார்த்தார். அதாவது உடம்பை ஊடுருவிப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். அவர் சிரிப்பு, மனிதனுக்குப் பரமண்டலங்களின் வழியாக வந்து எதிரொலி செய்தது,

"ஏன் சிரிக்கிறீர்?"

"இந்த உலகத்துப் பொருளுக்கு உடைமை நான். ஆனால் இது—இந்த லட்சியக் கன்னி உன்னைச் சேர்ந்தவள்."

"ஆ......தெய்வமே இதுவா?"

"ஆமாம் உனது நனவு இவள் உருவம்."

வந்தவனால் பேசமுடியவில்லை. கொள்ளவும் தள்ளவும் முடியாத நிலை. விட்டுப் போகவும் முடியாமல், இட்டு மீளவும் முடியாமல், நின்றவன் சொன்னான்:

"இவளோடு வாழவும் முடியவில்லை, இவளின்றி வாழவும் முடியவில்லையே!" என்று கண்ணீர் உகுத்தான். அவன் மனக்கோவிலின் எதிரொலி சிருஷ்டி கர்த்தாவின் நெஞ்சைத் தொட்டது. ஆனால் அவர் சிலையானார்.

கால வெள்ளம் அலை மோதிக்கொண்டே இருக்கிறது. அமைதியற்ற உலகம்.

சிருஷ்டி கர்த்தா, எப்போதாவது வானத்துச் சாளரத்தைத் திறந்து பார்ப்பார், பார்க்கும் போதெல்லாம் பார்க்குமிடமெல்லாம் மனித குலத்தை லட்சியங்கள் அழிப்பதும், மனித குலம் லட்சியங்களை அழிப்பதுமான 'கண்ணு மூச்சி' அளவிலா விளையாட்டாக நடந்துகொண்டிருப்பதை அவர் கண்டார்.

மனித் குலத்தின் பெண்ணரசி எழிற்கன்னி இன்பசொரூபி, ஆக்கவும் காக்கவும் போக்கவும் வல்லவள்.

அவள் விருப்புக்கும் வெறுப்புக்கும் உலகம் என்றென்றும் பலியாகும்.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு ரூ.	அ.	பை.	மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி" கும்பகோணம்.

உங்கள் குழந்தைகள்
ருசிமிக்க
மைசூர் பாகை
விரும்புவார்கள்
டால்டாவில் தயாரியுங்கள்
சூடாகவோ, குளிர்ந்தோ உட்கொள்ளும் இத் இப்பு பதார்த்தங்களுக்கும், எல்லாவகை பண்டங் களுக்கும் டால்டா விரும்பத்தக்க ருசியை அளிக் கிறது. சிக்கனமானதும் ஊட்டமளிப்பதும்கூட. கைபடாமல், சீல் செய்த டின்களில் விற்கப்படுவ தால் எப்பொழுதும் புதிதாகவும், துப்புரவாக வும் உங்களுக்குக்கிடைக்கிறது.
DALDA
HYDROGENATED GROUNDNUT AND TIL OIL
डालडा
இவ்வாறு தயாரிக்கலாம்:-
நெகிழ சர்க்கரைப்பாகு செய்துகொள்ளவும்.
சிறிது டால்டாவில் சிவக்கவறுத்த கடலை
மாவை அதனுடன் சேர்க்கவும். அடுப்பில்
வைத்து கெட்டியாகும்வரை கிளறவும். சிறு
கச்சிறுக மேலும் டால்டா சேர்க்கவும்.
வாணலியில் ஒட்டாமலிருக்கும்வரை பக்கு
வம் செய்யவும். டால்டா தடவப்பட்ட ஒரு
தட்டில் 6" உயரத்திலிருந்து விடவும்.
உறைந்தபின் தேவையான வடிவங்களில்
வெட்டவும்.
இதை தவற விடாதீர்கள்!
புதிய டால்டா சமையல் புத்த
கம் — ஆங்கிலத்தில் — படங்
கள் கொண்டது — ஆர்ட் காகி
தம் — 80 பக்கங்கள் — 300
அகில-இந்திய, ஐரோப்பிய இன்
பண்டங்கள் — ஆரோக்கியம், சுகா
தாரம், சமையலறை இவைகளைப்
பற்றிய குறிப்புகள் — விலை ரூ. 1/-
தான் — தபால் செலவு அணா 8 தனி.
தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
HVM. 149-X30 TM



எமது முதல்தரமான

சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

Coffee

Ours for Quality



GANESH & Co.

(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylpaore. No. 2. Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

நிவேதனம்

தி. ப. பத்மநாபன்

அன்று திருவாதிரை நாள். சூரியோதயகாலம். நடராஜ மூர்த்தியின் உற்சவம் கோலாகலமாய் நடந்து கொண்டிருக்கிறது. ஊர் முழுதும் இந்த நன்னாளைக் கொண்டாடுகிறார்கள். கோயிலில் திருவெம்பாவை முடிந்ததும் நடராஜர் வீதி வலம் வருகிறார். பக்தர் பாடுகின்றனர், ஆடுகின்றனர். குழந்தைகளின் பட்டாடைகள், ஆபரணங்கள், பூங்கொத்துகள் எல்லாம் இத் திருவிழாவுக்கு வர்ணம் இழைக்கின்றன.

சாமளாவை வீட்டுக்காகக் காவல் வைத்து விட்டு, அவள் மாமி ஜானகியும் மாமா சுந்தரேசனும் கோவிலுக்குப் போய்விட்டார்கள். தான் தயாரித்திருந்த உசேனி ஸ்வர ஜதியை ஈசன் சந்நிதியில் அரங்கேற்ற ஆவல் கொண்டிருந்தாள்; ஆனால் அது நிறைவேற வில்லையென்ற துக்கம் பொங்கி வந்தது சாமளாவுக்கு. அரங்கேற்ற ஏற்பாடு செய்வதாகச் சொன்ன மாமாவும் மௌனம் சாதிக்கிறார்; கேட்ட போதெல்லாம் முகம் கடுகடுக்கிறார்.

இதற்கு விமோசன மில்லையா? இரவு பகலாய் இந்த வீட்டில் உழைக்கிறேனே. இந்த ஒரு நாளாவது நடராஜமூர்த்தியைத் தரிசனம்செய்ய எனக்கு ஒழிவு கிடையாதா? ஈசனையும் அவனது அருளால் பெற்ற நாட்டியக் கலையையும் நினைத்துக் கொண்டு மாமியின் கொடுமையைப் பொறுத்து வருகிறேன். அரிய பெரிய பதங்கள், தாளக்கட்டுடன் அமர்த்தி, பாவத்துடன் சொல்லி வைத்த அபிநயம்--இவைகளுக்காக மாமாவுக்கு நன்றி. அவருடைய உதவியால் பரத நாட்டியத்தில் இவளுக்கு நல்ல தேர்ச்சியென்று உலகம் புகழும் மேன்மை எனக்கு வாய்க்கலாம். வாஞ்சையோடு தன் உயிர் போல் என்னை மட்டு மன்றி என்னிடம் இந்தக் கலைப்பயிரையும் இரவு பகலாய் ஆவலோடு வளர்த்து வந்த என் தாய் இருந்தால் எனக்கு இக் கதி நேருமா? அவள் என்னைக் குழந்தையாகவா பாவித்தாள்? நடனக்கலை மனித உருவத்தில் வளர்ந்து பிரகாசிக்க வேண்டுமென்று அமோக ஆசை கொண்டாள். சாகுந் தறுவாயில் என்னிடம் சத்தி

யமும் வாங்கிக் கொண்டாளே—நான் அதை மறக்கக்கூடாதென்று! என்னை யறியாமல் என் வாக்குக்குத் துரோகம் செய்கிறேனு? வயிறு செய்யும் கொடுமை! ஆனால் அதற்கும் உண்மையாய் உழைக்கிறேனே. உள்ளம் அடங்காமல் பொங்கி யெழும் இந்த ஆசை, நாட்டியப்பித்து, இப்பொழுது ஏக தேசந்தானே கிளம்புகிறது—அதற்கு இப் புனித மான மங்கல நாளிலாவது ஒரு போக்கு விட வேண்டாமா? நாள் தோறும் மாமி வையும் வசவு, அடிக்கும் அடி—இவைகளை மறந்தாலும் இன்று கோவிலுக்கு வரக்கூடாதென்று வீட்டில் அடைத்துவிட்டுப் போனாளே, ஆனந்தத் தாண்டவ தரிசனம் இழந்தேனே. இதை நினைக்க நினைக்க உயிரே கரைகிறது.

இப்படி யெல்லாம் நொந்து கொண்டாள் சாமளா. தாயாரும் தானும் உயிர்போல் வளர்த்த பயிர் வாடிக் கருகுமா? உள்ளத்தில் முளைத்து, உணர்ச்சியில் அரும்பி, நடிப்பில் ஒளி வீசும் தனது நாட்டியம் காட்டு மலர் தானு? அதை அருளின தாண்டவ மூர்த்திக்கும் அது வேம்பாகி விட்டதா; இல்லை, இருக்காது ஒரு சக்தி, ஒரு கலை, உலக வாழ்வில் வீணுகாது. திக்கு நோக்கி நடராஜப் பெருமானை அழைக்கிறது சாமளாவின் உள்ளம். அவளுடைய கண் பேசுகிறது. இதயம் அவரிடம் பாய்கிறது. சலியாத சிரத்தையுடன் திரும்பினுள். சுவரில் நடராஜரின் உருவம், தனக்களித்த கலைச் செல்வத்தைக் கண்டு களிக்க அவரே எழுந்தருளியிருக்கிறார், இனி, கோவிலுக்குப் போவானேன்! "இக் கலையில் எனக்கு உண்மையான ஆர்வம் இருப்பதாகில், இதை உனக்கே நிவேதனம் பண்ணுகிறேன், ஏற்றருள்வாய்;" கற்பூர ஆரத்தி செய்கிறாள். பரத நாட்டியத்தின் முதல் அரங்கமான அலாரிப்பு ஆரம்பமாகிறது. இதயத்தில் இது வரையிலும் மௌன விழா, இப்பொழுது அது பாடல் தழுவி ஆடலாய்ப் பரிமளிக்கிறது. தான் தயாரித்த உசேனிஸ்வரஜதியில் ஈடு படுகிறாள் சாமளா. நடராஜ மூர்த்தியையே நேரில் காண்கிறாளா? என்ன பரவசம்! அவரேதான் பொன்னரங்கில் நடிக்கிறாரோ! அத்தனை ஆவேசம்; —அவ்வளவு மெய்ப்பாடு!

பிறகு முத்துத்தாண்டவர் பதத்தில் "எந் நேரமும் ஒரு காலை" என்ற பாட்டின் சரணத்தில் 'எமனை உதைத்த போது எதிர் சுளுக்கேறி நொந்தோ" என்ற வரியைப் பாடும் போது அவள் காதில் கஜ்ஜை நாதம் கேட்கிறது, மத்தளம் ஒலிக்கிறது. அவள் கண்களில் ஒரு ஆனந்தம். தம் கால்களை உதறிக்கொண்டு, கலா நாதனை சபா நாயகன் சாமளாவின் நாட்டியத்தில் லயித்துத் தாமே அவளுடன் நடிக்கிறாரா? * * * தளர்ந்தாள், தன்னை மறந்தாள் இப்பாவனையில் சாமளா.

* * * * *

"யார் நீ, சாமளாதானு?"

"ஆம், ஸ்வாமி!"

"நாங்கள் யார் தெரியுமா?

"உங்களைக்கண்டேன்-நடராஜரைக் கண்டேன்"

"திருடி! மாய்மாலக்காரி! நாங்கள் கோவில் பட்டர்கள்"

"வணங்குகிறேன்"

"பேடிசக்காரி. உற்சவ மூர்த்தியைத் திருடிக்கொண்டு வந்தது மல்லாமல் வேஷமும் போடுகிருயா? அதோ நிற்கிறார் அவரே நடனத்திருக் கோலத்தோடு. இன்னும் சாட்சி வேறு வேணுமா? கொஞ்ச நேரத்துக்கு முன் கோவிலில் உற்சவ மூர்த்தியைக் காண வில்லை. நாங்கள் திகைத்துப் போனோம். பக்தரெல்லாம் கலங்கினர்கள், காவலாளிகள் வீடு வீடாய்த் தேடினர்கள். உன் வீட்டில் கண்டுபிடித்தனர். என்ன சொல்கிருய்?"

"நடராஜர் ஆணையாய் நான் ஒன்றும் அறியேன்"

"உன் அழகில் நாங்கள் ஏமாறமாட்டோம். இம்—"

"ஐயோ, வேண்டாம். அடிக்காதீர்கள். ஒரு குற்றமும் நான் செய்யவில்லையே!"

"பட்டர்களே! நிறுத்துங்கள். அவள் நிரபராதி."

"இது யார் சப்தம்!"

சாமளா கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்திருந்தாள், சுற்றிலும் பார்த்தாள், பயந்து பயந்து. ஒருவருமில்லை. ஈசன் கைவிடமாட்டானென்ற உறுதி கொண்டாள்.

* * *

"நான் கண்ட இந்தக் கனவின் அர்த்தமென்ன?" என்று கேட்டான் சுந்தரேசன்.

"கனவின் அர்த்தம் நமது கற்பனை தான்" என்றாள் ஜானகி அசிரத்தையாய்.

"இருந்தாலும் தெய்வ கட்டளையே, அதை அலட்சியம் பண்ணலாமா?"

"கனவில் நவரஸமும் தோன்றும். அதற்கெல்லாம் நாம் பின்பாட்டுப் பாட முடியுமா?"

"கனவில் தெய்வம் தோன்றினுல் பலிக்குமென்பார்களே!"

"கனவெல்லாம் பலிக்கிறதா?"

"இந்த நல்ல நாளில் தெய்விகக் கனவு"

"நல்ல நாள் நினைவினுல் தான் இந்தக் கனவு!"

"இன்றிரவே சாமளாவைக் கூட்டிக்கொண்டு சிதம்பரத்துக்கு வா. அவள் அரங்கேற்றத்தை நான் கண்டு மகிழ்கிறேன்' என்ருரே நடராஜர்"

"நானேன் குறுக்கே நிற்கிறேன்?"

"நாளைக்கு ஏதாவது நேரிட்டால் இந்தக் கனவு நமது மனசை உறுத்திக்கொண்டேயிருக்கும்."

"வேணுமானுல் புறப்படுவோம் என்னுலே கெட்டதென்று சொல்லவேண்டாம்."

"சீக்கிரம் தயார் செய்."

"திருவாதிரைக் கூட்டம். சாமளாவோ அழகும் கலையும் கொண்டவளென்று ஊரார் எல்லாம் சொல்லும்போது நாம் யோசித்துத்தான் ஒரு காரியம் செய்யவேணும். வேண்டாத காலத்துக்கு இந்த இரண்டும் நமக்கு விரோதிகளாய் விடலாம். இதையும் சொல்லவேண்டியது என் பொறுப்பு. தாயில்லாக் குழந்தையைக் கெடுத்துவிட்டார்களென்று உலகம் நம்மைப் பழிக்கக்கூடாது."

"அங்கு ஏன் தாமதிக்க வேண்டும்? நாளையே திரும்பிவிடுவோம்" என்று சமாதானம் சொன்னுன் சுந்தரேசன்.

"பழி என் பேரிலிருக்காது. எல்லாம் உங்கள் பொறுப்பு" என்று முணுமுணுத்தாள் ஜானகி.

* * *

"கோயிலில் நேற்று ஒரு பெண் ஆடினுளே, கவனித்தாயா?" என்று ஊக்கத்துடன் கேட்டான் மாதவன்.

"நான் ஆட்டத்தைப் பார்க்கவில்லை; அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று தன் மனத்தை வெளியிட்டான் மனோகரன்.

"அவளுடைய அபிநயம் உன்னத நிலையிலிருந்தது. அவள் முகத்தில் தோன்றியதுபோல் எவரிடத்திலும் பாவங்கள் அவ்வளவு சுத்தமாய் நான் கண்டதில்லை. ஏன், நாட்டியக்கலையின் சிகரமாய் விளங்குகிருள்"

"அதுதான் தூணோடு தூணுய்த் தூங்கிக் கொண்டிருந்தாயோ?"

"அவளுடைய ஆட்டத்தில் என்னைப் பறிகொடுத்து நின்றேன். என்னை மிஞ்சிவிட்டாள்."

"நம்முடைய கம்பெனியில் அவளைச் சேர்த்தால் கொள்ளை லாபம் கிடைக்குமே. அவளுடைய அழகுக்கே ஆயிரக்கணக்கில் வசூலாகும். எப்படி என் யோசனை?" என்று மனோரதங்கொண்டான் மனோகரன்.

"சீ! நாடகத்தில் சேர்த்து அவளைக் கெடுக்கவா பார்க்கிருய்?" என்று மாதவன் சீறினுன்.

"பார், மானேஜரும் நானும் என்ன யுக்தி பண்ணுகிருேமென்று இதோ மார்தட்டுகிறேன்"

"நான் சம்மதியேன். புனிதமான கலை. நீ செய்வது கலைத் துரோகம்."

"இதில் புண்ணியமேது, பாவமேது? அவள் இஷ்டப்பட்டால்?"

"பார்க்கலாம்"

"பார்க்கலாம்."

* * *

"அந்த வாழ்க்கையை நான் விரும்பவில்லை, மாமா! அதில் எத்தனையோ ஆபத்துக்கள் மலிந்து கிடக்கின்றன." என்ருள் சாமளா.

"எல்லாம் மனக்காவல் தானே, ஏன் பயப்படுகிருய்?" என்று சுந்தரேசன் தைரியம் சொன்னுன்.

"மாதம் ஐந்நூறு ரூபாய், எச்செலவும்போக. இந்த அதிர்ஷ்டம் யாருக்குக் கிடைக்கும்? ஏதோ நீ செய்த பாக்கியம்" என்று ஜானகி உற்சாகமூட்டினுள்.

"அது படுகுழி, பின்னுல் நரகவேதனை" என்று சாமளா வெறுப்படைந்தாள்.

"கடைசியாக என்ன சொல்கிருய்? உன் எதிர்கால வாழ்வையும் கெடுத்துக்கொண்டு எங்களையும் கவலைக்குள் ஆழ்த்திவிடாதே" என்று எச்சரித்தான் சுந்தரேசன்.

"உன்னை இந்த நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தோம். குறையும் பூர்த்தியாகவேணும். எட்டி யோசித்துப்பார், சாமளா!" என்று நய வார்த்தை கூறினுள் ஜானகி.

"மாமா, மாமி! நீங்கள் செய்த உதவிக்கு என் மனமார்ந்த நன்றி. இதோ வணங்குகிறேன். ஆனுல் நாடகத்தில் நான் சேர முடியாது. அந்த வாழ்வு எனக்கு விடிவே இல்லாத இருண்ட உலகமாய்த் தோன்றுகிறது" என்று முடிவு கூறினுள் சாமளா.

சுந்தரேசன் ஒரு பெருமூச்சு விட்டான். ஜானகியின் முகமோ ஒளியிழந்துவிட்டது.

"சரி, சாமளா! பின்னுல் யோசித்துக் கொள்வோம். நீ வீட்டு வேலையைக் கவனி" என்ருன் சுந்தரேசன். சாமளா போனபின் சுந்தரேசன் மௌனத்தில் ஆழ்ந்தான். ஜானகியோ மனமுடைந்தவளாய் வீட்டிற்குள்போய்ப் படுத்துக் கொண்டாள். அப்போது வெளியில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதன் சத்தம் சுந்தரேசனின் மௌனத்தைக் கலைத்து விட்டது. எழுந்து வாசல் பக்கம் திரும்புமுன் மதிப்பு வாய்ந்த தோற்றமுள்ளவர் ஒருவர் வீட்டுக்குள் நுழைந்து சுந்தரேசனுக்கு வணக்கம் தெரிவித்தார். சுந்தரேசனும் வணங்கினுன்.

"என்ன, சாமளாவின் கருத்து நமக்கு அனுகூலந்தானே?" என்று கேட்டார் கண்ணியத் தோற்றமுள்ளவர். அவர் தான் நாடகச் சபையின் சொந்தக்காரர் பொன்னம்பலம்.

"ஜானகியும் நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம்—"

"அப்புறம்?" என்று திகைத்தார் பொன்னம்பலம்.

"எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை, சாமளாவோ பிடிவாதம் செய்கிறாள்" என்று தழுதழுத்தான் சுந்தரேசன்.

"சரி, நமது இரண்டாவது யோசனை இருக்கவே இருக்கிறது. காலம் தாழ்த்த இது சந்தர்ப்பமில்லை" என்று விரைந்து பேசினார் பொன்னம்பலம்.

"உங்கள் யோசனையால் எனக்குப் பழிச்சொல் நேருமோவென்று கலங்குகிறேன்."

"அந்தக்கவலை உங்களுக்கு வேண்டாம். இதோ ஆயிரம் ரூபாய். முதலில் நீங்கள் புறப்பட்டு வாருங்கள். இந்தப் பெட்டி நிறைய நல்ல ஆடைகள் உங்கள் மூவருக்கும். இரவு பன்னிரண்டு மணிக்கு எங்கள் சபையின் முக்கிய நடிகர் மாதவன் வருவார். வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறேன். மாதவனோடு சாமளா வந்து சேர்வாள் எங்களிடம். கொஞ்சநாள் எங்களோடு நீங்களும் இருந்தால் அவள் சமாதானமடைவாள். வேறு வழியில்லை அவளுக்கு. மாதவனிடம் எல்லாம் சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பொன்னம்பலம் அவசர அவசரமாகப் போய் விட்டார்.

* * *

அந்தி வேளை. சோகம் படர்ந்த முகத்துடன் வீட்டு வாசல் பக்கம் சாமளா நிற்கிறாள், என்ன நேருமோவென்ற அச்சத்துடன். சற்று முன்தான் ஜானகியும் சுந்தரேசனும் மோட்டாரில் போனார்கள். ஒரு வார்த்தையாவது சொல்லிவிட்டுப் போனார்களா? என்றுமில்லாத விலையுயர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு இரகசியமாய்ப் போவதுபோல் பறந்து விட்டார்கள். வந்தவனோடு அவர்கள் தனியாகப் பேசினது சாமளாவின் மனசைக் கலக்கிவிட்டது. வந்தவன் யாராயிருக்கலாம்? பார்த்த நினைவும் வருகிறது; ஞாபகத்தைத் தட்டி எழுப்பினாள். கோயிலில் தான் பார்த்தது நடனமாடும்போது, வாலிபன் ஒருவன் முகத்தில் அதிசயம், ஆனந்தம், பரவசம்—இதெல்லாம் மாறிமாறித் தோன்றிக்கொண்டிருந்தன. இன்னொருவன் மூஞ்சியை இழிவான விகாரங்கள் அடிக்கடி இருள்வித்துவந்தன. இந்த விகார வாலிபன்தான் வண்டியைக் கொண்டுவந்தானா? அவனைப் போலத்தான் இருந்தது.

மாலையும் கழிந்து இருளும் சூழவே சாமளா மேன்மேலும் கலவரப்பட ஆரம்பித்தாள். இந்தத் தனிமை சித்திரவதை போலிருந்தது. வீட்டிலிருக்க முடியாமல் தெருப் பக்கம் போனால், போவார் வருவாரைப் பார்த்தாவது மனம் நிம்மதியடையலாம். ஆனால் இருட்டி விட்டதே. வாசலில் நின்றுகொண்டு தெருவிலுள்ள சத்தங்களைக் கேட்டாவது கவலையை மறக்கலாமல்லவா? எங்கிருந்தாலென்ன? பாழும் சிந்தனை அவள் மனத்தை உடும்புபோல் பற்றிக்கொண்டது.



இரவு மணி பன்னிரண்டு அடித்ததும் உருவம் ஒன்று ஒதுங்கி ஒதுங்கிச் சாமளாவின் பக்கம் வருவதுபோல் தெரிந்தது. ஒரு நடுக்கம் மழுப் போல் அவள் நெஞ்சில் இறங்கியது. வீட்டுக்குள் ஓடலானாள். "சாமளா, பயப்படாதே. வீட்டில் ஒருவருமில்லையே?" என்ற குரல் கேட்டது. கம்பிக் கதவு பூட்டித்தானிருந்தது. இருந்தாலும் தனிமையில் பயம். வாசலில் அபாயம் நின்று கொண்டிருக்க மௌனமாயிருப்பது மேலும் அபாயமென்று கருதினாள். "இங்கு யாருமில்லை. போங்கள்" என்ற சொற்கள் அவளிடமிருந்து தாமாக வருவதுபோல்கேட்டன. இது பயம் அளித்த தைரியம்.

"சாமளா! நல்ல பொழுதாய் விடியவேணும் உனக்கு"

"போங்கள் என்று சொன்னேனே, தெரிய வில்லையா? இந்நேரத்தில் இங்கு நிற்கவேண்டாம்"

"உன் நன்மைக்காகத்தான் நிற்கிறேன்"

"இந்த இதமான வார்த்தை என்னைப் படுகுழியில் தள்ளுவதற்கா? போங்கள்"

"இல்லை, சாமளா!"

"போகிறீர்களா, இல்லையா?"

"உன் கலை நண்பன் நான்"

"கலையின் பெயரால் என் வாழ்வைச் சிதைக்கவா?"

"அன்று கோயில் தூணோடு தூணாய் நின்று உன் நாட்டியத்தை அனுபவித்தேனேயொழிய உன் அழகில் ஈடுபட்டு மெய்மறக்கவில்லை. உன் அபிநயத்தில், உன் முக பாவத்தில் மெய்மறந்தேன். கலையுணர்வு தவிர வேறெதுவும் எனக்கில்லை—அப்பொழுதும் இப்பொழுதும்."

வாசலருகே வந்துபார்த்தாள். தனது ஆடலில் ஈடுபட்டு வசமிழந்த வாலிபன் இவன்தானென்று கண்டதும் கதவைத் திறக்கப் போனாள். மறுகணம் ஒரு நினைப்பு என்னவோ? அங்கேயே நின்றுகொண்டு சற்று யோசனை பண்ணினாள். சாமளாவின் மனசை அறிந்துகொண்டவனாய், "சந்தேகம் வேண்டாம். நானும் நடனக்கலை பயின்றவன். அதன் லட்சணமும் ஏதோ தெரியும். கலையின் உருவத்தைக் கற்பனை செய்துவந்தேன், இதுவரையும் உன் நாட்டியத்தில் அதன் உருவங் கண்டேன், தொனி கண்டேன், உயிரும் ஒளியும் கண்டேன். அதற்காக நன்றி செலுத்த வந்தேன். இந்த ஆபத்தான சமயத்தில் உனக்கு உதவும்படி என் மனச்சாட்சி இங்கு என்னைத் தள்ளிக்கொண்டு வந்தது" என்று நலம்படக் கூறினான் வந்த வாலிபன்,

"தாங்கள் யார்?"

"என்னை மாதவனென்று அழைப்பார்கள். நாட்டியப் பித்துத் தூண்ட நாடகத்தில் சேர்ந்தேன். சிதறும் தறுவாயிலிருக்கிறது என் லட்சியம். வாழ்வும் குலையுமோவென்று அஞ்சுகிறேன். அந்த நாடகமே உன் எதிர்காலத்தையும் விழுங்கக் காத்திருக்கிறது."

"இன்னும் தெளிவாய் அறியலாமா?"

"அறிவிக்கவே நான் இங்கு வந்தது. நீயும் விரைவில் தீர்மானம் செய்துகொள்."

"சொல்லுங்கள்" என்று ஆவல் கொண்டாள் சாமளா.

"உன் மாமன், மாமி சம்மதத்தோடு இரவோடு இரவாய் உன்னைக் கடத்திக்கொண்டு போக நிச்சயித்துவிட்டார்கள் எங்கள் நாடக சபையினர். அவர்களிடமிருந்து பிரிய நினைத்த எனக்கு அவர்கள் சதியாலோசனை நல்வழி காட்டியது. என்னை அனுப்பினார்கள், உன்னைக் கடத்திவர. உடனே

ஸ்தோத்ர ரத்னமாலா-

ஸ்ரீரங்கம் கோடி கன்னிகாதானம் தாதாசாரியார்

பூதேவி ஸ்தோத்ரம், லக்ஷ்மீ ஸ்தோத்ரம், கிருஷ்ண கர்ணாமிருதம், ராம கர்ணாமிருதம், கோபிகா கீதம் மற்றும் அனேக ஸ்தோத்திர பாடங்களுடன் கூடியது.

விலை ரூ. 1—2—0

கிடைக்குமிடம்:—

"காவேரி" கும்பகோணம்.

இங்கு வந்தேன். அவர்களைச் சந்தித்த பிறகு மறுப்பது உன்னால் இயலாத காரியம்."

"யோசனை ஒன்றும் ஓடவில்லையே! கண்ட கனவெல்லாம் பாழாச்சா? நீங்களே சொல்லுங்கள் தயவு செய்து" என்று கம்பியை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டாள். வெடுக்கென்று தன் கையை வாங்கிக்கொண்டான் மாதவன்—நினைவு மறந்து அவன் கைமேல் அவள் கை பட்டதனால்.

"உன்னை அவர்களிடம் ஒப்படைக்க ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டான் உன் மாமன். உனக்கு நல்ல சம்பளமும் வேண்டிய சௌகரியங்களும் ஏற்பாடு செய்வதாய் அவர்கள் சொல்லி, உன் மாமனையும் மாமியையும் தங்கள் வலையில் சிக்கவைத்து விட்டார்கள். இதுதான் கதையின் சுருக்கம். என் கடமை நிறைவேறிற்று."

"இல்லை, அரைகுறைதான். இந்த வலையிலிருந்து விடுபட ஒரு யோசனை சொல்லி......என்னைக் காப்பாற்றவேணும். லட்சிய புருஷனான உங்களுடைய தர்மம் இதல்லவா? எனக்கு இனி யார் துணை?"

"நான் இன்றிரவே புறப்படுகிறேன்."

"எங்கே?" சாமளா திகைத்துப்போனாள்.

"எங்கே வாழ்வும் கலையும் இணைபிரியாமலிருக்கின்றனவோ, எங்கே கலையும் இன்பமும் ஒரு பொருளாய் இழைகின்றனவோ அங்கே......"

"அங்கே என்னையும் அழைத்துச் செல்லுங்கள்."

சாமளா மாதவன் கைமேல் தன் கையை மெல்ல வைத்தாள். பூங்கொடியொன்று கொழு கொம்பைப் பற்றுவதுபோலிருந்தது அவனுக்கு.

"இன்னும் திசை தெரியவில்லையே எனக்கு" என்று சாமளா ஏங்கினாள்.

"இரவு விடியாமலிருக்குமா? ஒளியைக் காண்போம். லட்சிய வாழ்வு நமக்காகக் காத்திருப்பது போல் தோன்றுகிறது என் கண்ணுக்கு."

"என் தாயாருக்கு வாக்களித்திருக்கிறேன்—நாட்டியக் கலையை மறக்கமாட்டேனென்று"

"என் லட்சியமும் அதுதான்." மாதவன் பூரிப்புடன் சொல்வதைக்கண்டாள் சாமளா.

"நமது வாழ்க்கை......" கதவைத் திறந்துவிட்டாள்,

"அதற்கே நிவேதனம்" என்று மாதவன் கை கொடுத்தான். ●



ரவிந்திரநாத் தாகூர்

மொழிபெயர்ப்பு — **க. சந்தானம்** (மத்ய அரசாங்க மந்திரி)

[தேவர்களின் கட்டளையால், தேவகுரு பிரஹஸ்பதியின் மகன் கசன் அசுரகுரு சுக்கிராசாரியாரிடம் சஞ்சீவினி வித்தை கற்கப்போகிறான். ஆங்கு ஆயிர வருஷம் அத்தியயனம் செய்து, சுக்கிரர் மகள் தேவயானியைக் கீதத்தாலும் நர்த்தனத்தாலும் நன்கு திருப்திசெய்து, தன் காரியம் சித்தியடைந்து தேவலோகம் திரும்புகிறான். விடைபெற தேவயானியினருகில் சென்ற காலத்தில் அவர்களிருவருக்கும் சம்பாஷணை நடக்கிறது]

கசனும் தேவயானியும்

கசன்

விடை தருவாய், தேவயானி. இன்று நான் அமரபுரி போகவேண்டும். என் குருகுலவாசம் இன்றோடு முடிந்தது. ஆசி கூறுவாய். நான் கற்ற வித்தை அழியாமல் வளர வேண்டும்; என் உள்ளத்திலே சோதிமணி போலது சொலிக்கவேண்டும்; மாமேருவின் உச்சிச்சிகரத்தில் என்றும் ஒளி வீசும் கதிரவன் கிரணம்போல் பிரகாசிக்கவேண்டும்.

தேவயானி

உன் மனோரதம் பூர்த்தியாயிற்றுப் போலும்! ஆசாரியரிடமிருந்து அடையக்கூடாத வித்தையை அடைந்துவிட்டாய். சாதிக்கத்தகாத சித்தியை ஆயிரமாண்டு பாடுபட்டுப் பெற்றுவிட்டாய். ஆயினும், உன் மனத்தினுட் புகுந்து பார், அதனுள் வேறோர் ஆசையும் மிஞ்சவில்லையா?

கசன்

எதுவுமில்லை.

தேவயானி

யாதொன்றுமில்லையா? ஆயினும் மறுமுறை உன் இதயத்தினுட்குடைந்து, அதன் எல்லை முனை வரை மூழ்கிப் பார்ப்பாய்; ஒருகால் கண்ணுக்குத் தெரியாததோர் கோடியில் பசும் புல்லின் ஊசி முனை போல், வாஞ்சையின் விதை கூரிய முளைவிட்டு, மிகுந்த வேதனை செய்கின்றதோ, பார்.

கசன்

என் வாழ்க்கையின் கோரிக்கை பூர்த்திபெற்றது. உள்ளத்தில் எவ்விதத் தளர்ச்சியும் காணேன்; எள்ளளவு சூன்யத்தையும் அறிகிலேன். சுந்தரக் கண்ணியே!

தேவயானி

ஆயின், மூவுலகிலும் நீயே சுகியாவாய். இனி இந்திர லோகத்தில் பெரிய பணியாற்றி, நின் நிமிர்த்த தலைமீது, உயர்ந்த பதவி வகிக்கப்போவாய், அமரபுரியில் உனக்காக ஆனந்த முழக்கம் ஆரவாரிக்கும்; மனதைக்கவரும் மங்களமுரசுஒலிக்கும்; நந்தவனத்தில் அன்று கொய்தமந்தார மலர்களைத் தேவமாதர் உன் தலைமேல் பொழிவர், அமராவதியின் வீதியெல்லாம் குயில் குரலுள்ள அப்ஸரகின்னரகன்னிகைகள் கலகல சப்தம் செய்வார்கள்.

ஆகா, அந்தணனே, அயல்நாட்டில் அன்னியர் நடுவில் கொடுங் கல்விபயின்று வெகு கஷ்டத்துடன் உன் காலம் கழிந்தது. நாடு கடந்த வேதனையைத் தணித்து, உன் வீட்டின் ஆனந்தத்தை நினைவூட்ட இங்கு எவருமில்லை. கிடைத்த பொருளைக் கொடுத்து, இந்த ஏழைக் குடிசையில், வந்த விருந்துக்கு என்னாலியன்றவரை உபசரித்தேன்; ஆனால், இங்கே தேவலோகத்தின் திவ்ய சுகமெங்கே! அமரமங்கையரின் மங்கள முகமெங்கே! ஆனந்த லோகத்தை அடைந்தபின்னர் என் அதிதி பூஜையின் குறைகளை நினையாய் என்று மனத்தினுள் நம்பிக்கை கொண்டேன்.

கசன்

மோகன முறுவலுடன், விடை கொடுத்து இன்று நீ என்னை அன்புடன் அனுப்ப வேண்டும்.

தேவயானி

முறுவல்? இங்கு முறுவலேது? இதுவும் இந்திர லோகமென்றெண்ணினாயா? பூவினுள் புழுப்போல் ஆசையென்னுள்ளத்தில் நுழைந்துள்ளது; கமல மொட்டைச் சுற்றிச்சுற்றி வட்டமிடும் வண்டுபோல், வாஞ்சை. விரும்பிய பொருளைச் சூழ்ந்து சுழலுகின்றது. சுகம் சென்றபின், நினைவு தனித்து நின்று, பெருமூச்சுவிட்டு இந்தச் சூனிய வீட்டில் வசிக்கும். முறுவல் மலிந்து கிடக்குமிடமில்லையிது! செல்வாய், நண்பா, காலத்தை ஏன் வீணில் விரயம் செய்கிறாய்? ஆவலுடல் காத்திருக்கின்றன தேவகணங்கள்.

உடனே போய்விடவேண்டுமா? இரண்டு சொல்லில் எல்லாம் முடிந்துவிட்டதா? ஆயிரம் வருஷத்தின்பின் விடை இது தானா?

கசன்

தேவயானி, நான் என்ன தவறுசெய்தேன்?

தேவயானி

அந்தோ! இந்தச் சுந்தர அரண்யபூமியை, ஆயிரமாண்டு அன்புடன் அழகிய நிழலளித்து, தளிர்களின் ஒலியோடு பக்ஷிகளின் பாட்டையுமூட்டிய இதனை விட்டுச் செல்வது உனக்கு இவ்வளவு எளிதாயிற்றன்றோ? ஏனோ வனத்தின் தருக்களெல்லாம் வாடியிருக்கின்றன; கானன நிழலும் சோகத்தால் கறுத்து இருண்டதுபோல் காணப்படுகின்றது. காற்றில் துக்கத்தொனி துலங்குகின்றது; மரங்கள் உலர்ந்த இலைகளைச் சொரிகின்றன; நீ மட்டும் இரவினிறுதியில் இனிய கனவிலிருந்து விழித்தவன்போல், முகத்தில் புன்னகையுடன் பிரயாணமாதல் தகுமோ?

கசன்

தேவயானி, இந்த வன பூமி என் தாய் நாடாயிற்றல்லவா? இங்கே யான் மறுபிறப்புற்றுப் பெரும்பேறு பெற்றேன். இதன்பால் எனதன்பு குறையவில்லை. என்றென்றுமிதனை உள்ளம் பூரித்து இன்பமுடன் நினைப்பேன்.

தேவயானி

இதோ அந்த ஆலமரம்; மாடு மேய்த்து. மத்தியான வேளையின் கொடிய வெயிலில். இதனடியில் நீ படுத்துறங்குவாய்; விருந்தோம்பும் விரதம் பூண்ட இம்மரம் களைத்த உன் தேகத்தின் மீது நீள் நிழல் போர்த்து, ஆனந்த நித்திரையளித்து, தன்னிலைகளின் இனிய ஓசையுடன் காற்றுவீசும். பலநாள் பழகிய இம்மரத்தடியில் கடைசியாகச் சிறிதுநேரம் தங்கி, அதன் நிழலின் நல் நினைவையுமேற்றுச் செல்வாய். அன்பனே. இங்கமர்ந்து செல்வதால் சிறிது நேரம் தாமதம் ஏற்படின் அதனால் தேவலோகத்திற்கு யாதொரு தீங்கும் நேர்ந்திடாது.

கசன்

விடைபெற விரும்பும் இவ்வேளையிலே வெகு நாள் உறவாடியும் புதிதுபோலுள்ள வன பந்துக்களெல்லாம், ஓடிப்போகும் தோழனைத் தடுப்பதற்கு அந்திம விண்ணப்பம் செய்வதுபோல் தமது அபூர்வ சௌந்தர்ய ராசியைச் சேகரித்துக் கவலையுடன் புதிய அன்புவலை விரித்துள்ளன. ஓ, தருவாசேனே, அடைந்தோருக் கடைக்கலந் தரும் வள்ளலே, வணங்குகின்றேன். கணக்கற்ற பதிகர்கள் உன் நிழலில் தங்குவார்கள்; என்னைப் போல் எண்ணற்ற மாணவர்கள் எல்லையற்ற நாட்களுக்கு, நிழலடர்ந்த மறைந்தவிடங்களில், ஏகாந்த செம்புல்லாசனத்தில், அமைதியுடனமர்ந்து வேதமோதுவர்; அதிகாலையில் நீராடிய ரிஷி குமரர்கள் ஈர மரவுரிகளை உன் கிளைகள் மீதுலர்த்துவர்; இடையர் கூட்டம் நடுப்பகலிலும் உன் நிழலில் ஆடி மகிழ்வர். ஓ! என் நெடுநாள் நண்பர்காள், அப்பொழுதெல்லாம் என்னையுமுங்கள் மனத்தில் நினைப்பீரோ!

தேவயானி

எங்கள் ஆசிரம பசுவினையும் ஞாபகத்தில்வைத்துக்கொள்; தேவாமுதம் அருந்தும் பெருமையிலிப்புனிதப் பசுவை மறந்துவிடாதே.

கசன்

அவள் பால் அமிர்தத்தினுமினிய அமிர்தமன்றோ? அவளைப் பார்த்தாலே பாவந்தீரும்; அன்னையன்னாள், சாந்த சொரூபி, கவரும் காந்தியுடையாள், தீம்பால் குடம் நிறைப்பவள். பசி தாகம் சிந்தியாது, களைப்பைக் கவனியாது அவளுக்குச் சேவைசெய்தேன்; அடர்ந்த காட்டிலே பசும் புல் மிகுந்த ஆற்றங்கரையினிலே, அவளுடன் நெடுநாள் சஞ்சரித்தேன். மெல்லிய பசும்புல் மிஞ்சிய படுகைகளில் மனம்போனபடி மேய்ந்து, மகிழ்ந்து, கவலையின்றி மெதுவாக மரத்தடியில் புல்மேல் படுத்து நாள் முழுதும் அசைபோடுவாள்; அவ்வப்போது தன் பரந்த கண்களில் நன்றி துலங்க என்னை ஆழ்ந்த அன்புடன் நோக்கி என்னுடலை நக்குவாள். அவளது சஞ்சலமற்ற அந்த நேசநோக்கும், கொழுத்த காந்தியுள்ள தேகமும், மிருதுவான வாலும் என் மனத்தில் பதிந்து கிடக்கும்.

தேவயானி

மேலும் மனத்திலிருத்துவாய், நமது மணியோசை நதி, வேணுமதியை.

கசன்

அவளை மறவேன். வேணுமதி! நறுமலர் மலிந்த கொடி வீடுகள் வழிசென்று, ஆனந்தத் தேனொழுகும் மதுரகீதங்கொண்டு, பணி செய்யப் போகும் கிராமக் கன்னிகைபோல், எப்பொழுதும் துரிதப் போக்குடன், என்றும் புண்ணியப் புனலுடன் தேசாந்தரத்தில் எனக்குத் தொண்டு செய்த தோழியன்றோ?

தேவயானி

அந்தோ! நேசா! தாய்நாடொழிந்த உனக்கு அன்னியர் வீட்டில் வசிக்கும் துக்கத்தைத் தணிப்பதே தன் கருமமாகக்கொண்டு அல்லும் பகலும் முழுமனத்துடன் பாடுபட்ட வேறு தோழி ஒருத்தியுமில்லையோ? ஆ! இதென்ன பேராசை!

கசன்

அழியாமலென் மனத்தில் அவள் பெயர் இழைக்கப்பட்டுள்ளது.

தேவயானி

நினைவிருக்கின்றதா உனக்கு? நீ இங்குவந்த அம்முதல் நாள்; இளம் பிராம்மண குமரன் அழகிய அருணனைப்போல் பெண் மேனியுடன் உனதுடல் காந்திவீச, நெற்றியில் சந்தனம் பூசி, கழுத்தில் மாலையணிந்து, பட்டாடையுடுத்து, அதரங்களிலும் நேத்திரங்களிலும் இனிய முறுவல் மலர இதே புஷ்பவனத்தில் வந்து மறைவில் நின்றாய்.

கசன்

அப்பொழுது நீ நீராடிமுடித்து நனைந்த கூந்தல் நீண்டு தொங்க, சோதியில் குளித்தெழுந்த உஷாதேவி போல், புது வெண்பட்டாடை தரித்துத் தனிமையாகக் கையில் பூக்கூடை கொண்டு பூஜைக்காகப் புதுமலர் கொய்து கொண்டிருந்தாய். வினயத்துடன் யான் கூறினேன்: 'இத்தொழில் உனக்குத் தகாது. பூக்கொய்து கொடுக்க எனக்கு அனுமதியளிப்பாய், தேவி'.

தேவயானி

திடுக்கிட்டு நான் திரும்பி உன்னைக் கண்டு, உடனே உன் வரலாறு வினவினேன். வினயத்துடன் கூறினாய்: 'நின் வாசற்படியில் வந்து நின்றேன்; உன் தந்தையிடம் வித்தை கற்க விரும்பினேன்; பிரகஸ்பதி புத்திரன் யான்.'

கசன்

அசுரரின் ஆசாரியர் அமரபுரி அந்தணனை ஆதரிக்க மறுப்பாரோ வென்று மனத்திலையம் கொண்டேன்.

தேவயானி

நான் அவரிடம் சென்று, புன்னகைபூண்டு கூறினேன்— 'தந்தையே, திருவடிதொழுது ஓர் பிச்சை கேட்பேன்.' அன்புடனழைத்து அருகிலமர்த்தித் தன் கரத்தை என் சிரத்தில் வைத்து இனிய சாந்த மொழியிலவர் பதிலுரைத்தார். 'மகளே, உனக்குக் கொடுக்கத் தகாதது என்னிடமேதேனுமுண்டோ'. நானுரைத்தேன்: 'பிரகஸ்பதி புத்திரன் தங்கள் வாசலில் வந்திருக்கிறான். அவனை ஏற்று வித்தை கொடுத்தருள வேண்டும். இதுவே யான் வேண்டுவது'.

இதெல்லாம் நடந்து எத்துணைக் காலம் கடந்தது! ஆயினும் நேற்றே நடந்ததுபோல் அக்காலை என் மனத்தின் முன் நிற்கின்றது.

கசன்

அருமை மிகுந்த அசுரர் என்னை மூன்று முறை கொன்றனர். என் பேரில் கருணை கூர்ந்து நீயும் மும்முறை புத்துயிரளித்தாய். இதன் பொருட்டு என்னிதயம் என்றும் நன்றியால் நிறைந்திருக்கும்.

தேவயானி

நன்றியா! அதை முற்றிலும் மறந்துவிடு. அதனால் எனக்குச் சிறிதும் வருத்தமிராது. நான் செய்த உதவியெல்லாம் சாம்பலாகக் கடவது! தானமும் பேரமும் எனக்கு வேண்டாம். மனத்தில் வேறோர் இனிய நினைவுமில்லையா? யாதேனுமோர் கான கேட்ட கீதத்தின் ஆனந்தம் உள்ளத்தில் புகுந்திருப்பின்; யாதேனுமோர் சந்திவேளையில் வேணுமதி தீரத்தில், புஷ்பவனத்தில், அத்தியயன மத்தியில் மாலைவானத்தில் மலர்ச்சோலையின் நறுமணம் பரவுவதுபோல், உன்னிதயமெங்கும் என்றுமில்லாத உணர்ச்சி படர்ந்து மயிர்க்கூச்சலெடுத்திருப்பின்; அவ்வானந்தமொன்றையே மனத்தில் பதிப்பாய். நன்றியென்றபேச்சைத் தூரத் தள்ளிவிடு. அன்பனே! இங்கே நீ கேட்ட கானங்களில் ஏதேனுமொன்று உன் உள்ளத்தைப் பூரித்திருப்பின்; ஒருநாள் ஏதேனுமோர் இம்மாதிரி ஆடையைக்கண்டு உடல் சிலிர்த்து, உள்ளம் பூரித்து இன்று இவள் அழகால் மகிழ்ந்தேன் என்ற புகழுரை நின்னுவினில் எழும்பியிருப்பின்; அதனையே தேவலோகத்தில் ஒழிவு நேரத்தில் நினைத்திடுவாய். எத்தனை நாள், இதே வனத்தில், ஆடி மாதத்தின் கருங்கூந்தல் போல், திசைகளெல்லாம் நீலவானத்தில் கார்மேகங்கள் கூடி இடைவிடாமல் மழை பொழிய, வேறு வேலையின்றி, கற்பனைகளின் கனம் தாங்காது தளரும் மனத்துடன் களித்தோம்! இதேவிடத்தில் எத்தனை நாட்கள் திடீரென்று வசந்தகாலம் வந்து, எத்தடையுமின்றி யௌவனத்தின் உல்லாச கோலாகலத்தை வளர்த்து, மதுரகானத்துடன் எங்கும் வியாபித்து, தன் வெள்ளவேகத்தால் கொடி, இலை, மலர், வனம், வனாந்தரம் அனைத்தையும் ஆனந்தத்தில் மூழ்குவிக்கக்கண்டோம்! மற்றுமோர் முறை சுற்றிப்பார்! எத்தனை சூரியோதயங்கள், எத்தனை நிலவுநாட்கள், நறுமலர் மணம் மிகுந்து இருண்ட எத்தனை அமாவாசை நிசிகள்; இவ்வனத்தின்கண் வாழ்நாட்களின் சுகமும் துக்கமும் இரண்டறக் கலந்துள்ளன; அங்கே அந்நாள் விடிந்தது, இங்கே அம்மாலை முடிந்தது; அவ்விடம் ஆனந்த ராத்திரி கழிந்தது; இவ்விடம் என்னிதயம் பொங்கி எழுந்தது; அங்கே முகங் கண்டேன், இங்கே சுகங்கொண்டேன், என்று எங்குத் திரும்பினாலும் பல்பகல்,பல்லிரவு வசித்த நாட்களின் நினைவுகள் நிரம்பாத இடமில்லையன்றோ? வெறும் உபகாரம் தானா? அழகில்லையா, அன்பில்லையா. வேறொன்றுமில்லையா?

கசன்

இங்கிருப்பதெல்லாம் வாய்விட்டுச் சொல்லும் விஷயங்களல்ல. தோழி! உடலுக்குள் ஊடுரு

விப்பாயும் உதிரத்தில் கலந்த பொருளை வெளியி லெடுத்துக் காட்டவும் கூடுமோ?

தேவயானி

அறிவேன், அன்பனே. என் உள்ளத்தை உணர்ந்து உன் உள்ளம் கொடிப்பொழுதில் துடித்தெழப் பலதரம் பார்த்திருக்கின்றேன்; ஆதலினல்லவோ இவ்வாறுபொறுமையிழந்தேன். ஆதலின் இங்கே தங்குவாய், தங்குவாய். செல்ல வேண்டாம். கீர்த்தியின் கௌரவமும் சுகத்தை யளிக்காது. இந்த வேணுமதி தீரத்திலே, நீயும் நானும், இருவரும் புதியதோர் அமரலோகம் நிர் மிப்போம். ஏகாந்த வனநிழலுடன் இருவரும் இணைந்து, கவலையற்று, அன்பில்மூழ்கி அனைத் தையும் மறப்போம். ஆகா! அன்பனே! உன் ரகஸ்யத்தை நானறிவேன்.

கசன்

இல்லை, இல்லை, தேவயானி.

தேவயானி

இல்லையா? பொய் வஞ்சனை! உன் மனதை நான் அறியவில்லையா? உள்ளத்தில் பதிந்து கிடக்கும் காதலை நான் காணவில்லையா? இலைக ளில் மறைந்த மலர் தன் மணத்தையும் மறைக்க முடியுமோ? எத்தனை நாள் முகத்தை நிமிர்த்து என்னைப் பார்க்கையில், என் குரலைக் கேட்கை யில், மாணிக்க மணிமீது வீழும் ஒளிக்கிரணம் போல், உன் அங்கமெல்லாம் சிலிர்த்துத் துடித்தி ருக்கின்றன; அதை நான் கவனிக்கவில்லையா? கட்டுப்பட்டுவிட்டாய், அன்பனே, ஆதலால் நீ என் அடிமையாகிவிட்டாய். இந்தப் பந்தத்தை என்றும் அறுக்கமுடியாது. தேவேந்திரன் இனி உனக்கு அரசனில்லை.

கசன்

நன்னகையாளே, இதற்காகவோ ஆயிரமாண்டு அசுரர் நாட்டில் சித்தி பெற்றுவந்தேன்.

தேவயானி

ஏன் கூடாது? இந்த ஜகத்தில் துக்கந்தாங்கி, பாடுபடுவது வித்தை யொன்றிற்குத்தானே? ஒரு நாரியை நினைத்து நரன் கடுந்தவம் புரிந்த தில்லையோ? தபதியைப் பத்தினியாகவேண்டி சம்வாணன் வானத்தில் தபிக்கும் கதிரவனை நோக்கி நின்று ஆகாரமின்றிக் கொடிய விரதம் பூணவில்லையோ? அந்தோ! வித்தையொன்றே அவ்வளவு துர்லபமா? இங்குப் பிரேமை மிகவும் எளிதா? எந்தத்தனம் வேண்டி ஆயிரம் வருஷம் தவம் செய்தாய் என்பதை நீயே அறியாய், வித்தையோர் புறம்—நான் ஓர் புறம். சிலவேளை வித்தை மீது, சிலவேளை என்மீது காதல் கொண் டாய்; நிச்சயமின்றி உன் மனம், இரண்டையும் மாறிமாறி இரகஸ்யமாகப் பூஜை செய்யப் பெரும் பிரயத்தனம் செய்தது. இன்று ஒருமிக்க நானும் அவளும் உன்முன் வந்து நிற்கின்றோம். இருவ ருள் ஒருவரை நீ வரிக்கவேண்டும். துணிவும் ஆற் றலுங்கூடி நீ கூறுவாயேல்,

'வித்தையில் சுகமில்லை, கீர்த்தியில் சுகமில்லை, தேவயானி, நீயே சித்தியின் திவ்யமூர்த்தி. உன் னையே வரிப்பேன்,' என்று.

அதில் எவ்வித நஷ்டமுமில்லை, நாணக்காரண முமில்லை. அன்பனே, ரமணியினிதயம் ஆயிர மாண்டின் தவத்தின் தக்க பலனாகும்.

கசன்

தேவர் முன்னிலையில் சுபசபதம் செய்தேன்; 'மகா சஞ்ஜீவினி வித்தைதேர்ந்து தேவலோகம் திரும்புவேன்' என்று; இங்குவந்ததுமுதல் அந்தச் சபதம் எக்காலமும் என் மனத்தின் முன் நின்று கொண்டிருந்தது; என் முயற்சி இன்று முடிந்தது, என் வாழ்க்கையின் பலனைப் பூர்த்திசெய்யும் காலம் கிட்டியது; இன்று நான் எவ்வித சுய நலத்தையும் நாடேன்.

தேவயானி

கொடூர, உன் கபடம்! வித்தை யொன்றே நீ கற்றுவந்தாயா? குருவின் கிரகத்தில் தனிமையாக மாணவனைப்போல் வசித்து, சாஸ்திர புஸ்தகத் திலேயே கண்ணாக அத்தியயனம் செய்தாயா? வேறனைத்திலும் உதாசினமாக விருந்தாயா? பாட சாலையை விட்டு வெகுதூரம் வனவனாந்தரங் களில் அலைந்து மலர்சேர்த்து, மாலை தொடுத்து, புன்னகைபூத்த முகத்துடன் இவ்வறிவிலிக்கு ஏன் அளித்தாய்? இது தானோ உன் கொடிய விரதம்? மாணவ முறையிதுவா? அதிகாலையில் நீ அத்தியயனம் செய்யும்பொழுது, வெறும் பூக் கூடையைக் கையில் தாங்கிவந்து முறுவலுடன் முன்னிற்கையில், நீ ஏன் நூலைக் கீழேவைத்து எழுந்துவந்து, பனித்துளி ததும்பும் புது மலர்க் குவியல்களைக் கொய்து எனக்குப் பணிவிடை செய்தாய்? நடுப்பகல் நேரத்தில் நான் தருக்க ளின் வேர்களில் தண்ணீர் வார்த்துக் களைக்கக் கண்டு, நீ ஓடிவந்து ஜலம் ஊற்றியது வெறும் தயவால்தானோ? பாடத்தை விடுத்து என் மான் குட்டியை வளர்த்தது ஏனோ? சந்தியா காலத்தில் நதி தீரத்தில் இருள் சூழ்ந்து எங்கும் நிசப்தமாக விருக்கையிலே, இருண்ட கண்களைத் தளிர் போன்ற இதழ்கள் அன்பால் பாதிமூட, சுவர்க்கத்தில் கற்றுவந்த சங்கீதத்தை எனக்காக ஏன் பாடினாய்? வித்தை பயிலவந்தவன் அமரபுரி யின் சதுர வல்லீசி என்னிதயத்தை ஏன் கொள்ளைகொண்டாய்? இப்பொழுது அறிவேன்; என்னை வசமாக்கி என் தந்தையின் மனத்தில் புகுந்தாய்; காரியசித்தியானவுடன் சிறிது நன்றிதந்து இன்று செல்லுகிறாயல்லவா? அரச னைக் கோரிப் பேட்டிகண்டு மனோரதம் பூர்த்தி

யானவன் வாசற்காப்பானுக்கு நாலுகாசு சந்தோஷமாக வீசுவதுபோல்?

கசன்

ஆ! தன்னலந்தேடும் பெண்ணே! உண்மையைக் கேட்பதில் சுகம் உண்டோ? தர்மதேவனறிவான்; எவ்விதக் கபடமும் நான் செய்யவில்லே; மாசற்ற மனத்துடன், ஆனந்தத்தால் உள்ளம் பூரித்து இன்பங்கொடுக்க விரும்பி, உனக்கேதேனும் நான் தீங்கு செய்திருப்பின், அக்குற்றத்திற்கு விதி எனக்குத் தண்டனை விதித்திருக்கிறது. என் மனத்திலுள்ளதை வெளிப்படுத்தேன். நீயே சொல்வாய்; மூன்றுலகத்திலும் எவருக்கும் யோகமில்லாத, தனி ஒருவனுக்கே பிரத்தியேகமான என் சொந்த விஷயத்தைப் பிரஸ்தாபிக்கலாமா? அன்புகொண்டேனு, இல்லையாவென்ற தர்க்கத்தால் இன்று என்ன பயன்? நான் இப்பொழுது செய்யவேண்டிய கடமையைச் செய்வேன். அமரபுரி இனி எனக்கு ஆனந்தபுரியாகாதெனினும், தூரத்திலுள்ள வனதலத்தில், என்னிதயம், அம்பு பாய்ந்த மான்போல் துடித்துச் சுழன்றுகொண்டிருப்பினும், நான் இதர கருமம் புரியும்பொழுதெல்லாம் அளவற்ற ஆசை என்னெரிந்த மனத்தை விடாது தொடரினும் அந்த ஆனந்தசூன்யமான அமரபுரி சென்றேதீருவேன். அமரரனைவருக்கும் இந்தச் சஞ்ஜீவினிவித்தையையளித்து என் பிரதிக்ஞையைப் பாதுகாப்பேன். நூதன தேவத்துவம் ஸ்தாபித்து என் வாழ்க்கைப் பயனடைவேன். அதுகாறும் என் சொந்த சுகங் கருதேன். என்னை மன்னிப்பாய்! தேவயானி, அபராதத்தை க்ஷமித்தருள்வாய்.

தேவயானி

என்னிதயத்தில் மன்னிப்புக்கிடமேது? வேதியனே, இம் மங்கையின் மனத்தைக் கொடிய வச்சிரமாக்கிவிட்டாய். நீ தேவலோகம் சென்று, பெருமையால் பூரித்துப் பெரும் பணியாற்றி, துக்கங்கவலையனைத்தும் அறவேயொழித்திருப்பாய்; எனக்கு இங்கென்ன பணி, என்ன விரதம்? தடைபட்டுப் பயனற்ற வாழ்க்கை வாழ்வதில் எனக்கென்ன பெருமை? இதே வனத்தில் தனிமையாய்த் தலைகுனிந்து லக்ஷ்யமின்றிக் காலங் கழிப்பேன். எத்திக்கு நோக்கினும் ஆயிரம் நினைவுகள் என் கண்களில் முள்ளுகள் போல் குத்திப் புண்படுத்தும், என் உள்ளத்துட் புகுந்த வெட்கம் ஓயாமல் கொடுமையாகக் கடிக்கும். ஐயையோ! எங்கிருந்து வந்தாயோ நீ; கருணையில்லாப் பிரயாணி, என் வாழ்க்கை வனத்தின் நிழலில் தங்கி, சிறிய காலத்தைப் போக்குவதற்கு, என்னுயிரின் இன்ப மலர்களையெல்லாம் கொய்து, அன்புமாலை தொடுத்தாய்! அதனை அனுபவிக்கும் தருணத்தில் ஒருதரமேனும் கழுத்திலணியாது, பேரவமதிப்புடன் காரைக்கிள்ளிப் பூக்களையெல்லாம் வாரியிறைத்துப்போகின்றாய்! என் வாழ்க்கையின் மகிமையெல்லம் மண்ணில் கலந்துவிட்டது. ஆதலின் நான் உனக்கிந்தச் சாபம் தருவேன்; எந்த வித்தையை மதித்து என்னை அவமதித்தாயோ, அந்த வித்தை உன் பூர்ணவசத்திலிராது; அதை வகிக்கும் வெறும் சுமைதூக்கியாவாய்; அதன் பலனை அனுபவியாய்; பிறருக்குப் போதிப்பாய்; சொந்தமாகப் பிரயோகம் செய்யுமாற்றல் பெறுய்.

கசன்

யானுனக்கு வரமளிப்பேன், தேவி! நீ சுகமுற்று வாழ்வாய். பெரும்பேறு பெற்றுத் துயரமெல்லாம் மறந்திடுவாய்.



புத்தக விமர்சனம்

முகையூர் நீதிபதி

எழுதியவர்—கே. வி. கே.

ஆசிரியர், நூற்பதிப்புக் கழகம் வெளியீடு விலை ரூ. 3—0—0.

ஆங்கிலப் பேராசிரியர் ஹால்கெய்ன் அற்புதமாகப் புனைந்துள்ள கற்பனை நாவல் ஒன்றைத் தழுவி எழுதப்பட்டுள்ளதாக முகவுரையில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் கதை தமிழ்நாட்டுப் பாணியில் நன்கு அமைந்துள்ளது. தான் கற்பழித்த பெண்ணின்மீது குழந்தையைக் கொன்ற குற்றத்தை விசாரிக்கத் தானே நீதிபதியாக அமைந்தது கதாநாயகன் சுந்தரத்துக்குச் சங்கடமாய்ப் போய்விடுகிறது. ஆயினும் அவளைத் தண்டித்தும் விடுகிருன். தான் மகத்தான பாபம் செய்துவிட்டதாக மனம் புண்ணுகித் தவிக்கிருன். கவர்னரிடம் சென்று தன் தவறை விளக்கி, தண்டனைக்கும் உள்ளாகிருன். நீதி, தர்மம் இவைகளைத் தமிழ்நாட்டின் பண்டைப் பண்புக்கேற்றபடி நிலை நாட்டுகிருன்.

ஸ்வாரஸ்யமான கதை. விறுவிறுப்பான போக்கு, எளியநடை, நல்ல பொழுதுபோக்குப் புத்தகம். தமிழன் பெருமையுடன் மகிழும் உன்னத லக்ஷியக் கதை.

ஸ்ரீ சிவானந்த திக்விஜயம்

சிவானந்தா பதிப்புக் கழக வெளியீடு. விலை ரூ. 6—0—0.

ஸ்ரீ சுவாமி சிவானந்தஜியின் தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தைப்பற்றித் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அதன் வரலாற்றையும் ஆங்காங்கு ஸ்வாமிஜி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கங்களையும் தெளிவாக இப்புத்தகத்தில் காணலாம். பாரதநாட்டின் பண்பு, ஹிந்துமதத்தின் பெருமை, மக்கள் நெறியுடன் வாழ வழி இவைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. சிரத்தையுடன் தயாரிக்கப்பட்ட நூல்.

தபாலாபீஸ் விநோதங்கள்

எழுதியவர்—க. ஷண்முகசுந்தரம்

பொன்னி வெளியீடு. விலை அணு 0—8—0,

ஆசிரியர் ஒரு சப்-போஸ்ட்மாஸ்டர். அவரது தொழில்துறையில் நிகழ்ந்த ஹாஸ்ய சம்பவங்களை எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே பல பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளாயிருப்பினும் ஒரே புத்தகத்தில் தொடர்ந்து தொகுத்துள்ளது போற்றத்தக்கது. படிப்பில்லாத கிராம மக்களின் மனோபாவம் நன்கு கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளது. ஹாஸ்யச் சுவை இயற்கையில் மலிந்துள்ள இச்சிறு புத்தகத்தைத் தமிழ் மக்கள் விரும்புவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஐந்தாண்டு அபிவிருத்தி

(1) தஞ்சை ஜில்லா (2) திருச்சி ஜில்லா (3) மதுரை ஜில்லா (4) இராமநாதபுரம் ஜில்லா (5) தென் ஆற்காடு ஜில்லா (6) வட ஆற்காடு ஜில்லா (7) நீலகிரி ஜில்லா (8) கோயம்புத்தூர் ஜில்லா (9) செங்கல்பட்டு ஜில்லா (10) திருநெல்வேலி ஜில்லா (11) சேலம் ஜில்லா—இந்த ஜில்லாக்களில் சென்னை அரசாங்கம் சாதித்துள்ளதை 11 அழகிய புத்தகங்களில் சென்னைச் சர்க்கார் செய்தி இலாகா வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு புத்தகமும் அறிவுப் பொக்கிஷமாக விளங்குகின்றது. பிரசார முறையில் இல்லாமல் ஒவ்வொரு ஜில்லாவின் சரித்திரம், பூகோளம், இயற்கை வசதிகள், வளம், நாகரிகம் இவைகள் நல்ல முறையில் எளிய நடையில் சொல்லப்பட்டுள்ளன. அழகாகத் தயாரிக்கப்பட்ட புத்தகங்கள். விலை சொற்பமே அணு நான்கு. தமிழ் மக்கள் வாசித்துப் பயன் காணலாம்.

சங்க நூல்களும் வைதிக மார்க்கமும்

இயற்றியவர்-டாக்டர் P.S. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
விலை 1—8—0

கிடைக்குமிடம்:—ஆசிரியர், 12, வடக்கு மட வளாகம், திருவையாறு.

திருப்பனந்தாள் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் பொருளுதவியால் பிரசுரம் செய்யப்பட்டது. ஆசிரியர் வடமொழியிலும், தென்மொழியிலும் சிறந்த தேர்ச்சியுடையவர். மொழிநூல் வல்லவர் தமிழ் லெக்ஸிகனுக்கு உதவி ஆசிரியராக இருந்து தொண்டாற்றியவர், இவரது ஆராய்ச்சியின் பயனாகச் சங்க நூல்களும் வைதிக மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டவை தாம் என்பது தெளிவாகிறது. ஆசிரியர் நடுநிலையில் நின்று கருத்துக்களை மட்டில் விளக்கவந்தவராதலின் முகவுரையோ முடிவுரையோவின்றி இடைக்கால, கடைக்காலச் சங்க நூல்களில் காணக்கிடைக்கும் சிறந்த கருத்துக்களை மட்டில் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிருர். வேள்வி முடித்த கேள்வியந்தணர், ஆசறுகாட்சி அறுதொழிற் செல்வர், வேள்வி ஆவுதி, இம்மைப் பயனை மறுமையில் துய்த்தல், நல்வினை தீவினை,

சிறந்தோருலகம், தென்புலத்தோர், அவுணர், உயிரெல்லாம் படைத்தானையடைதல், தொல் வினைப்பயன், எழுமை, கழுவாய், வடக்கிருத்தல், சிறப்பென்னுஞ் செம்பொருள் (பராமுக்தி) ஞானத்தால் வீடு பெறுதல், அவா நீப்பு, பேரா வியற்கை, (ஜீவன்முக்தி) கிரஹசாரங்கள் முதலி யவைகளை உள்ளவாறு அறிய வைதிக மார்க்கத் தை அறிந்தே ஆகவேண்டும். தமிழ் நாட்டில் கி. மு, இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே கோயில்கள் கட்டி மக்கள் வலம்வந்து வழிபட்ட னர் என்பதையும் ஆசிரியர் இந்நாலில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். பண்டைக்காலத்தில் மேலே கூறப்பட்டவரை மேற் சாதியாரென்றும் கீழே கூறப்பட்டவரைக் கீழ்ச்சாதியார் என்றும் குறித்தி ருத்தல் கூடும் என்றும் பிராமணன் தன்னைப் பிற ரிற் சிறந்தானாக நினைப்பின் உடனே பிராம்மண் யம் போயவிடுமென்று கௌதம ஸூத்ரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும் எடுத்துக் காட்டி யிருக்கிறார். தமிழ் இலக்கியங்களைக் கற்பவர்க ளுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும். அவ்வாறே வடமொழி பயில்பவர்களுக்கும்.

FOOD PROBLEM IN INDIA

By S. M. R. Arumugham Pillai, B.A., B.L.

(President, Tanjore Dt. Rice Mill owners Association)

6, Shur Tank Road, Egmore, Madras-8

Price 1—0—0

விஷயம் தெரிந்தவர் எழுதியிருக்கும் புஸ்தக மிது. சர்க்காரைக் கண்டனம் செய்வது யாருக் கும் எளிது. கார்யகரமான யோசனை கூறுவது கடினம். இந்நூலில் புள்ளிவிவரங்களுடன் உண வுப் பற்றாக்குறையும், அதைப் போக்கக் கையாள வேண்டிய முறையும், விவசாயிக்குக்கட்டுபடியாகக் கூடிய விலை விவரமும் விளக்கப்பட்டிருக்கின்றன. தற்போது சர்க்கார் நெல் விலையைச் சற்று ஏற்றி இருக்கிறார்கள். ஆயினும் போதிய அளவுக்கு ஏற்றவில்லை. விலை ஏற்றத்தின் பயனை விவசாயி நேரில் அடையாத வரையில் கள்ளமார்க்கெட்டும் ஒழியாது, கண்ட்ரோல்களும் பயன்படா. இவ் விஷயம் சக்க்கார் அறியாமலில்லை. வருடத்துக்கு வருடம் நெல் சாகுபடியாகும் நில விஸ்தீரணம் குறைந்துகொண்டே வருகிறது. நெல் உற்பத்தி செய்வதைவிட இதர உற்பத்தியில் லாபம் இருக் கிறபடியால் நெல் உற்பத்தி இனிக் குறைந்து கொண்டேதான் வரும். உற்பத்தியைக் குறைத்து விலையை விவசாயி ஏற்றப் போகிறானா, அல்லது சர்க்கார்தானே நேரிடையாக விலையை ஏற்றி உற் பத்தியைப் பெருக்கப் போகிறதா என்பது பிரச்னை, இன்று இது சென்னைச் சர்க்காரைக் குறித்த பிரச்னையாக இருக்கிறது. இதைச் சரிவர இன்று சமாளிக்காவிடில் இதுவே 10 வருடங்க ளுக்குள் உலகப் பிரச்னையாகிவிடப் போகிறது.

AN EXAMINATION GUIDE TO STORIES FROM SHAKESPEARE

By Dr. N. Krishnamoorthy, M. D. H. S.
Published by P. V. Natesh Iyer, 59, Pachayappa Mudali Street, Kumbakonam,

Price 0—6—0

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பயன்படுமாறு மாதிரிக் கேள்விகளும் விடைகளும் கொண்டது.

ஹிந்தி பத்ரிகா

விலை தனிப்பிரதி அணா 5. வருடச் சந்தா ரூ. 3

திருச்சி தமிழ்நாடு ஹிந்தி பிரசார சபை வெளியீடு.

ஹிந்தி பிரசார விவரங்களுடன் ராஜீய, இலக் கிய, விஞ்ஞான வேடிக்கைக் கட்டுரைகளும் நிறைந்திருக்கின்றன.

புஷ்பங்கள் விலை அணா 0-4-0

என் கடன் களிப்பூட்டல்

விலை அணா 0—2—0

சென்னை நன்னூலக வெளியீடுகள்.

T. A. மதுரம் சென்னை ரேடியோ நிலயத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்:

திரு. N. S. கிருஷ்ணன்—T. A. மதுரம் எது செய்தாலும் பாராட்டவேண்டியதுதானே.

காந்தீயம்

கருவை பாரதி எழுதியது.

கருவை பாரதிப் பதிப்பகத்தார் வெளியீடு.

பிரசாரத்துக்கு ஏற்ற பலவகைப் பாடல்கள். நல்ல முயற்சி. தமிழ்நாட்டில் காந்திஜீயின் அரும் பெரும் சாதனைகளைத் தக்க காவியமாகவும் நாடகமாகவும் நாடோடிப் பாடல்களிலும் அமைக்கவேண்டியதவசியம்.

பேசாத பேச்சு

கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இயற்றியது.

சென்னை தேனாம்பேட்டை அமுதநிலயப் பிரசு ரம். விலை. ரு 2—8—0

பேசுகிற பேச்சைவிடப் பேசாத பேச்சில் சுவைஉண்டு; நயம் உண்டு; ஆற்றல் உண்டு; அதி கமான பயனும் உண்டு என்று கண்டு ஆசிரியர் ஒரு அற்புத வாசலைத் திறந்துவிடுகிறார் இந்நூல் வாயிலாக. எதையும் சுவையுடன் எழுதவல்ல இவர் எதையும் இழுத்துவந்து நிறுத்தத் தயங்க வில்லை. மலைப்பாம்பைப் பார்த்து உபதேசம் பெறுகிறார். முனிவர் வண்டுகளிடமிருந்து கற்றுக் கொள்கிறார். வாயால் பேசிப் புத்திபுகட்டவேண்

டியதில்லை அறிஞருக்கு. அபிநயங்களை முகத்தினுலும் அங்கங்களாலும் காட்டும் கலைஞர்கள் பேசாமலேயே பேசக் கற்றவர்கள். அதற்கு முத்திரை சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியே பல் வேறு சுவைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற அபிநயங்களை நாடக இலக்கணம் சொல்லுகிறது, ஆனால் இந்தச் சைகை சாஸ்திரத்திலே திறமை பெற்றவர்கள் காதலர் காதலிகளே. இவ்வெழுதாக் கிளவியில் பெண்களே பிரசித்தி பெற்றவர்கள். விக்ரமாதித்தனைக் குளக்கரையில் கண்டதும் காதல் கொண்ட ஒருத்தி பேசிப்பயனில்லை என்பதுபோல் வாயையே திறக்கவில்லை. ஆனால் விஸ்தாரமான ஒரு திட்டம் வகுத்தாள் விக்ரமாதித்தனுக்கு. வாடாமல்லிகை மலரை எடுத்துத் தன் மார்பில் வைத்துக்கொண்டு தன் காலின் மேல் போட்டாள். பிறகு மணலைக் குவித்து அதன்மேல் ஓர் ஓட்டாஞ் சில்லை வைத்து, அதன் எதிரே தன் தலையிலிருந்து ஒரு மயிரை அறுத்துச் சுருட்டிவைத்து ஒரு புன்னகை பூத்தாள். பல்லக் கேறிச் சென்றுவிட்டாள். இதன் பொருளை என்னவென்று விக்ரமாதித்தன் அறிந்து கொண்டான் என்பதை, "இங்கித அழைப்பு" என்னும் கட்டுரையில் ஆசிரியர் அழகாக அமைத்திருக்கிறார். அங்ஙனமே கண்ணன் செய்த இரு தந்திரங்களையும் சுவைபட விவரிக்கிறார். முக்கியமாக, கம்பராமாயணத்தில் சொல்லின் செல்வனை அனுமன் வாய்பேசாது தெற்கு நோக்கித் தொழுதுநின்றமையையும், குறிப்பினால் உணரும் கொள்கையர் ஸீதையின் நலனையும் கற்பையும், அனுமன் வீரச்செயல்களையும் அதினின்றே அறிவதையும் சுவையுடன் விளக்குகிறார். இவ்வளவையும் விவரித்துவிட்டு நமது இலக்கியங்களில் இவைபோன்ற எவ்வளவோ கோலங்கள் காணக் கூடுமே, இந்நோக்கத்தோடு படித்துப்பாருங்கள் என்று வேண்டுகின்றார்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர்

மாதுங்கா பம்பாய்த் தமிழ்ச் சங்க வெளியீடு விலை ரூ. 1—4—0.

பத்து ஆண்டுகளாகப் பம்பாய்த் தமிழ்ச்சங்கம் அறிவுத்துறையில் தொண்டாற்றி வருகிறது. 18—11—51 வ. உ. சி. தினத்தில் அவரது நினைவு மலராக வெளிவந்திருக்கும் இச்சிறு நூலில் அவருடன் நேரில் பேசிப்பழகிய பாக்கியம்பெற்ற திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை, திரு. பொ. திருகூடசுந்தரம், திரு. வ. உ. சி. புதல்வரான சுப்ரமணியம் முதலியோரின் கட்டுரைகள் காணப்படுகின்றன. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் 'அஞ்சலி', யோகி சுத்தானந்த பாரதியாரின் வீரம் செறிந்த கீதம், டாக்டர் மு. வரதராசன், திரு. ரகுநாதன், நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார், திரு. எ. ஜி. வெங்கடாசாரி, பரலி திரு. க. சண்முகசுந்தரம், திரு. த. பு. நவநீதகிருஷ்ணன், திரு. எ. ஸி. பால்நாடார், திரு. பே. ந. குணசந்திரன் இவர்களது கட்டுரைகள் எல்லாம் சேர்ந்து தக்கதோர் நினைவு மலராகத் திகழ்கிறது.

கர்ப்பத்தடை

ஸ்ரீ பரதசங்கர் எழுதியது
தியாகராயநகர் கௌரிநிலையப் பிரசுரம்
விலை ரூ. 1—0—0

எளியநடையில் ஆபாஸமின்றி எழுதப்பட்டிருக்கிறது. வேண்டாத குழந்தைகளைப் பெறலாகாது, தகுதியற்றவர்கள் வம்சவிருத்தி செய்யலாகாது, பொருளாதார வசதிகளுக்குத் தக்கவாறு நாட்டின் ஜனத்தொகை இருக்கவேண்டும், என்று கருத்துகளின் அடிப்படையில் தோன்றியது. கரு உற்பத்தியாகும் நாட்களில் கலவியைத் தவிர்த்தல், சிறு ஆபரேஷன்கள், கர்ப்பத்தடைக் கருவிகள், டூஷ்முறை அல்லது எலுமிச்சை தேன் வேப்ப எண்ணெய் இவைகளின் முன் உபயோகம் முதலியவைகளை ஆசிரியர் விளக்கியிருக்கிறார். ஷை சாதனங்களைக் கைக்கொண்டு நம் நாட்டிலும் பிரஜாவிருத்தியைக் குறைத்து, ஹாலெண்டு தேசம்போல் முன்னேறவேண்டும் என்று விரும்புகிறார்.

மறு பதிப்பு வருமானால் இன்னும் மலிவாகவும் "ரிதம்" (Rhythem method) சோதனை விவரங்களுடனும் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆண்—பெண்

அகிலன் எழுதியது
புதுக்கோட்டைப் பழனிப் பிரசுரம்
விலை ரூ. 1—8—0

ஒன்பது காதற்கதைகள். ஒவ்வொன்றும் ஒரு விதம். கட்டுமீறிய காதல், கற்பனைத் திறனில் குறைவில்லை, வருணனை வளத்தில் குறைவில்லை, உள்ளத்தைத் துருவிக்காட்டத் தயங்கவில்லை. ஆனால் சிகரத்தின் உச்சியில், உருண்டு அடிப்பாதாலத்தில் விழும்படி, துணிகரமாகச் சஞ்சரிக்கிறார். "உமது பெண்கையில் இப் புத்தகத்தைக் கொடுப்பீரா?" என்று நாம் கேட்டால் இத்தகைய கதைகள் தமிழ்நாட்டுக்குத் தேவை என்று எனக்குத் தெரியும் என்கிறார். எனக்கு உற்சாகம் அளித்துவரும் வாசகர்களுக்காக எழுதிவருகிறேன் என்கிறார். வாழ்வில் சரியாகக் காதலைக் காணாத இற்றைத் தமிழர்கள் கதைகளிலாவது காதலைக் காணவேண்டும் என்று நினைக்கிறவன் நான்" என்கிறார் தமது முகவுரையில். இருக்கலாம், நமக்கு லக்ஷ்ய வாழ்க்கைக் கதைகளும் வேண்டும், நடைமுறைக் கதைகளும் வேண்டும், சமுதாயத்துக்குத் துரோகம் செய்யாதமுறையில் கற்பனைக் கதைகளும் வேண்டும். இப் புத்தகத்தில் முதல் கதையான 'குறத்தி'யைப் படித்தவுடன் ஹிந்தி ஆசிரியர் ப்ரேம் சந்தின் 'பாதிஹா' எனும் பட்டாணியின் வஞ்சம் நமக்கு நினைவு வரத்தான் செய்கிறது.

வஞ்சகி

சேரன் எழுதியது

சரோஜினி பதிப்பகம், புதுச்சேரி
விலை ரூ. 0—8—0

"அழகின் குற்றம்" என்று நாடகமாக நடிக்கப்பட்ட கதை 'வஞ்சகி' எனும் வாசக நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆசிரியரின் நோக்கம் குடும்பப் பெண்கள் சினிமாவில் சேரலாகாது என்பது. ஸ்டுடியோவின் சூழ்நிலையே காம வளர்ச்சிக்கு அனுகூலமாகவிருக்கிறது என்றும் 'கண்டகண்ட பெண்களை வேட்டையாடித் தங்கள் காம இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளவே சினிமாக்காரர்கள் இக்கலையைக் கருவியாக்கிக் கொண்டனர்' என்றும் ஆசிரியர் திட்டமாகச் சொல்லிவிடுகிறார். இவர் 'முடிவு'க்குத் தக்க ஆதாரம் நூலிலில்லை. கலைக்கு இவர் செய்யும் குற்றமிது.

கன்னியா விதவையா?

"மூர்த்தி" எழுதியது.

சரோஜினி பதிப்பகம், புதுச்சேரி.
விலை ரூ. 0—8—0

பள்ளிக்காதல் பலனடைவதைச் சமூகக்கட்டுப்பாடும் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடும் தடுத்து நிறுத்துவதை ஆதாரமாகக் கொண்ட சிறு நூல் இது. கதை அம்சத்தைவிடப் பிரசார அம்சம்தான் அதிகம் இருக்கிறது. நம் தமிழ் இளைஞர் சொல்லாமல் சொல்லும் கலையைத் திறம் படக் கற்கவேண்டும்.

மலர்ந்த மங்கை

'புனர்வசு' எழுதியது

வான்மதி வெளியீடு. விலை அணு 0—8—0

3 சிறுகதைகள். சம்பவங்கள் நிறைந்த கதைகள். சுவாரஸ்யமாக இருக்கின்றன. நடையும் விறுவிறுப்பாக அமைந்திருக்கிறது.

அவள்

'மாயாவி' எழுதியது

அமுதநிலையப் பிரசுரம். விலை அணு 0—8—0

2 கதைகள். எழுதத்தெரிந்தவர் எழுதும் கதைகள் நன்றாக இல்லாமல் பின் எப்படியிருக்கும்?

காதல் கண்கள்

'சுகி' எழுதியது

தேவிப் பிரசுரம், சிங்காரத்தோப்பு, திருச்சி.
விலை அணு 0—12—0

சினக்கதை. கலைப்பண்பும் காதல் நேர்மையும் நிறைந்தது. அழகுணர்ச்சியுள்ள பெண் குடும்பச் சிக்கல்களைச் சமாளிக்கப் படும்பாடும், வறுமை நோயுற்று மடிவதும், சாதாரணமாயினும் திறம்பட வர்ணிக்கப்பட்டிருக்கிறது.



இனம்! இனம்!! இனம்!!!

எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும் சுருண்டதாகவும், வளரச்செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c. k.)
JULLUNDUR CITY.

எது இன்பம்

DEVAN

வே. ரங்கராஜன்

அத்: 58. பார்வதி கணபதி லீலைகள்

திருமயிலாடியில் கணபதி, தன்னை மறந்து சிற்றின்ப சாகரத்தில் மூழ்கிக் கிடந்தான். ஒவ்வோர் சமயம் அவன் மனது குழம்பியது. அவன் மனச்சாட்சி சதா அவனைக் குற்றம் கூறிக்கொண்டே இருந்தது. ஆண்மையின் வெறியும் பார்வதியின் கனிவும் அவனது பகுத்தறிவைப் பாழாக்கி விட்டன. 'விதியின் செயல்' என மனதைத் திடப்படுத்திக் கொண்டான். சங்கரன் தன் குடும்பத்துக்குச் செய்த துரோகத்தை நினைத்தான், தான் செய்வது பழிக்குப்பழி வாங்குவதுபோல்தான் ஆகும், குற்றமில்லையென மனதைத் தேற்றிக் கொண்டான். பார்வதியும் அவனைக் கணவனாகவே மதித்து அன்பைச் சொரிந்தாள்.

மிதமிஞ்சிய சிற்றின்பம் கணபதியைப் படுக்கையில் ஆழ்த்தியது. அவனது உடல் நிலை கவலைக்கிடமாயிற்று. ஆயினும் பார்வதி மிகுந்த சிரத்தையுடன் அவனைக் கவனித்து, கைதேர்ந்த வைத்தியனைக் கொண்டு சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றி விட்டாள். அப்பொழுதே தான் கருத்தரித்துள்ளதை உணர்ந்தாள். வெட்கமும், திகிலும் அவளைக் குடிகொண்டன. தன் உண்மை நிலையை உணர்ந்துகொண்டாள். ஆனாலும் கருவை அழிப்பது அடாது எனத் தீர்மானித்தாள். "என்னிடம் வேண்டிய பணம் இருக்கிறது, வெளியுலகம் சொல்வதை ஏன் சட்டைசெய்ய வேண்டும்?" இவ்வாறாக மனதைத் தேற்றிக் கொண்டாள். ஆனால் சஞ்சலம் மட்டும் அவளை முழுதும் விட்டபாடில்லை.

கணபதி பார்வதியின் குழப்பத்தை எப்படியோ அறிந்துகொண்டான். "பார்வதி!, நாம் திருமயிலாடியில் அமைதியுடன் இனி வாழ முடியாது. சுகமாக வாழ மன நிம்மதி வேண்டும். வேறு ஊருக்குப் போய்விடுதலே மேல்" என்று சொன்னான்.

கணபதி சொன்னது சரியெனப்பட்டது பார்வதிக்கு. மற்றவர்கள் வெறுத்து ஒதுக்கும் அவளுக்கு ஆதரவு அவன்தானே! இருவரும் பம்பாய் சேர்ந்தனர்.

அத். 59. மொட்டு மலர்கிறது

தேசிகன் வந்துவிட்டான் என்ற செய்தி சபேசன் வீட்டில் பரபரப்பை உண்டாக்கியது. வெகு நாளாகப் பிரிந்திருந்த பிள்ளையைக் காணச் சபேசன் துடிதுடித்தான். நன்ருக வளர்ந்திருந்த தேசிகனைப் பார்த்து மனம் பூரித்தான். பிள்ளையைத் தழுவிக்கொண்டான் அன்புடன். சரசு அண்ணுவையும் லீலாவையும் மாறிமாறிப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள். அண்ணுவுக்குத் தகுந்த ஜோடி லீலாவே எனத் தீர்மானித்தாள்.

தேசிகனைப் பார்த்தவுடன் லீலாவுக்குத் தன் அண்ணுவின் ஞாபகம் வந்தது. தேசிகனைப் போல் சுகபோகத்தில் இருக்க வேண்டிய அண்ணுவுக்குக் கஷ்டங்கள்! கடவுள் ஏன் இப்படி அண்ணுவை மட்டும் சோதனை செய்யவேண்டும்? என்று மனம் நொந்தாள்.

தேசிகன் சாமாவின் மூலம் லீலாவின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டான். கஷ்ட திசையிலும் லீலா ஒரு அற்புத சிருஷ்டி, பேரழகி, தனக்கேற்ற ரதி எனவும் எண்ணினுன். தேசிகனைப் பார்க்கும்போது லீலாவின் மார்பகம் விம்மியது. கட்டழகனும் கட்டழகியும் ஒருவரையொருவர் பார்த்து இன்பம் கண்டனர். இந்நிலைமையையே சரசு எதிர்பார்த்தாள், வேண்டினுள், விரும்பினுள். லீலாவின் தாயார் பங்கஜம்மாளின் ஆசையையும் அவள் அறிந்தாள். தன் திட்டம் கைகூடும், அண்ணு ஆனந்த வாழ்க்கை நடத்துவான், லீலாவின் கஷ்டங்கள் விடிந்துவிடும் என நம்பினுள். ஒருநாள் லீலாவை அடையாறிலுள்ள கலாக்ஷேத்திரத்துக்கு, தேசிகன் அழைத்துச்சென்ருன். அங்கே பரதநாட்டியம் பயிலும் மாணவிகளைக் கண்டான். ஏன் நம் லீலாவுக்கும் நாட்டியம் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யக்கூடாது என்று எண்ணினுன். உருட்டி, திரட்டி, கண் கவரும் வனப்புடன் பருவகால மங்கையர்க்கரசியாக விளங்கும் லீலாவின் அங்கங்களின் அசைவு, அவைகளின் அழகு இவைகளை நாட்டியத்தின் மூலம் ருசி பார்க்க ஆவல்கொண்டான். ஒரு நட்டுவஞரையும் அமர்த்திவிட்டான்!

அத். 60. சரசு—மேகன்

தந்தையின் உடல் நிலையைக் கவனிக்கச் சென்ற மேகன் வெகு நாளாகச் சரசுவுக்குக் கடிதம் எழுதவில்லை. தந்தை இறந்ததையும் வெகுநாள் கழித்தே மேகன் எழுதினுன். மேகன்மீது காதல் கொண்டுவிட்ட சரசு அவனை நேரில்காண ஆவல் கொண்டு துடிதுடித்தாள். கிரிக்கெட் கோஷ்டியில் அவன் சேர்ந்து வருவதாகத் தெரிந்தவுடன் சரசு ஆனந்தம் கொண்டாள். நேரில் பார்த்துத் தன் அன்பைச் சொரியத் திட்டமிட்டாள்.

ஆனல் லீலாவின் எழில் வாய்ந்த உருவம் மேகன் முன், அவன் மனத்திரையில் அடிக்கடி காட்சியளித்து அவனது மனதில் இன்பத்தை ஊட்டியது. சரசுவை அழகற்ற மாமிசப் பிண்டமென மேகன் எண்ணினுன்.

மேகன் சென்னைக்கு வந்துவிட்டான்! சரசு தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு ஒய்யார நடை நடந்து தன் அழகைக் கண்ணுடியில் பார்த்துக்கொண்டாள். மேகனைச் சந்திப்பதில் பெருமிதம் கொண்டாள். காரில் ஏறிக்கொண்டு க்ஷண நேரத்தில் மேகன் தங்கியுள்ள விடுதியை அடைந்தாள். நேருக்கு நேராகத் தன் மனக்காதலனைக் கண்டாள்.

ஆனல் மேகன் சரசுவைக் கண்டவுடன் புன்னகைகூடக் காட்டவில்லை. சரசுவுக்கு வெட்கமும், ஏமாற்றமும் ஆத்திரமும் எல்லைமீறிவிட்டன. "இதுதான் கண்யமோ? ஆண்மையின் அழகோ?"வெனப் படபடப்புடன் வார்த்தைகளைக் கொட்டினுள். "இப்படி பெண்மைப் பண்பு இல்லாமல் அலைவதுதான் நீ செய்யும் பெரிய தப்பு" என்று மேகன் கூறவே சரசுவின் கோபம் உச்சநிலை அடைந்தது. "மேகன்! நான் கண் சொக்கும் அழகியல்ல, ஆனல் என் உள்ளம் பேரழகுடையது. அதில் அன்பு என்ற பாரிஜாதம் மலரும்" என்ருள். "சரசு! இந்தக் குழந்தை விளையாட்டுக்கெல்லாம் இப்பொழுதே ஒரு முடிவு கட்டுவிடுவோம். பின் ஏமாற்றம் வேண்டாம் நான் உன்னைக் காதலிக்கவில்லை!"

சரசு பொறுமை இழந்துவிட்டாள் என்பதை மேகன் உணர்ந்தான். புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான். கனிவாகச் சரசுவைக் கடைக்கண்ணுல் பார்த்தான். சரசு பெருமிதம் கொண்டாள். கோபம் பறந்தோடியது. ஆனந்தம் கட்டுக்கடங்காமல் பொங்கியது. புனர்ஜன்மம் எடுத்துவிட்டதாக இன்பச் சோதியில் கலந்தாள்.

அத். 61. மின்னல்! இடி! புயல்!

நல்ல நிலா. சந்திரன் தனது பூரண சக்தியையும் சோபையையும் கொண்டு காதலர்களது உள்ளத்தில் காமத் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யத் தீர்மானித்துவிட்டானே எனத் தோன்றியது. எங்கும் அமைதி. ஆனல் தேசிகனுக்குத் தூக்கம் வரவில்லை. லீலாவை அணைய வேண்டுமென்ற ஆவல் அவனை வாட்டியது. மெல்ல மெல்ல நடந்து லீலா படுக்கும் அறையில் நுழைந்தான். கட்டழகியாகிய லீலாவின் அங்கங்களின் அழகை அணுஅணுவாகக் கூர்ந்து கவனித்தான். லீலா தூங்கிப் போயிருப்பாள் என்று நினைத்துவந்த தேசிகன் ஏமாற்றமடைந்தான். லீலா கண்களை மூடியபடியே ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். அன்பே லீலா! என்று கூப்பிட்டதும் லீலா திடுக்கிட்டு எழுந்தாள். மங்கலான சிறிய எலெக்டிரிக் வெளிச்சத்தில் தன் காதலனைக் கண்டாள். இளமை, பெண்மை, ஆண்மை இவைகள் ஒன்று சேர்ந்தன. சந்திரனும் அவர்கள்பால் புன்னகை புரிந்தான்.

இருவர் உள்ளமும் உடலும் உறவு கொண்டாடி இயற்கைக்கு வசப்பட்டனர்.

திடீரென்று கதவு தட்டும் ஓசை கேட்டது. தேசிகனின் தாயார் "ஏண்டா ரயிலுக்குப் போக நேரமாய்விட்டதே. வேலையைப் போய் ஒப்புக் கொள்ள மறந்துவிட்டாயா? நல்ல தூக்கம்;" என்று பதறினாள். இது சமயம் சரசு எழுந்து விட்டாள். ஏதாவது விபரீதம் நேருமோவெனப் பயந்தாள்.

சென்ற சில தினங்களாகவே தன் எதிர்காலத்தைப் பற்றித் தேசிகன் சிந்தித்து வந்தான். டில்லியிலிருந்து அவனுக்கு வந்த உத்தியோக அழைப்பு அவனைக் கலக்கிவிட்டது, லீலாவை மணப்பதாகக் கூறியிருந்த வாக்குறுதி அவன் மனதை வாட்டியது. சரசு மூலமாக லீலாவின் பேரில் தனக்குள்ள காதலை அம்மாவிடம் வெளிப்படுத்தி லீலாவை மணக்க ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணியிருந்தான். லீலா தேசிகனை மணந்துவிட்டால் மேகன் லீலாவை மறந்து தன் மீது மறுபடி மோகம் கொள்வான் எனவும் சரசு நம்பினாள்.

அம்மாவிடம் விஷயத்தை எப்படி வெளிப்படுத்துவது. அம்மா சம்மதிப்பாளா இதுவே அண்ணன், தங்கை இவர்களது சிக்கலான பிரச்னை. ஸ்ரீமதி சபேசன் மகனைத் துரிதப்படுத்தினாள், சரசு குறுக்கிட்டாள். "இந்த மாமியார்கள் பொல்லாதவர்கள்" என்று ஆரம்பிக்கவே, "அது யார் மாமியார்? யார்டி என் நாட்டுப்பெண்?" பேஷ்! அண்ணுவுக்குப் பெண் பார்த்து முடிவு கட்டிவிட்டாயா? நன்னாயிருக்கு! என ஸ்ரீமதி சபேசன் கொட்டித்தள்ளிவிட்டாள்.

"அம்மா! அண்ணுவுக்கு லீலாவின்மீது ஆசை. அவளும் தங்கமான பெண்! நல்ல முகூர்த்தம் பார். அண்ணுவின் விருப்பத்தை அவன் வெட்கப்படுவதால் நான் சொல்லுகிறேன்!" என்றாள் சரசு.

"நன்னாயிருக்குடி காரியம்! நமது அந்தஸ் தென்ன, குலமென்ன? சோத்துக்கு வீங்கி நமது வீட்டில் தங்கியுள்ள அனுமதேயங்களுக்கு என் பிள்ளையைக் கொடுப்பதா? அம்மாவும் பெண்ணும் நல்ல வலை போட்டுவிட்டார்கள்? அந்த மானம்கெட்ட நாய்களை உள்ளேவிட்டதே பிசகு. இப்பொழுதே விரட்டிவிடுகிறேன். அப்பா என் செல்வக் குமாரா! கிளம்பு சீக்கிரம். நாழிகை ஆய்விட்டது" என்று பொரிந்துவிட்டுக் கீழே இறங்கி விட்டாள்.

தூக்கமில்லாமல் மனவேதனைப் பட்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த பங்கஜம்மாளின் செவிகளில் ஸ்ரீமதி சபேசனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கணீர் கணீர் என்று ஒலித்தன. அச்சம் கொண்டாள். இதற்குள் ஸ்ரீமதி சபேசனும் கீழே இறங்கிவரவே பங்கஜம்மாள் அவளது கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டு, "தாயே, எங்களைத் தூற்றுதீர்கள், நாங்கள் போய் விடுகிறோம்" என்று கெஞ்சவே ஸ்ரீமதி சபேசன் கால்களை விடுவித்துக்கொண்டு "நீவி! வெட்கம் கெட்ட பஜாரிகளா! உன் பிள்ளை கணபதி அந்த விதவைப் பார்வதியை இழுத்துக்கொண்டு பம்பாய் ஓடிப்போனது ஊர் சிரிக்கிறது. இங்கு என் பிள்ளையையும் கட்டி இழுத்துக் கொண்டுபோக அம்மாவும் பெண்ணும் உண்ட வீட்டிற்கு இரண்டு வினைத்துச் சூழ்ச்சி செய்கிறீர்கள். கிளம்புங்கள் இந்த வீட்டை விட்டு! வெட்கம்கெட்ட, மானம்கெட்ட முண்டங்கள்"!

எங்கிருந்தோ தேசிகனுக்குத் தைரியம் பிறந்து விட்டது. அம்மாவிடம் எதிர்த்து வாயாடினான். லீலாவையே மணப்பதாக மறுபடி உறுதி கூறி வெளியே சென்றான் வேகமாக.

அத். 62. சோதனையும், ஒளியும்

சரசுவின் வீட்டை விட்டு வெளியேறிய பங்கஜமும் லீலாவும் 'எங்கே போகிறோம்' என்ற குறியில்லாமல் சென்றுகொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் 'சர்' என்ற சப்தத்துடன் ஒரு கார் பிரேக்போட்டு அங்கே நின்றது, அதினின்றும் மேகன் வெளிப்பட்டான். லீலா திடுக்கிட்டாள். பங்கஜம் விழித்தாள். "தயங்காதீர்கள். இது நிற்கும் இடமல்ல. உம்! சீக்கிரம் ஏறிக்கொள்ளுங்கள்!"

இப்படி எதிர்பாராத ஓர் இடத்தில் மேகன் துணைவனாகவந்துசேர்வான் என லீலா எதிர்பார்க்கவில்லை. தாயும் மகளும் மௌனமாகச் சிந்தனையிலாழ்ந்து காரில் சென்றனர். 'அசோக வனம்' என்ற அழகிய பங்களாமுன் கார் நின்றது. எல்லா வசதிகளும் அங்கு நிறைந்து கிடந்தன. தாயும் மகளும் உள்ளே சென்றனர். ஆனால் மேகன் புறப்பட்டுவிட்டான். மேகனைப் பற்றிய பூரா விபரத்தையும் மகள் சொல்லத் தாய் அறிந்தாள். மேகன் மீது கிழான சந்தேகமோ, கெட்ட எண்ணமோ அவள் மனதில் எழவில்லை. அவன் தோற்றமும், பேச்சும், போக்கும் கண்யம் நிறைந்திருந்தன,

சில தினங்கள் கழித்து மேகன் திரும்பிவந்தான். தன் கண்யமான, தூய நடத்தையினால் தன் காதலை வெளிப்படுத்தினான் லீலாவிற்கு. "மிஸ்டர் மேகன்! என் மனதில் காதலுக்கு இடமில்லை" என்ற லீலாவின் பேச்சு அவனைத் திகைக்க வைத்தது. தன் சுய உணர்வைப் பெற்று, "நான் அதற்காக வருந்தவில்லை, காதல் மலரவேண்டும், அதுவரை காத்திருக்க நான் தயார்" என்றான். லீலா வேதனையடைந்தாள். மெல்ல நழுவினான் மேகன். அகில இந்திய கிரிக்கட் கோஷ்டியுடன் மேகநாதன் ஆஸ்திரேலியா சென்றுவிட்டான். அங்கிருந்து அன்பான பல கடிதங்கள் லீலாவுக்கு எழுதினான். ஆதரவற்ற தங்களைக் காப்பாற்றிவரும் மேகனுக்கு எவ்வாறு

நன்றி செலுத்துவது என ஏங்கினாள். இப்படியிருக்கையில் பத்திரிகைச் செய்தி ஒன்று அவளைத் திடுக்கிடச் செய்தது. மேகநாதன் விளையாட்டில் அடிபட்டுத் தலை எலும்பு ஒடிந்து விட்டதாகவும், ஆயினும் கவலைக்கு இடமில்லை என்ற செய்தியே அது. அடுத்த நாள் பத்திரிகையில் மேகநாதன் விருப்பப்படி பம்பாய்க்குக் கொண்டுவரப்படுவான் என்ற செய்தி லீலாவைக் கலவரமடையச் செய்தது. தான் பம்பாய் சென்று மேகனைப் பார்க்காவிட்டால் தன்னைவிட நன்றி கெட்டவள் இராள் என்று எண்ணி அன்றிரவே பம்பாய் செல்ல ஏற்பாடு செய்தாள்.

அத். 63. பம்பாய்

கணபதியும் அவனது இன்பவல்லியான பார்வதியும் பம்பாய் சென்றார்கள் என்று முன்னமே குறிப்பிட்டோம். கணபதி அதுவரை பம்பாய் சென்றதில்லை. பம்பாயைப் பார்த்தவுடன் அது சொர்க்கலோகமோ என எண்ணினான். செல்வச் செழிப்பைக் கண்டான். அல்லும் பகலும் மக்கள் பணத்தாசை பிடித்து அலைவதை நோக்கினான். மற்றோர் பக்கம் மக்கள் பசியால் வாடுவதும் அவன் கண்ணில் பட்டது. பார்வதியை ஒரு வாடகை விடுதியில் விடுத்து இருவரும் இருக்க வசதியான இடத்தைத் தேடினான், அதிர்ஷ்டவசமாக ஒரு மார்வாடி தன் கட்டிடத்தை அவனுக்கு வாடகைக்கு விடச் சம்மதித்து, அவனையும் தக்க சம்பளத்தில் தன் கடையில் அமர்த்திக்கொண்டான். சுக்கிரதிசை கணபதிக்கு அடிக்க ஆரம்பித்துவிட்டது என்று சொன்னால் மிகையாகாது. முதலாளியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானான், ஆனந்தமாக, நிம்மதியாகப் பார்வதியுடன் புருஷனும் மனைவியுமாகக் குடித்தனம் நடத்தினான். தங்கள் கூட்டுறவை விதியின் விளையாட்டென இருவரும் முடிவு கட்டினர். அசைக்கமுடியாத அன்பின் பிணைப்பு அவர்களைப் பற்றிக் கொண்டது.

திடீரென்று ஒருநாள் பம்பாயில் ஏக கலவரம். எங்கும் கத்திக்குத்து, வெட்டு. வெளிக்கிளம்ப மக்கள் அஞ்சினர். போலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகம் கலகத்தை அடக்கமுடியவில்லை. திடீரென்று ஒரு பெரிய கல் குறிபார்த்து எறியப்பட்டதுபோல் மார்வாடியின் மார்பைத் தாக்கியது. பலத்த காயம். எஜமானருக்குத் தன்னால் ஆன உதவிகளைக் கணபதி செய்தான். மார்வாடி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். மார்வாடி முதலாளியைப் பெற்ற தகப்பனாகவே கணபதி கருதினான். இரண்டு தினம் கழித்து ஒருநாள் பிற்பகலில் மார்வாடி கணபதியை அழைத்து, தான் இனி பிழைப்பது அரிதென்றும், தனக்கு உள்ள இருபது கோடி ரூபாய் ஆஸ்தியையும் கணபதிக்கும் சில தர்மங்களுக்கும் எழுதி வைத்திருப்பதாயும், தர்மங்களைக் கணபதியே நிர்வகிக்கவேண்டுமென்றும் சொல்லி, தான் அது விஷயங்களைக்கண்டு எழுதியுள்ள உயிலையும் கணபதியிடம் கொடுத்தான். மார்வாடியின் கண்களில் ஒரு ஒளி வீசிற்று. சாந்தி அடைந்தது போல் கண்களை மூடிக்கொண்டான். கணபதியை அணைத்துக்கொண்டான். கோடீசுவரன் மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் எய்தினான்.

இன்பமும் செல்வமும் மலிந்து கிடந்தாலும் கணபதிக்கு மன நிம்மதி பூரணமாக ஏற்படவில்லை. தன் தாயையும், தங்கையையும் காணத் துடிதுடித்தான். அவர்களது நிலைமையை அவனால் அறியமுடியவில்லை. சிந்தனை அவனைச் சூழவே மனம் வெதும்பினான். சற்று நிதானித்தான். மனவேதனை நீங்க, காரில் ஏறிக்கொண்டு கடற்கரையை நோக்கிப் பறந்தான்.

கடற்கரையில் ஏராளக் கூட்டம். ஆஸ்திரேலியாவிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி வெற்றியுடன் தாய்நாடு திரும்பி வந்துவிட்டது. அவர்களைக் காணவே மக்களது கூட்டம். கூட்டத்தைத் தாண்டி அப்பால் போகவே அங்கே தன் சகோதரி ஆவலுடன் யாரையோ எதிர்பார்த்து நிற்பதைக் கண்டு திகைத்து மலைத்து நின்றுவிட்டான். "லீலா லீலா" என்று அழைத்தான். திரும்பிப் பார்த்தாள் லீலா. "அண்ணா!"வென்று கதறி அவனைக் கட்டிக்கொண்டாள். அவளது கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கணபதி நிலை கலங்கிவிட்டான். இருவரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சற்று அப்பால் சென்றனர்,

அத். 64. நரகக் குழி

இனி நாம் சற்றே சபேசன் குடும்பத்தைக் கவனிப்போம். சபேசன் ஒரு திறமையான அதிகாரி அல்ல: ஆனால் காரியவாதி. தனக்குக் கீழ் உள்ளவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தன். அவனது அதிருஷ்டம் அவனது சிப்பந்திகள் உழைப்பாளிகளாகவும், புத்திசாலிகளாகவும் அமைந்துவிட்டனர். லஞ்சம் வாங்குவதில் நிபுணன் சபேசன் அவர்கள். நம்பிக்கைவாய்ந்த குமாஸ்தாக்கள் சபேசனது புகழையும் செல்வத்தையும் அதிகரிக்கச் செய்தனர். ஆனால் காலம் ஒரே மாதிரியாக ஓடிக்கொண்டிருக்குமா? சபேசன் வாழ்வில் ஏழரை நாட்டுச் சனியன் புகுந்தான். அதன் விளைவு? சபேசன் வியாதியால் பீடிக்கப்பட்டான். ஏராளமாகச் செலவு. லஞ்சம் முன் போல் கொடுப்பாரில்லை. ஆடம்பர வாழ்வு முடியவில்லை. தவிர அவனது நிர்வாக இலாகாவில் ஊழல்கள் மலிந்தன. காரியம் நிறைவேறாமல் லஞ்சம் கொடுத்து ஏமாந்தவர்கள் மொட்டைக் கடிதம் மூலம் சபேசனது குறைகளை வெளிப்படுத்தினர். திடீரென்று மத்திய அரசாங்க அதிகாரியொருவர் அவனது இலாகாவைச் சோதனையிடவே, சபேசன் இலஞ்சம் வாங்குவது வெளிப்பட்டுவிட்டது. சபேசன் வேலையினின்றும் விசாரணையின் பேரில் நீக்கப்பட்டான். ஆடம்பர வாழ்வின்போது கடன் கொடுத்தவர்கள் பலர் சபேசனைத் துன்புறுத்தத் தலைப்பட்டனர். சபேசனது நிலைமை மானக்கேடாகி விட்

டது. தானும் தனது குடும்பமும் நரகக்குழியில் விழுந்துவிட்டதாகவே அவன் கருதினான்.

ஸ்ரீமதி சபேசன் தன் நிலைமையை உணர்ந்து கண்ணீர் விட்டாள். தனது செருக்கு அழிவதைத் தன் கண்முன் கண்டாள். பிள்ளை தேசிகன் வந்தவேலையையும் விட்டுவிட்டு ஊர்சுற்றுவதைக் கண்டு மனம் புண்ணானாள். தான் பங்கஜத்துக்கும் லீலாவிற்கும் இழைத்த கொடுமைகள்தான் தன் துன்பங்களுக்குக் காரணமோ எனவும் எண்ணமிட்டாள். ஒன்றும் தோன்றாமல் கண்ணீர்விட்டாள். தேற்றுவார் இல்லை. ஆதரவு அளிப்போரையும் காணோம். குல தெய்வத்தை வேண்டினாள். புருஷனையும் கடிந்துகொண்டாள். வழி தெரியாமல் திணறினாள்.

அத்: 65. முடிவு

லீலாவை அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான் கணபதி. தனது வாழ்க்கையை ஒளியாமல் சொல்லிவிட்டான் தங்கையிடம் வழியில். பார்வதிமீது அனுதாபமே லீலாவிடம் குடிகொண்டது. பார்வதி கணபதிக்குச் செய்யும் மாசற்ற தொண்டு, அவனுக்குக் காட்டும் கனிவு, உள்ளன்பு லீலாவின் மனதைக் கவர்ந்துவிட்டன.

சாப்பாட்டுக்குப்பிறகு லீலா தனது வரலாற்றை விஸ்தாரமாகக் கள்ளம் கபடம் இன்றி ஒளிக்காமல் கூறி மனதில் இருந்த பெருத்த பாரத்தைப் போக்கிக்கொண்டாள் லீலா உண்மையில் மேகன்பால்கொண்டுள்ளது சகோதர அன்பே தவிர, காதல் அல்ல என்பதை, கணபதி தெரிந்துகொண்டான். தேசிகனையே தன் சகோதரி நேசித்துவருவதை அறிந்தான்.

இந் நிலையில் மேகனுக்கு உடம்பு குணமானாலும் புத்தி ஸ்வாதீனமில்லாமல் போய்விட்டது என்ற செய்தி லீலாவை மனத்துயரில் ஆழ்த்திவிட்டது. கணபதியும் மேகனது நிலைக்கு இரக்கப்பட்டான். இருவரும் மேகநாதனைப் பார்க்கச் சென்றனர். இவர்களைக் கண்டதும் மேகன் கடகடவெனச் சிரித்தான். "இவர்கள் யார் டாக்டர்? எனக்கு அறிமுகம் செய்துவையுங்கள் தயவு செய்து" என்று கேட்டான். லீலாவைபார்த்து "ஏ! தேவகன்னிகையே, நமஸ்காரம்" என்றான். இன்னும் வாயில் வந்தவாறு, மனம் தோன்றியவாறு அர்த்தமில்லாமல் சம்பந்தாசம்பந்தமின்றி உளறினான். அழுதான், கையைக்கொட்டினான், மறுபடி சிரித்தான். ஓயாமல் சிரித்தான். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டான். சுய உணர்வுடன் பேசும் குறி அவனிடம் வெளிப்பட்டது. "இவள் லீலா அல்லவா டாக்டர்?" என்றான். பழைய நினைவுகள் அவனுக்குத் திரும்பிவிட்டதாக லீலாவிற்குப் புலப்பட்டது "லீலா, திரும்ப பட்டணம் போகலாமா?" என்று அவன் கேட்டது அவளுக்கு இன்பம் அளித்தது. லீலா தன் அண்ணாவை மேகனுக்கு அறிமுகப்படுத்திவைத்தாள். மீண்டும் வருவதாகச் சொல்லி, கணபதியும் லீலாவும் வெளியே வந்தனர்.

பம்பாய் வாழ்க்கையில் கணபதிக்கு வரவர வெறுப்புத் தட்டியது. சென்னைக்கே திரும்ப மனம் கொண்டான். ஆனால் தான் சிறைக்கைதியாக இருந்து தப்பி ஓடிவந்ததற்குத் தனக்கு வாரண்டு காத்திருக்குமே என்ற பயம் உண்டாகி அவனைக் குலுக்கியது. சுதந்திரம் பெற்றுள்ள நாட்டில் காருண்ய சர்க்கார் தன்னை மன்னிக்க மாட்டார்களா என்ற எண்ணமும் ஏற்பட்டது.

அண்ணாவின் வீட்டில் சுகமாக இருப்பதைத் தன் தாயாருக்கு லீலா கடிதம் மூலம் எழுதிக் கவலைப்படவேண்டாமெனக் கோரினாள். அன்று பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த லீலா "அண்ணா! அண்ணா!" என்று அவசரமாகக் கூப்பிட்டாள். கணபதி ஓடிவந்தான். தங்கை சுட்டிக்காட்டிய இடத்தைப் படித்தான். "சுதந்திரதினக் கொண்டாட்டத்தை உத்தேசித்துக் கைதிகளுக்கு விடுதலை. சிறையினின்றும் தப்பி ஓடிய கைதிகளின்மீது உள்ள வாரண்டுகள் ரத்து" என்பதைப் படிக்கவே பேரானந்தமடைந்தான். அண்ணாவும் தங்கையும் கடவுளை மனமாரத் துதித்தனர்.

சீக்கிரமே சென்னையை அடையத் திட்டம் போடப்பட்டது. மேகநாதனை எப்படியும் குணப்படுத்திக் காப்பாற்ற எண்ணினர். சென்னையை அடைந்து முதற்காரியமாகப் பங்கஜம்மாளைத்தேடிப்பிடித்தனர். தாயின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து தன் தவறுகளை மன்னிக்க வேண்டினான் கணபதி. பார்வதி விம்மி அழுதாள். இருவரையும் தேற்றினாள் பங்கஜம். விதியின் வலிமையால் நடந்த தவறை நினைத்து வருத்தமடைய வேண்டாமென ஆறுதல் கூறினாள். அம்மாவின் ஆலோசனைப்படி பார்வதியைக் கணபதி ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டு தன் தவறுக்குப் பிராயசித்தமும் செய்துகொண்டான். சீக்கிரமே மாஸ்டர் கணபதி குடுபத்தில் ஜனித்து எல்லோரையும் மகிழ்வித்தான்.

சபேசன் அவர்கள் மனமுடைந்து மாண்டார். அவரைத் தொடர்ந்து மிஸஸ் சபேசனும் சென்றுவிடவே தேசிகன் தவித்தான். லீலா அவனையே மணக்க, திடச்சித்தம் கொண்டுள்ளதை உத்தேசித்து, தேசிகனுக்கு நல்ல உத்தியோகம் தேடிக் கொடுத்தான் கணபதி. தேசிகனும் லீலாவும் மனமொத்த தம்பதிகளானார்கள்.

சரசுவை லீலா மறந்துவிடவில்லை 'மேகநாதனுக்குச் சித்த ஸ்வாதீனமில்லாமை மாறவில்லையாதலால் சரசுவை வேறு தக்க இடத்தில் அன்பும் கண்யமும் நிறைந்த கணவனுகப்பார்த்து மணம் செய்வித்தாள்.

மேகநாதன் திடீரென்று ஒருநாள் மறைந்துவிட்டான். அவன் சென்ற இடம் தெரியவில்லை.

உலகில் இன்பம் துன்பம் இரண்டும் சமமாக உள்ளன. வாழ்க்கைச் சக்கரம் மேலும் கீழும் மாறி வருகின்றது. இன்பம் வந்தகாலை இறுமாப்புக்கொள்ளாமலும், துன்பம் வந்தபொழுது மனமொடிந்து, மன உறுதி குலைந்து தவிக்காமலும் ஒரு நிலையாக இருப்பதே உண்மை இன்பம்.

முற்றிற்று

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானும் உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மைசெய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimathi. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.

பகுத்தறிவு போட்டி - 2

(தஞ்சை ஜில்லா கலக்டரின் அனுமதி பெற்றிருக்கிறது)

விடைகள் ஆ. வி. அகராதியிலிருந்து பொறுக்கப்பட்டன

பரிசு ரூ. 1500

பிரவேச கட்டணம் கூப்பன் ஒன்றுக்கு அணா எட்டு

முடிவு தேதி 17–2–1952



முதற் பரிசு 1000

2-வது பரிசு 500

பெயர்

விலாஸம்

இடம் இருந்து வலம்

1. வடநாடுகளில் இதை அதிகம் உபயோகிக்கிறார்கள்,
2. ஒரு சமஸ்தானம் என்றால் அதற்கு ஒரு.....உண்டு
5. இந்நாளில் இவனுக்கு மதிப்பு உண்டா?
7. ......என்றாலும் சிதம்பரம் என்றாலும் ஒன்றே.
8. இதனால் அடிபட்ட பறவை சுருண்டு விழும்.
9. வறுமையின் காரணத்தால் சிலர் இது செய்கிறார்கள்.
12. சிறிய தாயார் பதுங்கிக்கொண்டிருக்கிறாள்.
13. எத்தகைய இது ஏற்பட்டபோதிலும் கலங்க மாட்டார்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்.
14. இங்கு பதுங்கிக்கொண்டிருக்கும் பெண்ணின்... வரதட்சணை தடை மசோதாவை முதலில் வரவேற்பார்.
16. இது அதிகமானால் குடலில் வேதனையை உண்டு பண்ணும்.
17. உலகத்திலுள்ள எதுவும் இது இல்லை.
18. இதை விதவிதமாகப் போட்டுக்கொள்வதில் சில பெண்களுக்கு அலாதி பிரியம்.
20. இதை சுவாமிக்கு அபிஷேகம் செய்வதுண்டு.
21. இது செய்பவர்களைக் கண்டால் சிலருக்குப் பிடிக்காது.
22. இது அதிகமானால் சிலரால் சகிக்க முடிகிறதில்லை.

மேலிருந்து கீழ்

1. வேகமாக ஓடக்கூடியது சரியாக இல்லை.
2. இதன் கொடி கிளம்பியதும் அது படர்ந்து காய்க்கப் பந்தல் போடுகிறார்கள்.
3. அளவுக்குமீறி......கூடாது.
4. மார்கழி மாதம்.........யன்று ஸ்ரீ நடராஜரைப் புறப்பாடு செய்கிறார்கள்.
6. இது அதிகமாக இருக்கும்பொழுது வெளியில் உலாவப் போவார்களா?
10. எல்லோருடைய இது ஒரே மாதிரியாக இராது.
11. பழைய காலங்களில் சண்டைக்குச் சரியாக இல்லாத இதை அதிகமாக உபயோகித்து வந்தார்கள்
13. உள்ளத்தில் இது நிறைந்திருப்பது முகத்தைப் பார்த்தாலே தெரியுமே.
15. இவர்கள் காலங்களில் காப்பி சாப்பிடுகிற வழக்கம் ஏது!
16. திருமூர்த்திகளில் ஒருவர்.
17. இது மிகுந்தவர்கள் எந்தக் காரியத்தையும் செய்ய பின்வாங்க மாட்டார்கள்.
18. இதன் நிறம் வெள்ளை.
19. இதைக் குடித்தால் போதையைக் கொடுக்கும்.

---

1. உதாரணம் :—இடமிருந்து வலம் (1) "கோதுமை", மேலிருந்துகீழ்:-(1) கோடகம் இதேபோல் மற்றவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன் ஒன்றுக்கு அணா எட்டு. பிரவேச கட்டணம்மணியார்டர்மூலம் செலுத்தவேண்டும். தனி கூப்பன் வேண்டுவோர் கூப்பன் ஒன்றுக்கு காலணா வீதம் ஸ்டாம்பாக அனுப்பவேண்டும்
3. பாங்கில் சீலிட்டு வைத்திருக்கும் விடைக்குச் சரியாக உள்ளதிற்கு முதற் பரிசு அளிக்கப்படும்,
4. வடமொழி எழுத்துக்களை உபயோகிக்கக்கூடாது, விடைகள் 24—2—52 மித்திரன் வாரப் பதிப்பில் பிரசுரிக்கப்படும்,
5. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விபரங்களுக்கு — தந்தி: "FORTUNE"

"லலிதா பகுத்தறிவு போட்டி" P. B. No. 1, குடவாசல் (தஞ்சை ஜில்லா)

நவீன ஔஷதங்கள்

என். அனந்தவைத்யநாதன்

வியாதிகட்குச் செய்யும் பரிகாரம் மூவகைப்படும் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. 1. தெய்வ சம்பந்தமான ரசம், கந்தகம், பாஷாணம், இவைகொண்டு வைத்தியம் செய்வது தேவசிகிச்சை; பூமியில் கிடைக்கும், வேறு தாதுக்களிலிருந்து தயாரிக்கப்படும் பஸ்மம், செந்தூரம், உப்பு முதலிய ஔஷதங்களும் அவ்வகையைச் சேர்ந்தவை. 2. தாவர வருக்கத்தைச் சேர்ந்த மூலிகைகளைக் கையாளுவது மானுட சிகிச்சை. 3. அறுத்தல், சுடுதல் முதலியன ராக்ஷஸ சிகிச்சைக் குரியவை. இம்முறைகளில் கையாளப்படும் பொருள்களனைத்தும் ரஸாயனச் சரக்குகளே. இவற்றின் உள்ளமைப்பும் ஜோடனையும் தெரிய வரவர, ரஸாயன—சிகிச்சை (Chemotherapy) நடமாடத் தொடங்கி ஒரு மகோன்னத நிலையைப் பெற்றுவிட்டது, குருட்டுத்தனமாக ரஸாயனச் சரக்குகளைச் சிருஷ்டித்து நோயாளிகளுக்குக் கொடுத்துப் பரீக்ஷித்துப் பார்த்து இது முதல்தரமான அருமருந்து, இது பயனற்ற சரக்கு, இது தீங்கிழைக்கும் கொடிய நஞ்சு என்று தரம் பிரித்துக் கையாளும் நாள் போய்விட்டது; ஆயிரம் பேரைக் கொன்று அரை வைத்தியனாக வேண்டிய காலம் இது இல்லை. அஞ்ஞான இருளில் தடுமாறவேண்டாம்; ஞான ஒளியில் விளையும் திட்டமான அபிப்பிராயங்களை யொட்டியே இன்று ஆராய்ச்சி நடைபெறுகிறது.

வறட்டு ரஸாயன ஆராய்ச்சி,* சிகிச்சை முறை முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. முன் காலத்தில் ரஸாயனத்தை ஆயுர்வேதத்தின் பணிப்பெண்ணாக நினைத்ததுண்டு. ‘நோய் நாடி நோய் முதனாடி யது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்’’ என்றார் வள்ளுவர். நோய் கூறுபாடு அறியும் முறையில் பௌதிக-ரஸாயன சோதனைகள் பெரிதும் பயன்படுகின்றன. நோய் என்ன, அதன் காரணம் என்ன என்பனவற்றைச் சந்தேகமில்லாமல் நிச்சயிக்க ரத்தம், நீர், மலம் முதலியவற்றை ரஸாயன முறைகளாலும் மைக்கிராஸ்கோப் மூலமாகவும் சோதிக்கின்றனர். நோயும் அதன் காரணமும் தெரிந்துவிட்டால், அரும்பெரும் மருந்துகொண்டு வியாதியை விரட்டி விடலாம். ரஸாயனி அவ்வகை மருந்துகளைத் தயாரித்துவிடவே ரஸாயனப் பணிப்பெண்ணின் பவிஷும் கௌரவமும் உயர்ந்து விட்டன. மக்களின் சுபாவத்தை நிருணயிக்கும் சேகரிகள் (Glands) சுரக்கும் உத்தீபன ரஸங்களிலுள்ள ஹார்மோன்களென்ன (Harmones), உடற்செயல்களுக்கும் சுகவாழ்விற்கும் ஆதாரவாயிருக்கும் வைடமின்களென்ன (Vitamins), பல்லாயிரக்கணக்கான நோயாளிகளைக் காப்பாற்றும் சர்வரோக நிவாரணிகளாகிய ஸல்போனமைடுகளென்ன (Sulphonamides), தீராத வியாதிகளைத் தீர்த்து வைப்பதும் எமன் வாயிலிருந்து மீட்டு, அவதியான தறுவாயில் அபயமளிப்பதும் ஆனால் கேவலம் பூஞ்சக்காளான்கள் உண்டுபண்ணுவதுமான பெனிஸிலின், ஸ்டெப்டோமைஸீன், ஆரோமைஸீன், டெர்ராமைஸீன், க்ளோரோமைஸடீன் என்ற அற்புத மருந்துகளென்ன, மலேரியா சுரத்தின் விரோதியான புதுப்புது மருந்துகளென்ன, இதுகாறும் கரும வியாதியென்று நினைக்கப்பட்ட குஷ்டத்தைக் கண்டிக்கும் ஸல்போன் (Sulphone) மருந்துகளென்ன, ரணம், புண் முதலியவற்றை அழுகாவண்ணங் காக்கும் புதுப்புது ஆண்டிஸெப்டிக்ஸ் (Antiseptics) என்னும் நச்சுக்கொல்லிகளென்ன, உணர்விழக்கச் செய்யும் குளோரோபாம், ஈதர், ப்ரோகேன், பார்பிடோன்கள் முதலிய மயக்க-மறப்பு மருந்துகளென்ன—இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்—இப்பொருள்களின் குணவிசேஷங்களையும் சிக்கலான அணு அமைப்புகளையும் ரஸாயன ஆராய்ச்சி வெளிப்படுத்துகிறது. ரஸாயனப் பணிப்பெண் ராணிப் பதவிக்கு உயர்ந்துவிட்டாள். பொருளின் அமைப்பிற்கும் தேக வியாபார நிகழ்ச்சிக்கும் (Chemical structure and physiological action) ஒன்றுக்கொன்றுள்ள உறவும் தொடர்பும் தெரிய வருவதுதான் மருந்துத் தொழிலின் முன்னேற்றத்திற்குக் காரணம். மருந்துகளை உரிய தாவர-விலங்குப் பொருள்களிலிருந்து

* பௌதிகத்திற்குக் கணிதம்; ஆயுர்வேதத்திற்கு ரஸாயனம்

ஏராளமான அளவில், சுத்தமான நிலையில், மலிவான விலையில் பெரிய தொழிற்சாலைகளில் ரஸாயனி தயாரிக்கிறான்; இந்த ஔஷதங்களின் குணங்களை அறிந்து, அவற்றைச் செயற்கை முறையிலும் தயாரிக்க முயன்று வெற்றி பெற்று வருகிறான்; கற்பனா சக்தியின் உதவிகொண்டு இயற்கையல்லாத மிக வீரிய மருந்துகளையும் படைக்கிறான். அவை எண்ணிறந்தவை. சிலவற்றை இங்கே கவனிப்போம்.

எந்த நோய்க்கும் பரிகாரமாக, சர்வ சாதாரணமாகக் கையாளப்படும் ஸல்பா மருந்துகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஸால்வார்ஸான் (Salvarsan) என்னும் ஒரு பாஷாண மருந்து மனிதனுக்குத் திங்கிழைக்காமல் மனிதனுக்குத் திங்கிழைக்கும் கொடிய கிருமிகளுக்கு மட்டும் நஞ்சாக வேலை செய்வதை ஏர்லிச் (Ehrlich) என்ற விஞ்ஞானி கண்டார். மேலும், சில சாயச் சரக்குகள் தாவர அல்லது விலங்கு உறுப்பின் ஒரு தனிப்பட்ட பாகத்தை மட்டும் தாக்குவதையும், சில சாயங்கள் கிருமிகளைக் கொல்வதையும் அறிந்திருந்தனர். ஆகையால் புதுப்புதுச் சாயங்களை ஆயிரக் கணக்கில் உண்டாக்கிச் சோதனை செய்தனர். அவற்றுள் ஒன்றுதான் 1920 ஆம் ஆண்டில் 'பேயர்' தொழிற்சாலையில் பிறந்த ஜெர்மானின் $C_{51}H_{34}O_{23}N_6S_6Na_6$ என்ற சாயம். ஸால்வார்ஸன தீர்க்காத வியாதியை இது குணப்படுத்தியது. 1908 லேயே, டாக்டர் பட்டம் பெறுவதற்கு வேலை செய்த பொழுது, ஜெல்மோ என்றவர் "பாரா அமைனோ பென்ஸீன் ஸல்போனமைடு—para–amino—benzene—sulphonamide" என்ற பொருளை நிலக்கீலிலுள்ள சில சரக்குகளிலிருந்து தயாரித்து அதைப்பற்றி வியாசம் எழுதினர். சாயத் தொழிலில் ஆர்வங் கொண்டவரும் பேயர் ரஸாயனச் சாலையில் வேலை செய்தவருமான ஹார்லீன் என்பவர் மேற்கண்ட சரக்கை அடிப்படையாகக் கொண்டு பல சிவப்புச் சாயங்களைத் தயாரித்தார். அவற்றுள் ஒன்று ஒரு குழந்தையின் கபவாத சுரத்தைப் போக்கியதை டாக்டர் பாஸ்டர் தெரிவித்தார். அதுதான் "ப்ராண்டோஸில்". அதைத் தயாரிக்க உரிமைப் பத்திரம் எடுக்கப்பட்டது. அது ஸ்டெப்டோ கிருமிகளைக் கொல்லுமா என்று பார்க்க ஆவல் கொண்டு டொமாக் என்ற விஞ்ஞானி ஒரு பூனையைக் கொல்லவல்ல அளவில், 1000 எலிகளின் உடல்களொவ்வொன்றிலும் ஸ்டெப்டோ கிருமிகளைச் செலுத்தினர். பின்பு ஒவ்வோர் எலிக்கும் ப்ராண்டோஸில் மருந்தை ஊசிகொண்டு குத்திச் செலுத்தினர். ஒரு எலி கூட இறக்கவில்லை; ஆயிரமும் பிழைத்தன. நூற்றுக்கு நூறு வெற்றி. 1935-இல், டொமாக்கின் அருமை மகள் பின்னல் ஊசி கையில் குத்தி ஸ்டெப்டோ விஷத்திற்குள்ளாகி நோய்வாய்ப்பட்டாள். ஜுரம் ஏறியது; ஜன்னி பிறந்தது; ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டாள். பிரபல டாக்டர்கள் தங்களாலானமட்டும் சிகிச்சை செய்து பார்த்தனர்; குணமாகவில்லை; வியாதி முற்றியது; இனிப் பிழைக்கமாட்டாள் என்ற ஆபத்தான நிலை ஏற்பட்டது. "என் ஆராய்ச்சிச்சாலையிலிருந்து ஸ்டெப்டோ விஷத்தைக் கொண்டுவந்திருப்பேனே? என் மகளுக்கு நானே எமனாக வந்தேனே" என்று கதறினர். எலிகளைக் காப்பாற்றிய மருந்து தம் மகளையும் ஏன் காப்பாற்றக் கூடாது என்று எண்ணி, ப்ராண்டோஸிலை அதிக அளவில் தைரியமாக, கடைசி உபாயமாக மகளுக்குக் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! மகள் பிழைத்தெழுந்தாள். வைத்திய உலகில் ஒரு பரபரப்புக் கிளம்பியது.

1937 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற பாஸ்டன் வைத்திய சாலையில், ஜனாதிபதி ரூஸ்வெல்டின் இளம் வயதுடைய மகன் சன்னிநோய்கண்டு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டான். வைத்திய நிபுணர்களொருவராலும் வியாதியைத் தீர்க்கமுடியவில்லை. கடைசியாக, ப்ராண்டோஸிலைக் கொடுக்கத் தீர்மானித்தனர். மூன்றே நாளில் இளம் ரூஸ்வெல்டின் சுரம் நீங்கிப் பிழைத்தெழுந்தான். கேட்கவா வேண்டும்! பத்திரிகைகளிலெல்லாம் இச் செய்தி கொட்டை எழுத்தில் வெளிவந்தது. பெரிய புரட்சி ஏற்பட்டுவிட்டது. ஸல்பா, ஸல்பா என்பதே எங்கும் பேச்சு!! இது ரஸாயனிகளையும் டாக்டர்களையும் தூண்டியது. ஆயிரக்கணக்கான ஸல்பா சரக்குகள் தோன்றின. ஸல்பா மருந்துகளின் அமைப்புகளை எழுதிக் கூர்ந்து கவனித்தனர். ஒவ்வொரு பொருளின் அமைப்பாலும் பொதுவான ஓர் உறுப்பைக் கண்டனர். ஸல்பா மருந்து உடலிலுள்ள ரஸங்களால் தாக்கப்பட்டு எல்லாப் பொருள்களிலும் பொதுவாய் அமைந்த பாகமாகிய 'ஸல்போனமைடு' வெளிப்படுவதே மருந்தின் வீரியத்திற்குக் காரணம் என்று தெரிந்து கொண்டனர். இத் தாய்ச்சரக்கை 1908 லேயே ஜெல்மோ தயாரித்துவிட்டார்.

இது மிக்க வீரியமுடையது; ஆனால் இதை நேரே உள்ளே கொடுத்தால், இது சில தீங்குகளை விளைவிக்கலாம்.

குறிப்பான கிருமிகளால் விளையும் வியாதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விசேஷ ஸல்பா மருந்து பயன்படுகிறது. முன்னாளில் கபவாத சுரம் என்றால் நடுக்கம். ஏனெனில் நூற்றுக்குத் தொண்ணூறு இறந்துவிடும். ஸல்பா மருந்து வந்தது; நடுக்கம் பறந்தே போயிற்று; சாவு விகிதம் தொண்ணூறிலிருந்து மூன்றுக்குக் குறைந்துவிட்டது!! பிரசவத்திற்குப் பிறகு தாய்க்குச் சுரங் கண்டால் அவள் பிழைப்பது அரிதாயிருந்தது. பெற்றுப் பிழைத்தாள் என்று நாம் கூறுவது இதனாலேயே. ஸல்பா மருந்து வந்தபின்பு இந்தப் பயம் அடியோடு போய்விட்டது என்று கூறலாம். கபவாதசுரம், பிரசவ சன்னி, சுவாசநோய், கட்டி, கரப்பான், கிரந்தி, வெட்டை முதலிய நோய்களைத் தீர்ப்பதில் ஸல்பா மருந்துகள் மிக்க திறமுடையவை. சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஸல்பா–பிரிடீனேயோ, ஸல்பா–தய்சாலேயோ, ஸல்பா–டயஸீனேயோ, ஸல்பா–மீரஸீனேயோ டாக்டர் கொடுப்பார். சீதபேதிக்கு ஸல்பா–குயானிடினும், ஸல்பா–ஸக்ஸிடினும் கைகண்ட மருந்துகள்.

ஸல்பாவை விட விசேஷ சக்தியுடைய ஔஷதங்கள் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது பெனிஸிலின். சுரமா? பெனிஸிலின்; சளிக்கட்டா? பெனிஸிலின்; இருமலா? பெனிஸிலின் சிரங்கா? பெனிஸிலின்; எதற்கெடுத்தாலும் பெனிஸிலின். கண்கூடாகக் குணம். அது எதிர்பாராத வகையில் கண்டுபிடிக்கப்பட்ட சரக்கு. நுண் விஷக் கிருமிகளின் குணாதிசயங்களைக் காணும் ஆராய்ச்சியில் லண்டன் நகரிலுள்ள ஸெயிண்ட் மேரி ஆஸ்பத்திரியில் டாக்டர் ப்ளெமிங் ஈடுபட்டு, அக்கிருமிகளை உரிய முறைப்படி தட்டுகளில் வளர்த்துப் பெருக்கி வந்தார். 1929-ஆம் ஆண்டில், ஒரு நாள் டாக்டர் சோதனைச் சாலையில் புகுந்தார்; ஒரு கண்ணாடித் தட்டின் நடுவில் கிருமிகள் வளராதிருப்பதைக் கண்டார்; அத்தட்டை வெளியே எறிந்து விடாமல் கவனமாக மைக்ராஸ்கோப் கொண்டு சோதனை செய்தார்; அந்த இடத்தில் ஒரு வகை பூஞ்சக்காளன் இருப்பதைக் கண்டார்; "காற்றுத் தூசியில் இக்காளன் இருந்திருக்க வேண்டும். அது தட்டில் படிந்திருக்கவேண்டும். அது கிருமிகள் பெருகி வளர்வதைத் தடை செய்திருக்கவேண்டும்." என ஊகித்தறிந்தார்; இக்காளானை மற்றத் தட்டுகளில் போட்டார்; கிருமிகள் வளராததைக் கண்டார். இரகசியம் வெளிப்பட்டது! இந்தக் காளான் தான் "பெனிஸீலியம் நொடேம்" எனப்படுவது. இதிலிருந்தே பெனிஸிலின் தயாரிக்கப்படுகிறது. உரிய தட்டுக்களில் இக்காளானை வளர்த்துப் பின்பு பெரிய தொட்டிகளில் பெருக விட்டனர். ஒரு காளான் வகையுடன் மற்ற வகைகளும் இருக்கும், இது கூடாது. பொறுமையுடனும் சிரத்தையுடனும் கவனத்துடனும் பெனிஸீலியம் நொடேடம் என்னும் காளான் கூடுகளை மட்டும் பிரித்துப் பெருக்கி, அங்கு விளையும் சுத்தமான காளான்களைப் பிரித்தெடுத்து, மேலும் சுத்திசெய்து, பல ரஸாயன முறைக்குள்ளாக்கி, தண்ணீரில் எளிதிற் கரையக்கூடிய ஸோடிய அல்லது பொட்டாஸிய உப்பாக மாற்றி, சுத்தமான சீசாக்களில் அடைத்து அனுப்புகின்றனர். சீர்திருத்திய முறைகளைக் கையாளுவதால் பெனிஸிலின் விலை முப்பது ரூபாயிலிருந்து ஒரு ரூபாய்க்கு மலிந்துவிட்டது.

பெனிஸிலினைப் போலவே, வெவ்வேறு பூஞ்சக் காளான்களிலிருந்து, சமீபத்தில் பல வீரிய மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவை யாவன: சீதபேதி, கக்குவான், வெட்டை, பல வைரஸ்களால் (virus) உண்டாகும் தொத்து வியாதிகள் இவற்றிற்கு உகந்த ஆரோமைஸின்; இதைவிட வீரியமான டெர்ராமைஸின், 21 நாளடிக்கும் டைபாயிடு சுரத்தை மூன்றே நாளில் தணிக்கும் க்ளோரோமைஸெடின், க்ஷய ரோகத்தைக் கட்டுப்படுத்தும் ஸ்டெப்டோமைஸீன்.

காய்ச்சலடிக்கிகளைப்பற்றி (antipyretics) இனி கவனிப்போம். பாட்டி கொடுக்கும் பச்சிலைக் கஷாயம் நன்கு தெரிந்தது. அப்பச்சிலைகளிலுள்ள வீரியப் பொருள்கள் எவை என்பவற்றை ரஸாயனி கண்டுவிட்டான். ஸின்கோனாப் பட்டையில் 25 மருந்துகள் உள. அவற்றுள் முக்கியமானது கொயினா (quinine). குளிர் காய்ச்சலுக்கும் முறைக் காய்ச்சலுக்கும் இதைக் கொடுப்பது எல்லோரும் நன்கறிந்தது. இதன் அணு அமைப்பைக் கண்டறிந்து இதைச் செய்முறையிலும் தயாரித்து விட்டான் ரஸாயனி. மலேரியா சுரத்தைப் போக்கவும் வராமல் தடுக்கவும் செய்முறை மருந்துகள் பல சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜல தோஷம், தலைவலி, உடம்புவலி, இவற்று

டன் கூடிய காய்ச்சல் இவற்றிற்கு டாக்டரிடம் போகாமலேயே செய்முறையில் விளைந்த ஆஸ்பிரினை (Aspirin) நாம் சாப்பிடுகிறோம். ஆண்டிபைரின், பிரமிடான், பினாஸெடின் முதலிய காய்ச்சலடக்கிகள் நிலக்கீல் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

மயக்க மருந்துகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். சஸ்திர சிகிச்சை செய்துகொள்ள நடுங்கிய காலம் உண்டு. இப்பொழுதோ சிறிதும் வலி தெரியாமல் சிகிச்சை செய்துகொள்ளலாம். உணர்வு இழக்கச் செய்யும் க்ளோரோபாமைப்பற்றியும் ஈதரைப்பற்றியும் மக்கள் நன்கு அறிவர். இவை இப்பொழுதோ வெகுவாகக் கையாளப்படுவதில்லை. * பிராணவாயு—கரியமிலவாயுக் கலவையும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உபயோகப்படுகிறது. சிறிய ரணங்களைக் கீறும் முன்னால், அவற்றைச் சுற்றிலும், எளிதில் ஆவியாகும் ஈதைல்—க்ளோரைடை (Ethyl chloride) பீச்ச, குளிர்நிலை உண்டாகி, தாக்கப்பட்ட இடம் மரத்துப்போய்விடும். இன்னும் கொக்கேனை ஊசிகொண்டு குத்திச் செலுத்தி உரியபாகங்களை உணர்விழக்கச் செய்வதுமுண்டு. தேள் கொட்டிய இடத்தில் கொக்கேனைக் குத்திச் செலுத்தி ஊசியை வெளியே எடுப்பதற்குள் அழுத பிள்ளை சிரிக்கும். இடுப்பிற்குக் கீழே சஸ்திர சிகிச்சை செய்யவேண்டியிருந்தால், முதுகெலும்புக் கூட்டின் அடிப் பாகத்தில் ப்ரோகேன், நோவோகேன் போன்ற மருந்துகளைக் குத்திச் செலுத்த, அதற்குக் கீழேயுள்ள உறுப்புகளனைத்தும் மரத்துவிடும். தூக்கம் வராமலிருத்தல், அதிக வலி, அலட்டல், நிலைகொள்ளாமலிருத்தல் இவ்வேதனை நிலைகளை நீக்க, வெரோனல், ஸொனேரில் முதலிய பார்பிடோன் வகை மருந்துகள் உபயோகப்படுகின்றன. இவை யாவும் ரஸாயனியினால் செய்முறையில் தயாரிக்கப்படுகின்றன.

உடல் நலனை விளைவிக்கும் பொருள்களில் முக்கியமானவை வைடமின்கள்; தற்கால ஆராய்ச்சியில் கண்டவை. இயற்கைப் பொருள்களிலிருந்தும் செய்முறைகளாலும் ரஸாயனி எல்லா வைடமின்களையும் தயாரித்து வருகிறான். வந்த நோயைச் சீக்கிரமாகக் குணப் படுத்துவதற்கும் சில நோய்கள் தீண்டாதிருப்பதற்கும் இவ் வைடமின்கள் பயன்படுகின்றன. A, D, B, கூட்டு, C என்பன நன்கு தெரிந்தவை. பழுதுபட்ட நரம்பைச் சீர்திருத்தக்கூடிய B 12 என்னும் பிரமாதமான வைடமினைச் சமீபகாலத்தில் தயாரித்துள்ளனர். வெட்டுக் காயத்திலிருந்து வெளிவரும் ரத்தம் உறையாமல் வெளியேறிக்கொண்டே இருக்கும் அபாய நிலையில் வைடமின் K கொண்டு ரத்தப் பிரவாகத்தை அடக்கி உயிர்ப்பிச்சை கொடுக்கலாம்.

கடைசியாக, தேகத்திலுள்ள சுரப்பிகள் (glands) வடிக்கும் ரஸங்களிலுள்ள சில ஹார்மோன்களைக் கவனிப்போம். ரத்தம் சரிவர உரிய அமுக்கத்துடன் பாய்வதற்கு அட்ரினலின் (adrevaline) தேவை. இது வேண்டிய அளவில் (மூத்திரக் குண்டிக்காய்க்கு மேலே Kidney உள்ள) சுரப்பியிலிருந்து கசிந்து வெளியேறி ரத்தத்துடன் கலக்கும். சஸ்திர சிகிச்சை நடக்குங்கால் பல சந்தர்ப்பங்களில் நோயாளியின் ரத்தவோட்டம் நின்றுவிடும். அச்சமயம் அட்ரினலினைக் கொடுத்து உயிரைத் திருப்ப இயலுகிறது. இழுப்பு நோயின் கொடுமையைத் தற்காலிகமாகத் தணிப்பதற்கும் இது பயன்படுகிறது. குதிரை, மாடு இவற்றின் உரிய சுரப்பிகளிலிருந்தே தயாரிக்கப்பட்டு வந்த இச்சரக்கை இப்பொழுது ஜீவஹிம்ஸை செய்யாமல் தார் பொருள்களிலிருந்து ரஸாயனி தயாரித்து விடுகிறான். ரத்தத்திலும் மூத்திரத்திலும் அளவுக்குமேல் சர்க்கரை தோன்றுவதே நீரிழிவு வியாதி. இது இன்ஸுலின் என்னும் ஹார்மோன் குறைவால் விளைவது. இன்ஸுலினைக் குத்திச் செலுத்திப் பல்லாயிரக் கணக்கான நோயாளிகளைக் குணப்படுத்தி வருகின்றனர். இதனால் சர்க்கரை குறைகிறது; ஆறாத புண்ணும் ஆறுகிறது. இதன் அணு அமைப்பின் மர்மத்தையும் கண்டு விட்டான் ரஸாயனி. பிடூடரி என்ற சேகரி சரியானபடி சுரக்காமலும் B வைடமின் குறைவாயும் இருந்தால், ரத்தத்தில் இருக்கவேண்டிய சர்க்கரையின் அளவு குறைவுபட்டு தூக்க நோய் உண்டாகும். நெப்போலியன் இந்நோய்வாய்ப்பட்டதே அவரது தோல்விக்குக் காரணம் என்கிறார்கள் தற்கால விஞ்ஞானிகள். பிடூட்ரி ரஸத்தையும், அனூரின் என்ற B வைடமினையும் க்ளூகோஸ் சர்க்கரையையும் நெப்போலியனுக்குக் கொடுத்திருந்தால் உலக சரித்திரமே

* பல் வைத்தியர்கள் நைட்ரஸ் ஆக்ஸைடு என்ற வாயுவை உபயோகிக்கின்றனர். பல ஆராய்ச்சிகளின் பயனாக எதிலீன் ப்ரோபிலீன், ஸைக்ளோ ப்ரோபேன், டைவைனல் ஈதர் என்னும் வாயுக்களை மேல்நாட்டு நவீன ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கின்றனர். மேலும், ஹிருதய, மார்க்கூடு முதலிய பாகங்களில் சஸ்திர சிகிச்சை செய்யவேண்டிய சமயங்களில், குராரீ (Curare) என்ற மருந்தும் உபயோகப்படுகிறது. இது நவீன முறை.

மாறியிருக்கும். உடம்பு வளர்த்தியையும் பருமனையும் கட்டுப்படுத்தும் தைராக்ஸின் என்ற அயோடின் கொண்ட (தைராயிடு சுரப்பி தயாரிக்கும்) ஹார்மோனைச் செய் முறையால் தயாரித்துப் பயனடைகிறோம். சாவைத் தடுத்து மக்களைச் சிரஞ்சீவிகளாக ஆக்க வழியுண்டா என்ற பிரச்னையில் விஞ்ஞானிகள் தொன்றுதொட்டு ஈடுபட்டு வருகின்றனர். இத்துறையில் போகோமொலெட்ஸ் (Bogomoletz) என்ற ரஷ்ய விஞ்ஞானி ஒருவாறு வெற்றிபெற்று வருவதாக ஒரு பத்திரிகை கூறியது. முறைப்படி வாழ்க்கை நடத்துபவன் 120 லிருந்து 150 வருஷ காலம் ஜீவித்திருக்கலாம். கிழத்தன்மையும் அகால மரணமும் ஏற்படுவதற்குக் காரணம் ஜீவாணுக்களுக்கும் ரத்தத்திற்கும் இடையேயுள்ள பிணைப்பு ஜவ்வு (Connective Tissue) பழுதுபடுவதுதான் என்கிறார் அவ்விஞ்ஞானி. A. C. S. என்ற ஒருவித ரஸத்தை உபயோகித்து, பழுதுபடுவதைத் தடுத்துக் கிழவர்களைக் குமரர்களாக ஆக்கலாம் என்றும் சொல்லுகிறார் அவர்.

இயற்கைப் பொருள்களிலிருந்தும் செய் முறைகளாலும் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனால், தொழில் முறையில் ஏராளமாக ரஸாயனி தயாரித்து மக்கள் நலனுக்கு உதவுவது மிகவும் போற்றத்தக்கது.

ஸர்வே ஜனாஸ் ஸுகினோ பவந்து.

(By courtesy of A. I. R. Madras.)

"கேசரியின்" மூன்று பிரசித்த மருந்துகள்

★ **லோத்ரா** ★

கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், கில் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றைக் குணப்படுத்தும்.

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்தசோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண்பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

★ **அர்க்கா** ★

சிறந்த ஜ்வர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா முதலான ஜ்வரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

கேசரி குடீரம் லிமிடெட்

ராயப்பேட்டை - மதராஸ்-14

தமிழ்நாடு ஏஜண்டுகள்:—

சீதாராம் ஜெனரல் ஸ்டோர்ஸ்,

மேலக் கோபுரவாசல், மதுரை.

ஸ்ரீ ஸ்துதி

ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

उपचितगुरुभक्तेरुत्थितं वेङ्कटेशात्
कलिकलुषनिवृत्त्यै कल्पमानं प्रजानाम् ।
सरसिजनिलयायाः स्तोत्रमेतत् पठन्तः
सकलकुशलसीमा सार्वभौमा भवन्ति ॥ ॥ २५ ॥

உபசித குருபக்தே: உத்திதம் வேங்கடேசாத்
கலிகலுஷ நிவ்ருத்யை கல்பமாநம் ப்ரஜாநாம் |
ஸரஸிஜ நிலயாயா: ஸ்தோத்ரமேதத் படந்த:
ஸகலகுசல ஸீமாஸார்வபௌமா பவந்தி|| (25)

ஸுரடி — ஆதி 2 களை

லகு

ஸ்ா ; ; ; ஸ் ஸ் நி நி நி த பா ப நி ஸ் ·ரி நி ஸ் நி த பா ; பா ;

உ ப சி த

நீ ஸா ரீ ரீ மா ; ; ; ரி மா ம மா பா ப ம ம ரீ ரீ ஸா

ரு த்தி தம்

ம பா ம் ப ஸ் நீ நீ தா தா மா பா, ம ப ஸ் நீ நி த தா நீ ;

க லி க லு ஷ

ம ரீ, மா பா நி ம பா நீ ஸ்ா ·ரி ப நீ ஸ்ா ·ரீ ம் நி ஸ்ா ·ரீ மா

க ல்ப மா நம்

த்ருதம்

ரீ ப ம பா, நி ஸ் நி நீ, த பா

கு ரு

ப மா க ரீ மா பா ; ; ;

வே ங்க

; ·ரீ ஸ்ா நீ ஸ்ா ; ·ரி, ம்

நி

·ரீ, க ஸ்ா ; நீ ; தா பா, த ப ம மா ; ரீ மா கா ரீ மா ரீ ஸா

ப்ர ஜா நாம்

த்ருதம்

ம பா த ப ம மா க ப ம ரீ ரீ ஸா

ப க்தே

ம பா ஸ் நி நீ த ப நி ப நி ம பா,

டே சா த்

ஸ்ா, ·ரி ஸ நி நீ, த தா பா பா ;

வ்ரு த்யை

மத்யம கால நடை

நீ ஸா நீ தா பா நீ மா பா ரீ நீ ; தா ; பா மா ரீ

ஸ ர ஸி ஜ நி ல யா யா

·ரீ, ப் ம்ா ·ரீ ; ; ஸ் ·ரி ஸ் ஸி தா நீ ; மா ரீ மா பா நீ

ஸ க ல கு ச ல ஸீ மா

ஸா ரீ மா ஸா ரீ ஸா நீ ஸா

ஸ்தோ த்ர மே த த்

ஸ்ா ஸ்ா நீ நீ தா தா பா பா

ஸா ர்வ

ரீ மா பா, நி தா, நி ஸ்ா ;

ப ட ந்த

மா மா ரீ ஸா ரீ மா பா நீ

பௌ ம ப வ ந் தி

ஸ்வரஜதி

ஸ்ா ; ; நீ ; தா மா பா நீ தா ப த மா ; கா பா மா

ஸா நீ தா த த ஜ ணு த ஜம் த க த

ரீ ; மா பா நீ ஸ்ா ; ; நீ தா நீ ஸ்ா ; பா நீ ஸ்ா

ரீ மா பா நீ ஸா த கி ட தாம் பா நீ ஸா

ரீ ; ; ரீ ஸா மா ரீ பா

ஜம் ரீ ஸா மா ரீ பா

·ரீ ; ; நீ ; ; மா

ரீ நீ மா

மா நீ தா மா பா நீ ஸ்ா ·ரீ

மா நீ தா மா பா நீ ஸா ரீ

ரீ ; ; நீ ரீ மா பா நீ

ரீ த தி கி ண தொம்

पद्मासन्या प्रणुदित इमां श्रीस्तुतिं देशिकस्य
बद्ध्वा गेयेऽधिगतविदितो राघवार्यो नृसिंहात् ।
कन्याद्रायां खरशरदि सल्लोचनां तां च राधां
धिष्ण्ये हर्षं परममगमद्गापयन् चक्रपाणेः ॥ ॥ २६ ॥

பத்மாஸந்யா ப்ரணுதித இமாம் ஸ்ரீஸ்துதிம் தேசிகஸ்ய
பத்வாகேயே திகதவிதிதோ ராகவார்யோ ந்ருஸிம்ஹாத் ।
கந்யாத்ராயாம் கரசரதிஸல்லோசநாம் தாம்சராதாம்
திஷ்ணயே ஹர்ஷம் பரமமகமத் காபயந் சக்ரபாணே ॥ (26)

மத்யமாவதி **ஆதி 2 களை**

லகு

·ரீ ; ஸ்ா ; ; ; பா ஙி ஸ் நீ பா மா ரீ ரீ ·ப ம ரீ ஸா
பத் மா ஸ ந்யா
நீ ஸா ரீ ரீ மா ரீ ரீ மா பா நீ பா மா பா ஸர் நீ ;
ஸ்ரீ ஸ்து திம்
பா மா ரீ ஸா ம ரீ ம பா ; ரீ மா பா நீ பா மா பா நீ
ப த்வா கே யே
நீ ஸ்ா ·ரீ ·ரீ பா ம்ா ·ரீ ·ரீ ஸ்ா ; ; நீ பர் நீ ஸ்ா ·ரீ
ரா க வா ர்யோ

த்ருதம்

; ஸ ஙி ரீ, ஸ ஸா, ரி ஸ நி பா
ப்ர ணு தி த
; நீ ஸ்ா ; நீ நீ பா மா
தே சி
; நீ பா மா பா ஙி ஸ் நீ ;
அதி க த
; ·ரீ ஸ்ா, ஙி ப ஙி ஸ் ஙி ப ம ரி ஸ
ந்ரு ஸி

த்ருதம்

ப ஙி ஸ ரி மா ரீ ரி ம ப ம ரீ ;
இ மா ம்
ரீ ; பா மா ரீ ; ஸா ;
க ஸ்ய
ஙி ஸ்ா ஙி பா நீ ஸ்ா, ஙி ஸ்ா ;
வி தி தோ
ரி ம ப ஙி ஸ ஙி ப ம ரீ ; ஸா ;
ம் ஹாத்

மத்யம கால நடை

ரீ ; மா ப ம ரீ மா ரீ ஸா ; ரீ மா பா நீ பா மா பா
கந் யா ர் த்ரா யாம் க ர ச ர தி ஸ~
நீ ஸ்ா ·ரீ ; ஸ்ா ரீ மர் ·ரீ ·ரீ ஸ்ா நீ பா மா ரீ ப ம ரீ ரீ
தி ஷ் ண்யே ஹ ர் ஷ ம் ப ர ம ம க ம

நீ நீ பா நீ நீ பா மா ரீ
லோ ச நாம்
ஸா ·ரீ ·ரீ ஸ்ா நீ நீ பா நீ
த் கா ப யந்

பா மா ரீ ஸா ரீ மா பா ;
தா ம் ச ரா தாம்
ஸ்ா நீ பா மா ரீ மா பா நீ
ச க்ர பா ணே

ஸ்வரஜதி

ஸ்ா ; ; நீ ; ; ஙி ஙி நீ பா மா ரீ ; ஸா ரீ மா பா
ஸா நீ த தி ட தாம் ஸா ரீ மா த்
பா மா பா நீ ; ·ரீ ம்ா ; ; மா நீ ·ரீ ரீ ; மா
க தி மி நீ ரீ மா ; ; மா நீ ரீ ரீ மா

ப ஙி ஸ்ா நீ ஸ்ா ; ; ஸ்ா ·ரீ
க தி ன தாம் ஸா ரீ
; நீ ; ; நீ ரீ மா நீ
நீ நீ ரீ மா நீ

ம்ா ·ரீ ; ; ·ரீ ஸ்ா நீ நீ
மா ரீ த க த த
; மா ரீ ஸா ரீ மா பா நீ
த க த தி கி ண தொம்

மங்களம்

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

19931

வரலக்ஷ்மிப் போட்டி Govt. Regd.

பரிசு ரூபாய்... 7000
முதற் பரிசு ரூ.......... 4000
மற்ற பரிசுகள் ரூ.... 3000

மொத்தம் நான்கு பரிசுகள். மூன்று தவறுள்ள விடைகளுக்கும் பரிசு உண்டு.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது

★ பிரவேசக் கட்டணம்: கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★

சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு இரண்டு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

முடிவு தேதி 12—2—52

		விடைகள் 1	2
1	பரிமாறிய உணவை யெல்லாம் ஒருவர் இப்படியாக சாப்பிட்டுவிட்டால் அவருக்கு நல்ல பசி என்றுதானே அர்த்தம்?	அமுதம்	அமிதம்
2	நெடுநாளாக வறுமையில் வாடும் ஒருவனுக்கு நல்லவேலை ஒன்று கிடைத்தால் அது அவனுக்கு ஒரு இதாக இருக்கும்.	ஆறுதல்	மாறுதல்
3	ஒருவர் எப்போதும் இப்படியாகவே பேசினால் வெறுப்பு உண்டாகக் கூடும் நமக்கு.	புகார்	புதிர்
4	பணம் சேர்க்கும் பேராசை மனிதனை இதான வழியிலும் செல்லத் தூண்டுகிறது.	அசத்தியம்	அசாத்தியம்
5	இது பிடித்தவன் பேச்சில் அறிவும் அருத்தமும் எதிர்பார்க்க முடியுமா? (பித்தம்—பைத்தியம். மத்தம்—வெறி.)	பித்தம்	மத்தம்
6	இது முடிந்துவிட்டது என்றால் வெற்றிபெற்றது யார் என அறிய ஆவலாய் துடிப்போம் நாம்.	தேர்தல்	யுத்தம்
7	கோபாவேசத்தில் ஒருவர் கண்மூடித்தனமாகக் கூச்சலிடும்போது...சொன்னால் அவர் ஆத்திரம் இன்னும் அதிகரிக்கத்தானே செய்யும்?	எதிர்	பதில்
8	நள்ளிரவு ஆகியும் கணவன் வராமையால் மனைவி சாப்பிடாமல் காத்திருப்பது ..... யேயாகும்.	கடமை	மடமை
9	வலுச் சண்டைக்காரர்கள் ஒரு இது கிடைக்காதா என்று காத்திருப்பார்கள் பிறரை வம்புக்கிழுக்க.	தருணம்	காரணம்
10	டி. பி நோயாளிகளுக்கு மருந்தைவிட முக்கியமாக வேண்டியது நல்ல இதுதான்.	ஆகாயம்	ஆகாரம்
11	படித்தவர்களுங் கூட சிலர் இதை நம்புகிறார்கள் என்றால் வெறும் பேதமை தானே காரணம்?	சோசியம்	வசியம்
12	பிறர் எழுதிய கட்டுரையை இது செய்து தமதாக்கி வெளியிட்டுக் கொள்வதுண்டு சில போலி எழுத்தாளர்கள்	திருத்தல்	திருடல்
13	இந்த பொதுத் தேர்தலில் இது உள்ள அபேட்சகர்கள் வெற்றிபெற்றால்தான் நாட்டுக்கு நன்மை யுண்டாகும்.	திறமை	நேர்மை

மேலே உள்ள கட்டத்தில் பதின் மூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம், அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளா-வும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்ப வேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை காவேரி மாசி இதழில் வெளிவரும. நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :- { **மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி**
'ஸ்ரீவாஸ்'' பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 22-ன் சரியான விடை :—(1) யோக்கியம் (2) விளக்கம் (3) விவாதம் (4) கெடுதல் (5) தயக்கம் (6) சேமித்தல் (7) உழைப்பு 8) கபடம் (9) சத்தம் (10) வாடிக்கை (11) இரத்தல் (12) கெஞ்சல் (13) நன்மை. 2 1 1 1 2 1 2 1 1 1 1 2 2.

போட்டி—21-ன் பரிசு விவரம்

முதற் பரிசு தலைக்கு ரூ. 223—3—0 விதமும், இரண்டாவது பரிசு தலைக்கு ரூ. 22—0—0 விதமும் மூன்றாவது பரிசு தலைக்கு ரூ 3—0—0 விதமும், நான்காம பரிசு தலைக்கு ரூ 1—0—0 விதமும் பகிர்ந்து வழங்... துகைகள் 27, 29 & 31—12—51 தேதிகளில் அனுப்பப்பட்டன. மற்ற விவரங்கள் கா... பார்க்கவும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்.

எங்கும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷ...

. No. M. 4405 CAUVERI

Colour Press, Kumbakonam.